இது ஒரு மாதாந்த தகவல் மஞ்சரி a monthly information digest

ஏப்ரல் 2013 April | இதழ் 267 ISSUE

# தமிழர் தகவல்
# TAMILS' INFORMATION




லிபரல் நாயகன்

றொறன்ரோ மாணவர் உண்ணாவிரதம்




23 வது ஆண்டில் 23rd Year

Growing with the Community ESTD-1991

இது ஒரு மாதாந்த தகவல் மஞ்சரி a monthly information digest

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585

ஆரம்பம்
பெப்ரவரி 1991

P.O. Box - 3, Station F
Toronto, ON. M4Y 2L4,
Canada

தொலைபேசி
416 920 9250
தொலைநகல்
416 921 6576

மின்னஞ்சல்
tamilsinfo@sympatico.ca

தயாரிப்பு
ஈழத்தமிழர் தகவல் நிலையம்,
ரொறன்ரோ &
தமிழர் தகவல் ஆய்வுப் பிரிவு

வெளியீடு
அகிலன் அசோஷியேற்ஸ்

முதன்மை ஆசிரியர்
திரு எஸ். திருச்செல்வம்

இணை ஆசிரியர்
றஞ்சி திரு

உதவி ஆசிரியர் &
தயாரிப்பு முகாமையாளர்
சசி பத்மநாதன்

உதவி ஆசிரியர்கள்
குயின்ரஸ் துரைசிங்கம்
அனோஜினி குமாரதாசன்

பொது முகாமையாளர்
எஸ். ரி. சிங்கம்

விநியோக முகாமையாளர்
ஆர். ஆர். ராஜ்குமார்

பொதுமக்கள் தொடர்பு
இ. சிவலிங்கம்
எஸ். திருமுருகா
ப. சிவசுப்பிரமணியம்
பொன். சிவகுமாரன்
என். குமாரதாஸன்

தொழில்நுட்ப உதவி
ஹரன் கிறாஃப்

மாதாந்தம்
5000 பிரதிகள்

ஆண்டு மலர்
6000 பிரதிகள்

*ஆசிரியரிடமிருந்து* — ***From the Editor***

## காகித ஓடங்கள்!

ஈழத்தமிழர் பிரச்சனை புதிய வடிவமெடுத்து, வெவ்வேறு தளங்களில் பயணிக்க ஆரம்பித்துள்ளது.

ஜெனிவாத் தீர்மானம் சர்வதேசத்தின் பார்வையுடன் சம்பந்தப்பட்டது. தமிழக அரசின் தீர்மானம் தமிழக மாணவர்களின் எழுச்சியுடன் தொடர்புடையது.

ஜெனிவாத் தீர்மானம் காலத்தை இழுத்தடித்து, ஒரு முடிவைக் காணும் நாட்களை ஓட்டிச் செல்வது. தமிழக அரசுத் தீர்மானம் தமிழக மாணவர்களால் உடனடியாக பரீட்சித்துப் பார்த்து முடிவு சொல்லப்படுவது.

கருணாநிதியின் தி. மு. க. மத்திய அரசிலிருந்து வெளியேறியது தமிழர் பிரச்சனைக்குத் தீர்வு காண்பதற்கல்ல. தமிழக மாணவரிடமிருந்து தப்பவும், அடுத்த தேர்தலில் படுதோல்வியைச் சந்திப்பதைத் தவிர்க்கவுமே! ஆனால், எதிர்மாறாகிவிட்டது நிலைமை!

சந்தர்ப்பத்தைத் தமதாக்கிக்கொள்ள விரும்பும் ஜெயலலிதா, அடுத்தடுத்துப் பல அதிரடிகளை மேற்கொள்கிறார்.

கருணாநிதியின் தி.மு.கவுக்கு நாமம் போடுவது; மத்தியில் ஆட்சி புரியும் காங்கிரசுக்கு சூடு வைப்பது; ஈழத்தமிழரின் இடர் தீர்க்க வந்த தாயாக நம்பிக்கை பெறுவது; தமிழக மாணவரின் கோரிக்கைக்குச் செவிசாய்க்கும் முதல்வராக வரலாற்றில் இடம் பிடிப்பது என்று ஒரு கல்லில் ஒரு குலை மாங்காய்களை வீழ்த்த முனைகிறார்!

அதேசமயம், ஈழ உறவுகளுக்கு ஏதாவது உதவ முடியுமா என அவர் உண்மையாகவே நினைத்துத்தான் செயற்படுகின்றாரென்றால், அதற்கு அவருக்கு நன்றி கூறவேண்டும்.

இலங்கை மீது இந்தியா பொருளாதாரத் தடை விதிக்க வேண்டுமென ஏற்கனவே அவர் கொண்டு வந்த தீர்மானம் மத்திய அரசினால் ஏற்கப்படவில்லை.

இலங்கையின் போர்க்குற்றங்களுக்கு சர்வதேச விசாரணை நடத்தி குற்றவாளிகள் சர்வதேச நீதிமன்றில் நிறுத்தப்பட்டு தண்டனை வழங்கவேண்டும் என்பதும், தமிழருக்குத் தனிஈழம் அமைக்க உலகம் முழுவதும் வாழும் இலங்கைத் தமிழர்களிடையே பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டுமென்பதும் இவரால் இறுதியாக முன்மொழியப்பட்டு தமிழக சட்ட சபையில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.

ஆனால் இவை அனைத்தையும் ஒட்டுமொத்தமாக இந்திய வெளிவிவகார அமைச்சர் நிராகரித்து விட்டார். முதலமைச்சர் ஜெயலலிதா இனி என்ன செய்யப் போகிறார்?

தமிழக மாணவர் முன்வைத்திருக்கும் 'வரி செலுத்த மாட்டோம்; மத்திய அரசுக்கு ஒத்துழைப்பு வழங்க மாட்டோம்" என்ற அறிவித்தல்களைச் சட்ட சபையில் அடுத்த தீர்மானமாக நிறைவேற்றுவாரா!

அல்லது, தீர்மானங்கள் தீர்மானங்களாகவே இருந்து விட்டுப் போகட்டும் என்று ஜெனிவா போல அமைதி கொள்வாரா?

செயல்வலுவற்ற தீர்மானங்கள் எங்கு நிறைவேற்றப்பட்டாலும், அவை வெறும் காதித ஓடங்களே என்பது தமிழருக்குத் தெரியும்.

திரு எஸ். திருச்செல்வம்

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585

Established
February 1991

P.O. Box - 3, Station F
Toronto, ON. M4Y 2L4,
Canada

Tel: 416 920 9250
Fax: 416 921 6576

email
tamilsinfo@sympatico.ca

Produced by
Eelam Thamil Information Centre (ETHIC) of Toronto & Thamil Information Research Unit (THIRU)

Published by
Ahilan Associates

Editor in chief
Thiru S. Thiruchelvam

Associate Editor
Ranji Thiru

Assistant Editor and Production Manager
Sasi Pathmanathan

Assistant Editors
Quintus Thuraisingam
Anojini Kumaradasan

General Manager
S.T. Singam

Circulation Manager
R. R. Rajkumar

Public Relation
R. Sivalingam
S. Thirumuruga
P. Sivasubramaniam
Pon. Sivakumaran
N. Kumaradasan

Technical Support
Haran Graph

Monthly
5000 Copies

Annual
6000 Copies



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதிப்பாவனை கட்டணம் ஒன்ராறியோவில் விரைவில் வரவுள்ளது?

## Ontario Premier hints at new tolls and taxes to fix crumbling roads

ஒன்ராறியோ மாகாணத்திலுள்ள வீதிகளைப் பராமரிக்கவும், அவற்றைத் திருத்தம் செய்யவும் ஏற்படும் நிதி நெருக்கடியைத் தீர்ப்பதற்கு 'வீதிப்பாவனை கட்டண' முறையை அமுல் செய்வதற்கு ஒன்ராறியோ அரசாங்கம் ஆலோசித்துள்ளது. இந்தத் திட்டத்தை மாகாண முதலமைச்சர் கத்லீன் வின் சூசகமாக அறிவித்துள்ளார்.

Ontario needs a dedicated fund for roads and bridges, Premier Kathleen Wynne said last month as she hinted at new tolls or taxes to pay for badly needed repairs and upgrading.

"The discussion around new revenue tools has been spesific to transit at this point, but we need to find a way to create dedicated revenue streams for roads and bridges, i.e. a fund that would allow us to continue to work with municipalities to make sure those infracture needs are met, Premier Kathleen said.

மாகாணத்தின் பல வீதிகளும் பாலங்களும் பாரிய திருத்தங்களை எதிர்நோக்கியுள்ளன. இவைகளைச் செய்து முடிப்பதற்குப் பல மில்லியன் டாலர்கள் தேவைப்படுகின்றது.

இதற்கான நிதியைப் பெறுவதற்கு வீதிப்பாவனை கட்டணம் அல்லது வாகனப் பாவனை வரி ஆகியவற்றில் ஏதாவதொன்றை அறிமுகம் செய்ய நேரிடும் என்று முதலமைச்சர் கத்லீன் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் பிரதான பாதைகளில் வாகனங்களை ஓட்டுவதற்கு இவ்வகையான கட்டணங்கள் அறவிடப்பட்டு வருவது தெரிந்ததே.

இவ்வகையான வாகன தரிப்புக் கட்டணம் மற்றும் வரி விதிப்பு யோசனையை ரொறன்ரோ வணிக சபை சில வாரங்களுக்கு முன்னர் தனது ஆலோசனையாகத் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

# 'சன் சீ' கப்பலில் வந்த இலங்கையரின் அகதிமனு விசாரணைகள் தாமதம்!

## Out of 492 'Sun Sea' ship refugees 80 accepted and 82 rejected; 26 claims were withdrawn.

கனடாவிற்கு 2009ஆம் ஆண்டிலும் 2010ஆம் ஆண்டிலும் கப்பல்களில் அகதிகளாக வந்த இலங்கையர்களின் அகதிக் கோரிக்கை மனுக்கள் தொடர்பான பல செய்திகள் அண்மைக் காலங்களில் வெளிவந்துள்ளன.

கனடாவின் தேசிய பிரதான ஆங்கிலப் பத்திரிகையொன்றே பல முக்கிய தகவல்களைத் தொடர்ச்சியாக பிரசுரித்து வருகின்றது.

2009ஆம் ஆண்டில் வன்கூவர் வந்தடைந்த 'எம். வி. ஓசன் லேடி' (MV Ocean Lady) என்ற கப்பலில் 76 பேரும், 2010ஆம் ஆண்டில் வந்த 'எம். வி. சன் சீ' (MV Sun Sea) கப்பலில் 492 பேருமாக மொத்தம் 558 இலங்கையர்கள் இங்கு வந்து அகதியுரிமை கோரினர்.

'சன் சீ' கப்பலில் வந்தவர்களில் எண்பது பேர் மட்டுமே இதுவரை ஏற்கப்பட்டுள்ளதாகவும், 82 பேரின் மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதுதவிர, 26 கப்பல் அகதிகளை விடுதலைப் புலி உறுப்பினர்களாக இருந்தவர்கள் அல்லது கப்பலின் பணியாளர்கள் என்று தீர்மானித்து அவர்களை நாடு கடத்துமாறு குடிவரவு அகதிகள் சபை (Immigration Refugee Board) உத்தரவிட்டுள்ளது.

இக்கப்பலில் கனடா வந்து அகதிக் கோரிக்கை நிராகரிக்கப்பட்ட இருவரின் மனுக்களை மீளவிசாரணை நடத்துமாறு கனடிய உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இவர்களின் மனு ஏற்கனவே நடைபெற்ற விசாரணையில் நிராகரிக்கப்பட்டு நாடு கடத்தலுக்கு தீர்மானிக்கப்பட்டிருந்தனர். இதனை எதிர்த்து இவர்கள் மேன்முறையீடு செய்திருந்தனர்.

The Sun Sea arrived august 13, 2010 , carrying 380 men, 63 adult women and 49 children. As of last month 80 have been accepted as convention refugees, 82 have had their claims rejected and 23 claims were withdrawn. Deportation orders have been issued against about 25.

ஏற்கனவே அகதி மனு நிராகரிக்கப்பட்டு நாடுகடத்தலுக்கு உத்தரவிடப்பட்ட ஒருவரைக் கைது செய்வதற்குப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. கனடிய எல்லைச் சேவைகள் இந்தப் பிடியாணையை அறிவித்துள்ளது. குறிப்பட்ட ஆள் எங்காவது தலைமறைவாகவிருக்கலாம் அல்லது வேறுவழியால் நாட்டைவிட்டு வெளியே போயிருக்கலாம் என எல்லைச் சேவையினர் கருதுகின்றனர்.

'சன் சீ' கப்பலின் தலைவர் என்று சொல்லப்படுபவர், மற்றும் அதன் இயந்திரப் பகுதியில் பணியாற்றியவரென்ற இருவரை நாடு கடத்துவதற்கு எதிராகத் தொடரப்பட்ட மேன்முறையீடு மனுக்களை கனடிய மத்திய நீதிமன்றம் கடந்த மாதம் நிராகரித்தது.

கப்பல் பயணங்களின் பின்னால் நின்ற சூத்திரதாரி என்று சொல்லப்படும் இலங்கைத் தமிழர் ஒருவரை சர்வதேசப் பொலிசாரின் உதவியோடு கடந்த வருடம் மார்ச் மாதம் பிரான்சில் வைத்துக் கைது செய்ததாக அறிவிக்கப்படது.

கப்பல்களில் வந்தவர்கள் அனைவரும் இறுதி யுத்தத்தின்போது ஏதோவொரு வகையில் பாதிக்கப்பட்டவர்கள் என்பதால் அவர்களை ஏற்க வேண்டுமென்று அகதிகளுக்கான வழக்கறிஞர்களும் பல்வேறு அமைப்புகளும் கோரி வருகின்றன. இவர்களில் எவரையாவது திருப்பியனுப்பினால் அவர்களை இலங்கை அரசு சிறையில் தள்ளி சித்திரவதைக்கு உட்படுத்துமெனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



றஞ்சி திரு

# சின்னச் சின்ன தகவல்கள்

ஒன்ராறியோ அரசு சந்திக்கும் கடன் சுமையைக் குறைக்கும் ஒரு வழியாக மருத்துவ மனைகளில் நோயாளிகள் தங்கிச் சிகிச்சை பெறும் படுக்கைகளின் தொகை குறைக்கப்படவுள்ளது. இதுவே இப்போதைய முன்னுரிமை என்று கூறியுள்ளார் மாகாண சுகாதார அமைச்சர் டேவ் மத்தியுஸ். அதேசமயம், மருத்துவமனைகளின் வேறு சில சேவைகளையும் தனியாரிடம் கைமாற்ற ஆலோசிக்கப்படுகின்றது. முன்னைய கன்சர்வேடிவ் முதல்வர் மைக் ஹரிஸ் கடனைக் குறைப்பதற்காக சில வைத்தியசாலைகளை மூடியது தெரிந்ததே.

கனடாவில் இயங்கும் உணவகங்களில் விற்பனையாகும் உணவு வகைகளில் அதிகளவு உப்பு (சோடியம்) இருப்பது தெரியவந்துள்ளது. அமர்ந்திருந்து சாப்பிடும் உணவகங்கள், வீட்டுக்கு எடுத்துச் செல்லப்படும் வேகஉணவுச்சாலைகள் போன்றவற்றில் நடத்தப்பட்ட பரிசோதனையில் இது தெரியவந்தது. குடும்ப வைத்தியர்களால் பரிந்துரைக்கப்படும் உப்பின் அளவுக்கு மாறுபட்டதாக உணவுச் சாலைகளில் விற்பனையாகும் உணவுகளில் உப்பு இருப்பது உடல் நலத்துக்கு ஆபத்தானது.

கியுபெக் மாகாணத்திலுள்ள பல்கலைக் கழகங்களில் மாணவர் கல்விக் கட்டணத்தை ஆண்டொன்றுக்கு எழுபது டாலர்களால் அதிகரிக்க புதிய மாகாண அரசு ஆலோசித்து வருகின்றது. முன்னைய மாகாண அரசு கல்விக் கட்டணத்தை 325 டாலர்களால் அதிகரிக்க எத்தனித்து, மாணவர் எதிர்ப்பைச் சம்பாதித்தது. புதிய அரசு ஆலோசித்துள்ள 70 டாலர் அதிகரிப்பையும் மாணவர் சங்கங்கள் எதிர்த்துள்ளன. மொன்றியல் நகர பல்கலைக்கழக மாணவர்கள் எதிர்ப் பு நடவடிக்கைகளில் ஈடுபட ஆரம்பித்துள்ளனர்.

ரொறன்ரோ சமூக வீடமைப்புக் கூட்டுத்தாபனத்தில் இடம்பெறும் பல சீர்கேடுகளையும் கையூட்டல் விவகாரங்களையும் தேசிய ஊடகங்கள் அம்பலப்படுத்தி வருகின்றன. கூட்டுத்தாபன உயர் மட்டத்தில் இதன் காரணமாகப் பல மாற்றங்களை ஏற்படுத்தியபோதிலும், முறைகேடுகள் மற்றும் சீர்கேடுகள் தொடர்வதாக அறிவிக்கப்பட்டுள்ளது. கொலை, கொள்ளை, போதைப் பொருட்கள் விற்பனை போன்றவைகளின் முக்கியமானவர்கள் இங்கு வசிப்பதையும் பொலிஸ் நடவடிக்கைகள் அம்பலப்படுத்தியுள்ளது.

தொலைபேசிகள் ஊடாக பொதுமக்கள் அனுப்பும் text message எனப்படும் தகவல்களைச் செல்லிடத் தொலைபேசிச் சேவை வழங்குனர்களிடமிருந்து காவற்துறையினர் பெறுவதற்கு, நீதிமன்ற அனுமதி பெறவேண்டுமென்று கனடிய உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது. தொலைபேசிச் சம்பாஷணைகளை ரகசியமாக ஒட்டுக் கேட்பதற்கு எவ்வாறு அனுமதி பெறவேண்டுமோ அவ்வாறே இதற்கும் தேவையென்றும், சாதாரண தேடுதல் ஆணை இதற்குப் போதுமானதல்ல என்றும் தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது.

ரொறன்ரோ மாவட்ட பாடசாலைச் சபையின் கீழுள்ள உயர்நிலைப் பாடசாலைகளில் பணியாற்றும் இருநூற்றைம்பது ஆசிரியர்கள் விரைவில் வேலையிழக்கவுள்ளனர். வரவு செலவுத் திட்டத்தில் ஏற்பட்டுள்ள ஐம்பத்தைந்து மில்லியன் டாலர் பற்றாக்குறை காரணமாக இந்து நிலைமை ஏற்பட்டுள்ளது. உதவி அதிபர்கள், சிறப்புநிலை ஆசிரியர்கள், மாணவர் வழிகாட்டு ஆலோசகர்கள் உட்பட மேலும் பலர் வேலையிழக்கும் அதேசமயம், ஆரம்பப் பாடசாலைகளில் 63 ஆசிரியர்கள் புதுநியமனம் பெறவுள்ளனர்.

அடுத்த ஒரு தசாப்தத்துக்கு கனடிய வீடுகளின் விற்பனை விலைகளில் பெரும் அதிகரிப்பு ஏற்படும் வாய்ப்பில்லையென்று கனடிய வங்கியொன்று தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது. மறுபுறத்தில், முதன்முறையாக வீடு கொள்வனவு செய்வோரை ஊக்கப்படுத்தி உதவும் வகையில் வீட்டு அடமானக் கடன் விதிகளை மாற்றியமைக்குமாறு அடமானக் கடன் முகவர்கள் கனடிய அரசைக் கேட்டுள்ளனர். அடமானக் கடன் காலவெல்லையை 25 வருடங்களாக குறைக்கப்பட்டதால் புதிதாக வீடு வாங்குவோர் பல சவால்களை எதிர்கொள்கின்றனர்.

## வாகனங்களுக்கான 'ஸ்டிக்கர்' பெறுவதில் கெடுபிடிச் சட்டம் வருகிறது!

ஒன்ராறியோ மாகாணத்தின் வாகனக்காரர்கள் வருடாந்தம் 'லைசன்ஸ் பிளேட்' (ஸ்டிக்கர்) புதுப்பிக்கும் விடயத்தில் சில சிக்கல்களைச் சந்திக்கக் கூடியதான புதிய சட்டமொன்று ஒன்ராறியோ மாகாண அரசினால் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

இதன் பிரகாரம், லைசன்ஸ் பிளேட் புதுப்பிப்பதற்கு நேரடி முன்னையதாகவுள்ள ஏழு வருடங்களுக்குள் போக்குவரத்து விதிகளை மீறிய ஏதாவது குற்றச்சாட்டில் 'டிக்கட்' பெற்று தண்டப் பணத்தைச் செலுத்தாதிருந்தால், அவர்களுக்கு புதிய 'ஸ்டிக்கர்' வழங்கப்பட மாட்டாது. தற்போதைய சட்டத்தின்படி, வாகன தரிப்புக் குற்றம் தொடர்பான கட்டணம், 407 கட்டணம் செலுத்தும் பாதைக்கான கட்டணம், காசோலைகள் திரும்பியதற்கான கட்டணம், சிவப்பு விளக்குகளில் ஓடிய குற்றத்துக்கான கட்டணம் செலுத்தாதவர்களுக்கு மட்டும் 'ஸ்டிக்கர்' மறுக்கப்படுகின்றது.

புதிய சட்டம் அமுலுக்குவரும்போது, வேகமாக ஓடியது, தவறான வகையில் ஒழுங்கைகளில் மாறியது, சட்டத்துக்குப் புறம்பாக வாகனத்தைத் திரும்பியது, காப்புறுதியின்றி வாகனம் செலுத்தியமை, கவனயீனமாக வாகனம் ஓட்டியமை போன்றவைகளுக்கான தண்டப் பணம் நிலுவையிலுள்ளவர்களுக்கும் 'ஸ்டிக்கர்' வழங்கப்பட மாட்டாது. மேற்சொல்லப்பட்ட குற்றச்சாட்டுகளின் பேரில், 669 மில்லியன் டாலர்கள் தற்போது நிலுவையிலிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. வருடமொன்றுக்கு சுமார் 100 மில்லியன் டாலர்களை இங்குள்ள நகரசபைகள் இதனால் இழந்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

## கனடியப் பிரஜாவுரிமை கட்டணம் அதிகரிக்கிறது

கனடிய மத்திய அரசின் புதிய வரவு செலவுத் திட்டம் காரணமாக பல கட்டணங்களில் உயர்வு ஏற்படுமெனத் தெரிகின்றது. முக்கியமாக, கனடியப் பிரஜாவுரிமைக்கான கட்டணம் இரு மடங்காக அதிகரிக்கவுள்ளது. தற்போது வளர்ந்த ஒருவருக்கான கட்டணம் 200 டாலர்கள். இது, விரைவில் 400 டாலர்களாக உயரும். கனடாவுக்கு வருகை தருவதற்கான விசா விண்ணப்பத்துக்கான கட்டணமும் உயருமெனத் தெரிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கனடிய லிபரல் தலைவர் போட்டி: ரூடோவின் குடும்ப வாரிசு முன்னணி



கனடிய லிபரல் கட்சியின் புதிய தலைவரைத் தெரிவதற்கான தேர்தல் இந்த மாதம் 14ஆம் திகதி நடைபெறவுள்ளது. கனடாவின் பதினைந்தாவது பிரதமரான பியர் ரூடோவின் மூத்த புதல்வரும் இளம் அரசியல்வாதியுமான ஜஸ்ரின் ரூடோ (41 வயது) மிக இலகுவாகப் புதிய தலைவராகத் தெரிவாகும் வாய்ப்பு காணப்படுகிறது.

இவரை எதிர்த்துப் போட்டியிட்டவர்களில் இருவர் (மார்க் கார்னோ, டேவிட் பேர்ச்சி) தேர்தலிலிருந்து விலகிவிட்ட நிலையில், ஜஸ்டினுக்கான வெற்றி வாய்ப்பு அதிகரித்துள்ளது. கடந்த மாதம் 23ஆம் திகதி மொன்றியலில் நடைபெற்ற இறுதியான அபேட்சகர் விவாதம் வரையான அனைத்திலும் இவரே முன்னணியில் திகழ்ந்தது குறிப்பிடத்தக்கது.

1993 நவம்பரிலிருந்து 2003 டிசம்பர் வரை பிரதமர் பதவி வகித்த ஜோன் கிரட்ஷியனுக்குப் பின்னர், ஆளுமை நிரம்பிய ஒருவர் லிபரல் தலைமைப் பதவியை வகிக்காததால், கடந்த பத்து வருடங்களில் போல் மார்ட்டின், ஸ்ரிபன் டியோன், மைக்கல் இக்னேஷியப், பொப் றே (இடைக்காலத் தலைவர்) ஆகிய நால்வர் தலைவர்களாகிய துர்பாக்கியம் கட்சிக்கு ஏற்பட்டது. 2006க்குப் பின்னர் கீழ்நோக்கிச் சென்ற லிபரல் கட்சி, கடந்த தேர்தலில் உத்தியோகபூர்வ எதிர்க்கட்சி அந்தஸ்தையும் இழந்தது.

2005ல் திருமணமான ஜஸ்ரின் ரூடொவுக்கு இரண்டு பிள்ளைகள் உள்ளனர். தற்போதைய கட்சித் தலைவர் தேர்தலில் கூடுதலானவர்களை உறுப்பினர்களாக்கி, ஒரு மில்லியன் டாலர்களைச் சேகரித்து இவர் சாதனை புரிந்துள்ளார்

புதிய தலைவராக ஜஸ்ரின் தெரிவாகும் பட்சத்தில், அடுத்த தேர்தலில் லிபரலை வெற்றிக் குறிக்கு எடுத்துச் சென்று புதிய பிரதமராவாரென்று பல்வேறு கருத்துக் கணிப்புகளும் தெரிவிக்கின்றன. இதனையே நம்பியிருக்கும் கட்சிப் பிரமுகர்கள் ஜஸ்ரினைத் தங்களின் 'நட்சத்திர நாயகனாக' பார்க்கின்றனர்.

ஆசிய நாடுகளின் அரசியலைப் போன்று கனடாவிலும் குடும்ப வாரிசு உருவாகின்றதாகச் சொல்பவர்களும் இல்லாமலல்லை. எதுவானாலும், 2013 ஏப்ரல் 14 என்பது கனடிய அரசியலில் ஒரு 'புள்ளி' நாளாவது தவிர்க்க முடியாததாகி விட்டது.

## அம்பலத்துக்கு வந்துள்ள அரண்மனை ரகசியங்கள்





இரண்டாவது எலிசபெத் மகாராணியாரின் (87 வயது) பக்கிங்ஹம் அரண்மனை தொடர்பான பல திடுக்கிடும் விடயங்கள் லண்டன் ஊடகங்களில் 'கிசுகிசு' செய்திகளாக வந்து கொண்டிருக்கின்றன. தாம் முடிசூடிய அறுபதாண்டு பூர்த்தியை உலகளாவிய ரீதியில் கடந்த ஒரு வருடமாகக் கொண்டாடிய மகாராணி, கடந்த மாதம் திடீரென வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

அரண்மனை நடைமுறைகளுக்கமைய இவரது நோய் விபரம் வெளியிடப்படவில்லையாயினும், 'கடும்' சுகவீனமடைந்துள்ள இவரின் சகல நிகழ்ச்சிகளும் ரத்துச் செய்யப்படுகின்றன. தமது பேரப் பிள்ளையின் (வில்லியம் மனைவி கேற் கர்ப்பமுற்றிருப்பது தெரிந்ததே) பிரசவத்தைப் பார்க்க மகாராணி இருக்கமாட்டார் என்று ஒரு ஊடகம் எழுதியுள்ளது.

இதற்கிடையில், மகாராணியின் இடத்துக்கு முடிசூடப்போவது யார் என்ற 'குசினிச் சண்டை' அரண்மனையில் ஆரம்பமாகிவிட்டதாம். தமது 33 வருடக் காதலனும், ஒன்பதாண்டு காலக் கணவருமான சார்ள்ஸ் முடிசூடப்பட வேண்டுமெனக் கமிலா விரும்புகின்றார், ஆனால் மகாராணியோ சார்ள்ஸின் மூத்த புதல்வர் வில்லியம் முடிசூடுவதை விரும்புகின்றார். இதனை அடியோடு வெறுக்கும் கமிலா, இப்போது வில்லியம்-கேற் தம்பதிகளுக்கு எதிராக செயற்பட ஆரம்பித்துள்ளார்.

மகாராணியை கடமைக்காகவேனும் ஒரு தடவை சென்று நலம் விசாரிக்க மறுத்துவரும் கமிலா, இந்தப் பிரச்சனையால் கணவர் சார்ள்ஸைத் தாக்கியதாகவும், தொடர்ந்து மதுபோதையில் இருப்பதாகவும் மற்றொரு ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

மகாராணியின் முடிசூட்டு வைரவிழா நினைவாகக் கனடிய அரசு இங்குள்ள அறுபதாயிரம் பேருக்கு பதக்கங்களை வழங்கியதும், இதனையொட்டிய பல விமர்சனங்கள் கனடிய மைய ஊடகங்களில் வெளிவந்ததும் குறிப்பிடத்தக்கது.

## றொறன்ரோ மேயர் தேர்தலில் ஜோன் ரோறியும், ஒலிவியா சோவும்!




கனடாவின் முக்கிய அரசியற் புள்ளியாகப் பலராலும் இன்று பேசப்படுபவர் றொறன்ரோ மேயர் றொப் ஃபோர்ட். அனேகமாக தினசரி இங்குள்ள ஊடகங்களில் இவரது பெயர் அடிபடுகின்றது. அதேசமயம், இவரது செல்வாக்கு முன்னரிலும் பார்க்க இப்போது அதிகரித்து வருவதாக ஒரு ஊடகத்தின் கருத்துக் கணிப்பு சுட்டுகின்றது.

2014ல் நடைபெறவுள்ள றொறன்ரோ மேயர் தேர்தலிலும் தாம் போட்டியிடப் போவதாக றொப் ஃபோர்ட் இப்போதே அறிவித்துள்ளார். இத்தேர்தலில் தாமும் போட்டியிட யோசித்து வருவதாக ஒன்ராறியோ கன்சர்வேடிவ் கட்சியின் முன்னாள் தலைவர் ஜோன் ரோறி அறிவித்துள்ளார். ஜோன் ரோறி முன்னர் டேவிட் மில்லருடன் மேயர் தேர்தலில் போட்டியிட்டு தோல்வி கண்டவர்.

றொப் ஃபோர்ட்டும், ஜோன் ரோறியும் ஒரே கட்சியைச் சேர்ந்தவர்களாதலால், கன்சர்வேடிவ் ஆதரவு வாக்குகள் பிளவுபடும் சாத்தியமுண்டு. இதனைச் தமக்குச் சாதகமாக்க விரும்பும் ஒலிவியா சோ, தாமும் மேயர் தேர்தலில் போட்டியிடும் விருப்பத்தைப் பகிரங்கப்படுத்தியுள்ளார். ஸ்படைனா தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினராகவிருக்கும் ஒலிவியா, என் டி. பி தலைவராகவிருந்த ஜாக் லேட்டனின் மனைவியாவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Tamil Nadu Assembly resolves for UN referendum on separate Eelam



In a historic move, the Tamil Nadu State Assembly on Wednesday, March 27th unanimously passed a resolution for bringing in arrangements at the level of the UN Security Council to conduct a referendum among Eezham Tamils in the island as well as in the diaspora on the question of Separate Eelam. In addition, the resolution passed at the Tamil Nadu Assembly demanded the Government of India to stop calling Sri Lanka a friendly country. The resolution also included the earlier demands ie., Independent International Investigations on Genocide and War Crimes as well as imposition of economic sanctions on Sri Lanka. The resolution, unanimously passed, was moved by Tamil Nadu Chief Minister Ms Jayalalithaa.

Passing the resolution, Chief Minister Ms Jayalalithaa also urged the students of Tamil Nadu to end their current agitation and to return to studies, with the hope of winning their aspirations in the near future.

Following is the full text of the resolution.

**தீர்மானம்**

"தமிழன் யாருக்கும் தாழாமல் – யாரையும் தாழ்த்தாமல், எவரையும் சுரண்டாமல் – எவராலும் சுரண்டப்படாமல், எவருக்கும் எசமானனாக இல்லாமல் – உலகில் எவருக்கும் அடிமையாக இல்லாமல் நல்வாழ்வு வாழ வேண்டும் என்பதே எங்களது தலையாய கொள்கை" என்றார் பேரறிஞர் அண்ணா. பேரறிஞர் அண்ணா அவர்களின் பொன்மொழிக்கேற்ப, இலங்கை வாழ் தமிழர்களுக்கு நல்வாழ்வு ஏற்படுத்தித் தர வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு,

- இலங்கை நாட்டை "நட்பு நாடு" என்று சொல்வதை இந்திய அரசு நிறுத்திக் கொள்ள வேண்டும் என்றும்;
- இலங்கை இனப் போரின் போது நிகழ்த்தப்பட்ட இனப் படுகொலை மற்றும் போர்க் குற்றங்கள் குறித்து சுதந்திரமான, நியாயமான சர்வதேச புலன் விசாரணை நடத்திடவும்; இந்த சர்வதேச விசாரணையின் அடிப்படையில், போர்க்குற்றம் நிகழ்த்தியவர்கள் சர்வதேச நீதிமன்றம் முன்பு நிறுத்தப்பட்டு அவர்களுக்கு உரிய தண்டனை பெற்றுத் தந்திடவும்; தமிழர்கள் மீதான அடக்குமுறையை இலங்கை அரசு நிறுத்தும் வரை இலங்கை நாட்டின் மீது பொருளாதாரத் தடையை விதித்திடவும்; ஈழத் தமிழர்களின் எதிர்கால நலனைக் கருத்தில் கொண்டு "தனி ஈழம்" குறித்து இலங்கை வாழ் தமிழர்களிடமும், இலங்கையிலிருந்து இடம்பெயர்ந்து பிற நாடுகளில் வாழும் தமிழர்களிடமும் பொது வாக்கெடுப்பு நடத்திடவும் ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புக் குழுவில் தீர்மானத்தினை கொண்டு வர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும்;

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை இந்திய அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது."

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னால் முன்மொழியப்பட்ட இந்தத் தீர்மானத்தினை இந்த மாமன்றம் ஒரு மனதாக நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு,

இலங்கைத் தமிழர்களின் பால் எனது தலைமையிலான தமிழக அரசு எடுத்து வரும் ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளைக் கருத்தில் கொண்டும், நமது கோரிக்கைகள் வென்றெடுக்கப்படும் நாள் விரைவில் மலர இருக்கிறது என்பதை மனதில் வைத்தும், போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தமிழ்நாட்டின் எதிர்கால நம்பிக்கை நட்சத்திரங்களாகிய மாணவ–மாணவியர் தங்களுடைய அறப் போராட்டத்தைக் கைவிட்டு, கல்வியில் தொடர்ந்து கவனம் செலுத்தி, பெற்றோருக்கும், தமிழ்நாட்டிற்கும் பெருமை சேர்க்க வேண்டும் என்று இந்த மாமன்றத்தின் மூலமாக கேட்டுக் கொண்டு, எனது இந்த வேண்டுகோளிற்கு அனைத்துக் கட்சிகளைச் சார்ந்தவர்களும் ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக் கொண்டு அமர்கிறேன்.

*******

# Transitional administration to safeguard Tamil Nation



Gajendrakumar Ponnambalam, the president of Tamil National Peoples' Front (TNPF), who addressed the UPR Review session in Geneva on March 15, 2013, has called for an internationally supervised transitional administration of the Tamil homeland in the North and East of the island of Sri Lanka. Noting that the genuine grievances and aspirations of Eezham Tamils are reduced to "mere individual human rights problems" rather than the "destruction of their Nation", Mr. Gajendrakumar, who represented the NGO, International Education Development (IED), at the UN forum called for independent international investigation on Sri Lanka. In a carefully drafted statement, he further said that the UPR is "de-Tamilized" to the point that, anyone not fully cognizant of the facts of the 65 year long Tamil-Sinhala conflict would not even know who is to be a party to "reconciliation."

Following is the full text of the presentation made by Gajendrakumar Ponnambalam at the UPR Review at Geneva under item 6, General Debate, 39th Meeting 22nd Regular Session Human Rights Council:International Educational Development has followed the progress of the UPR since its inception. Now, in its second cycle we note a decided failure of some States to implement the recommendations of the first review - as is glaringly apparent in the second review of Sri Lanka.

The review of Sri Lanka also demonstrates the paucity of opportunities for a people, such as the Tamil people, who identify as a collective political entity – that is as a Nation - based on historical independence, ethnicity, language and customs to be heard and taken into account. Their genuine grievances and aspirations are

(Contd. on page 20)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அ. முத்துலிங்கம்

# இரவு யானைகள்

பல வருடங்களுக்கு முன்னர் கென்யாவில் நான் வசித்து வந்த காலத்தில் அங்கே உள்ள 'rhNth' (Tsavo) தேசிய வன காப்பகத்துக்கு ஒருமுறை போயிருக்கிறேன். கென்யாவில் உள்ள ஆகப் பெரிய வனகாப்பகம் அதுதான். 22,000 சதுர கி.மீட்டர்கள் பரப்பளவு கொண்டது. எங்கள் விடுதியை நோக்கி காட்டுக்குள்ளால் பயணித்துக்கொண்டே இருந்தோம். இருள் வேகமாக வந்தது. எங்கள் சாரதி வழியை தவற விட்டுவிட்டார். பகல் முடிவதற்குள் நாங்கள் தங்கும் விடுதியை அடைய வேண்டும். அல்லாவிட்டால் காட்டு விலங்குகளின் மத்தியில் அகப்பட்டு விடுதியை கண்டுபிடிக்கும் சங்கடத்திலிருந்து விடுவிக்கப்பட்டிருப்போம். 'குழந்தைகளையும் மூடர்களையும் கடவுள் காப்பாற்றுவார்' என்பது ஆப்பிரிக்கப் பழமொழி. அன்று எந்த வகைப்பாட்டின் கீழ் நாங்கள் காப்பாற்றப்பட்டோமோ தெரியாது.

விடுதி பெரிய பெரிய தூண்களுக்குமேல் நின்றது. வனவிலங்குகள் தங்கள் விருப்பப்படி உலவுவதற்கான வசதி என்று காப்பாளர் சொன்னார். ஒரு பக்கத்து காட்டிலிருந்து மறுபக்கத்துக்கு யானைக்கூட்டங்கள் விடுதிக்கு கீழால் போவதைக் காணலாம். இங்கேதான் நான் சிவப்பு யானைகளைக் கண்டேன். பூச்சிகளின் தொல்லை தாங்காமல் யானைகள் சிவப்பு மண்ணில் குளித்து நிரந்தர சிவப்பாகவே மாறிவிட்டன. தாய் யானைகள் வேகமாக முன்னே போக யானைக் கன்றுகள் ஓடி ஓடி தாயை பிடிக்க முயன்று தோற்றுப்போகும் காட்சியை நாள்முழுக்க பார்த்துக்கொண்டே இருக்கலாம். அப்பொழுதுதான் ஒரு ஆங்கிலப் பெண்மணியை பற்றி கேள்விப்பட்டேன். காயம்பட்ட, அல்லது தாயை இழந்த வனவிலங்குகளை காப்பாற்றி அவற்றை மீண்டும் வனத்துக்குள் சேர்ப்பிக்கும் பணியை அவர் செய்தார். அவருடைய கணவர் வன அதிகாரியாக கடமையாற்றியதால் அந்த வேலையை பெண் சரிவர நிறைவேற்றக் கூடியதாக இருந்தது.

அவர் பெயர் டாஃப்னி ஷெல்ட்ரிக். 1934ல் பிறந்தவர். 50 வருடங்களுக்கு மேலாக வனவிலங்குகளுக்காகவே வாழ்ந்தார் குறிப்பாக யானைக் கன்றுகள். கென்யாவில் வருடா வருடம் யானைகள் அவைகளுடைய தந்தங்களுக்காக கொல்லப்பட்டன. 1990 ல் தந்தங்கள் தடைசெய்யப்பட்டன. அப்படியிருந்தும் தொடர்ந்து யானைகளை சட்டவிரோதமாக அழித்தனர். லாபம் தரும் இந்த வேட்டையில் பல கும்பல்கள் ஈடுபட்டிருந்ததால் அவர்களால் அந்த தொழிலை விடமுடியவில்லை. ஒரு யானை தந்தத்தில் கிடைக்கும் பணம் ஒரு குடும்பத்துக்கு ஒரு வருடத்துக்கு போதுமானது. ஆகையால் யானைகளைக் காப்பதற்கென்று ஏற்பட்ட சட்டங்களை ஒருவரும் சட்டை செய்யவில்லை. திருடர்கள் மாதத்துக்கு குறைந்தது 50 யானைகளைக் கொன்றனர். அப்படியானால் வருடத்துக்கு 600 யானைகள் அழிந்தன. புதுச் சட்டம் வந்த நாளிலிருந்து கணக்குப் பார்த்தால் ஆயிரக்கணக்கான யானைகள் கொல்லப்பட்டிருந்தன. அப்படியிருந்தும் காட்டு யானைகள் இன்றும் கென்யாவில் எஞ்சியிருப்பது ஆச்சரியம்தான்.

ஆப்பிரிக்க யானைகளில் பெண் யானைகளுக்கும் தந்தம் உண்டு. தாய் யானைகள் கொல்லப்படும்போது தனித்து விடப்பட்ட கன்றுகள் சிலநாட்களில் செத்துப்போகும். இந்தக் கொடுமைகளைக் கண்ணுற்ற டாஃப்னி யானைக் கன்றுகள் காப்பகம் ஒன்றை ஆரம்பித்தார். கன்றுகள் பெரிதாக வளர்ந்து 3,4 வயதை எட்டியதும் அவற்றை மறுபடியும் ஒரு யானைக் கூட்டத்துடன் சேர்த்துவிடுவார். ஆனால் பிரச்சினை ஒன்று இருந்தது. பால்குடி மாறாத யானைக் கன்றுகளை எவ்வளவுதான் கவனமாகப் பராமரித்தாலும், எத்தனை போத்தல் பசுப்பால் கொடுத்தாலும் அவை இறந்துபோயின. பசுப்பால் அவற்றுக்கு ஒத்துக்கொள்ளவில்லை. பலவித சோதனைகள் நடத்தியபின்னர் டாஃப்னி ஒரு புதுவிதமான பாலை கண்டுபிடித்தார். தேங்காய்ப்பால். ஒருநாள் தேங்காயை உடைத்து அதைப் பாலாக பிழிந்து பருக்கினார். கன்று தப்பிவிட்டது. அன்றிலிருந்து யானைக் கன்றுகளுக்கு உணவு தேங்காய்ப்பால்தான்.

1972ல் அவரிடம் ஒரு யானைக் கன்று அனாதையாக வந்து சேர்ந்தது. அதற்கு எலெனோர் என்று பெயர் சூட்டி வளர்த்தார். வயது வந்ததும் அதை காட்டு யானைகளுடன் சேர்த்துவிட்டார். 22 வருடங்கள் கழிந்துவிட்டன. ஒரு நாள் காலை 1994ல் ஒரு யானைக் கூட்டம் அவரிடம் வந்தது. அந்தக் கூட்டத்தில் எலெனோர் இருப்பதாக அவருடைய உள்ளுணர்வு சொன்னது. 'எலெனோர்' என்று குரல் கொடுத்தார். அந்தப் பெரிய கூட்டத்திலிருந்து ஒரு யானை மட்டும் அவரை நோக்கி நடந்து வந்தது. இவர் கிட்டப் போய் அதை தடவிக் கொடுத்தார். எதிர்பாராத விதமாக அது தும்பிக்கையால் அவரைச் சுற்றி தூக்கி சுழற்றி வீசியது. 20 யார் தூரம்போய் விழுந்தார். யானை அப்பொழுதும் சீற்றம் தாங்காமல் அவரை நோக்கி அடியெடுத்து வைத்தது. எலும்புகள் முறிந்த நிலையில் தரையில் கிடந்தபடியே டாஃப்னி யானையை உற்று நோக்கினார். அதன் முகம் தடிப்பாக இல்லை; கண்கள் நிறமற்றவை. அது எலெனோர் அல்ல என்பது மூளையில் பட்டது. கண்களை மூடி கடவுளிடம் வேண்டினார். 'இந்த விபத்தில் தப்பி உயிர் பிழைத்தால் நான் என் வாழ்நாள் சரித்திரத்தை எழுதுவேன்.' இப்படியாக ஒரு சங்கல்பம் செய்தார்.

யானை அவருக்கு சமீபமாக அணுகியது. ஒரு யானைக் கன்றை தூக்குவதுபோல மெதுவாக தடவி அவரை தூக்க முயன்றது. டாஃப்னி அதிகாரமான குரலில் 'நிறுத்து. திரும்பிப் போ' என்று சத்தமாகச் சொன்னார். யானை ஏதோ புரிந்ததுபோல அமைதியாக அவரை விட்டு பின்வாங்கிப் போனது. டாஃப்னியுடைய சங்கல்பம் இப்போது நிறைவேறியிருக்கிறது. அவர் வெளியிட்ட புத்தகம் அவருடைய சுயசரிதைதான். ஆனால் யானைகளுடைய கதையும்கூட. புத்தகத்தின் பெயர் Love Life and Elephants. டாஃப்னிக்கு இப்போது 79 வயதாகிறது. அவர் நடத்திவரும் யானைக் கன்று அனாதை ஆச்சிரமத்தில் இதுவரை 130க்கு அதிகமான கன்றுகளை காப்பாற்றி அவற்றை காட்டிலே சுதந்திரமாக விட்டிருக்கிறார். டாஃப்னியுடைய சேவையை பாராட்டி இங்கிலாந்தின் மகாராணி எலிஸபெத் அவருக்கு OBE பட்டம் வழங்கி கௌரவித்திருக்கிறார்.

சில வருடங்களுக்கு முன்னர் டைம் பத்திரிகை அவரை பேட்டி கண்டது. 'யானைகளும் மனிதர்களைப்போல இறந்துபோன யானைகளுக்காக துக்கம் கொண்டாடுகின்றனவா?'

→

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'சிந்தனைப் பூக்கள்' எஸ். பத்மநாதன்

# மனமே! நலமா? 30

இயற்கைப் பொருட்கள் காலத்தாலும் இடத்தாலும் மாறுபடா நிலைத்த தன்மை உடையனவாக விளங்குகின்றன. அவற்றைப் புலனால் அறிவதற்கு மன ஆற்றல் தேவை. தனித்த புலனறிவால் கால இட உணர்வுகளை தர இயலாது. காலமும் இடமும் இருவகை வடிவங்கள். காட்சிகள் அனைத்தும் விளங்க கூடியன. சிந்தித்தாலும் சிந்திக்காது விட்டாலும் காட்சியின் மூலம் ஒவ்வொரு மனிதனாலும் அறியக்கூடியது இதுவாகும்.

மனத்தினால் அறியப்படுபவை புலன்களுக்கு தெரிய வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. ஆனால், புலன்களுக்கு புலப்படாத உண்மைகளை எடுத்துக் கூறும்போது நிதானமாக செயல்பட வேண்டும். காற்று மனிதனின் புலனுக்கு புலப்படாதது. ஆனால், மனம் உணர்கிறது. எனவே, மனம் உணர்ந்தவற்றை கூறும்போது புலனறிவு சார்ந்தவர்களுக்கு விளங்கிக் கொள்ளுமாறு எடுத்துக் கூற வேண்டும். பொருட்களின் இயல்புகளும் பண்புகளும் மனதிற்கு நன்கு விளக்கப்பட வேண்டும். உண்மைகள் மனதிற்கு புலப்படும்போதுதான் செயலாற்றல் திறன் வளர்கிறது.

மனமே ஒரு பொருளைக் கண்டு அப்பொருளின் இயக்கத்திற்கான காரண காரியங்களை அறிந்து கூறுகிறது. எனவே, செயலாற்றும் திறனை வளர்க்க மனதிற்குப் பயிற்சி அளிக்க வேண்டும். எந்த ஒரு நிகழ்ச்சியும் காரணமின்றி நிகழாது. காரணமில்லாமல் எப்பொருளின் இயக்கங்களும் நடைபெறா. எனவே, மனதிற்கு செயலாற்றும் திறனை வளர்ப்பது தன்னிச்சையான இயக்கங்களே... ஒரு பொருளைக் காணும்போது, அது என்ன பொருள் என்பதும், ஏதேனும் குறிப்பிட்ட இயல்பு அதற்கு உண்டு என்பதும், பிற பொருட்களோடு விளக்கி காட்டுவதும் மனமேயாகும். சாதாரண அறிஞனுக்கு புலப்படாத உண்மைகள் ஆராய்ச்சியாளனுக்கு புலப்படுவது இந்த மனதின் வலிமையாலேதான்.

புலன் உணர்கிறது; மனம் செயல் புரிகிறது. அனுபவங்கள் ஏதேச்சையாக உண்மைகளைக் கண்டு விளக்குகின்றன. புலன், மனம், சிந்தனை ஆகிய மூன்றும் இணைந்ததே "புலனுலகக் கொள்கை" என்று மிகப்பெரிய சிந்தனையாளர் இமானுவல் காள்ட் குறிப்பிடுகிறார். இதனை விரிவாக்க புலனறிவுக் கொள்கை, செயலாற்றுக் கொள்கை, சிந்தனா சக்திக் கொள்கை ஆகிய முப்பிரிவுகள் பயன்படுகின்றன. இவர் கருத்தியற் கொள்கை (Idealism) பொருள் முதல்வாதம் (Materialism) பகுத்தறிவுக் கொள்கை மனக் கிளர்ச்சிக் கொள்கை (Emotionalism) என்பவற்றை இணைத்து ஆராய்ந்த அறிஞர்.

ஸ்கொட்லாந்து தத்துவமேதை டேவிட் ஹியூம் "எந்த ஒரு மனிதரும் சிந்தனைகளுடனோ அல்லது கருத்துக்களுடனோ இவ்வுலகில் பிறப்பதில்லை. ஒரு குழந்தையின் மூளை எதுவுமே எழுதப்படாத காகிதம் போன்றது. அக்குழந்தையை சந்திப்போர் ஒவ்வொன்றைப் பற்றியும் சிந்திப்பதனையும், அடையாளங்களை விட்டுச் செல்கின்றனர். தொடர்ந்து பதியப்படும் காந்தம் நிரம்பி வழிகிறது" என்கிறார். அரிஸ்டாட்டில் கூட "எதுவெல்லாம் மனதில் பதிவாகிறதோ அதுவெல்லாம் வெளிப்படுத்தப்படுகிறது" என குறிப்பிடுகிறார். எமது மூளையின் காகிதமோ எழுதப்பட்டு, அழிக்கப்பட்டு, வெட்டுப்பட்டு, சிதைக்கப்பட்டு எவ்வளவோ அவஸ்தைகளைப் பெற்றிருக்க கூடும்.

மனத்திற்கு நல்ல பயிற்சி அளிப்போம்.

மீண்டும் சந்திப்பேன்.●

## இரவு யானைகள்...

'நான் 50 வருடங்களாக யானைகளுடன் வாழ்ந்து வருகிறேன். மனிதர்கள் போலவே இறந்துபோன யானைச் சடலத்தை நோக்கி மற்ற யானைகள் தூர இடங்களிருந்து வந்து முன்னே நின்று மௌனமாக அஞ்சலி செய்கின்றன. வருடக் கணக்காக அவை துக்கம் அனுட்டிப்பதை காணலாம். யானை மரித்த இடத்தில் தடிகளையும் தழைகளையும் பரப்பி அவை மரியாதை செய்கின்றன.'

'யானைகள் பற்றி மனிதன் என்ன தவறாக நினைக்கிறான்?'

'அவைகளுடைய புத்திக்கூர்மை பற்றி. அவை நம்பமுடியாத அளவுக்கு புத்தியானவை. பெரிய தந்தங்கள் கொண்ட யானைகளுக்கு மனிதன் தந்தங்களுக்காகவே தங்களை கொல்கிறான் என்பது தெரிந்திருக்கிறது. தங்கள் தந்தங்களை அவை மரங்களிலும் செடிகளிலும் மறைத்து வாழ்கின்றன. அவை பகலில் வெளிவருவதில்லை. இரவிலே உணவு தேடி இரவுப் பிராணிகளாகவே மாறிவிட்டன.' யானைகள் அழியும் வேகத்தில் அடுத்து வரும் சந்ததியினருக்கு அவை பார்க்கக் கிடைக்குமோ என்பதுகூட சந்தேகமாயிருக்கிறது. இரவுப் பிராணிக-ளான கழுதைப்புலி, சிறுத்தை, சிங்கமெல்லாம் வேட்டையாடித் தின்று தொல்லையின்றி வாழ்கின்றன. ஒரு தீங்கும் இழைக்காத யானை ஏன் இந்த உலகிலிருந்து அழியவேண்டும்?

இரவுப் பிராணிகளாக அவை மாறுவது ஒன்றுதான் வழி.●

## ஒரு சதக்குத்தி...

Bills ஐயும் செலுத்தத் தொடங்கியுள்ளனர். இந்தச் சூழலில் ஒரு சதக் குத்தி தானாகவே மரணித்திருக்கலாம்.

Dial phones, Video tapes முதலியவ - ற்றை இன்று எங்கும் காணமுடியாது. அவ்வாறே சில்லறைக் காசுகளும் ஒரு காலத்தில் இல்லாமல் போகலாம்.

வியாபாரத் தலங்கள் ஒரு சதக் குத்தியை ஏற்பதோ விடுவதோ அவர்கள் விருப்பம். பொருட்கள் வாங்கும் பொழுது தங்கள் தொகையை அண்ணளவாக செலுத்த வேண்டும் (Rounded out). அதாவது 1.01, 1.02 பதிலாக 1 டாலர் என்றும் 1.03, 1.04 க்கு பதிலாக 1 டாலர் 5 சதம் என்றும் செலுத்த வேண்டும். ஒரு சதம் செல்லாக் காசாவதைப் பற்றி ஒருவரும் பெரிதாக அலட்டிக் கொண்டதாகத் தெர-ியவில்லை. விரைவில் இது சரித்திரத்தின் ஒரு பகுதியாகிவிடும்.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கனகேஸ்வரி நடராஜா

# Demise of the Penny
## ஒரு சதக்குத்தி செல்லாக் காசாகிறது

சிறுவயதில் இருந்தே இந்த ஒரு சதக் குத்தியின் மேல் எனக்கு ஒரு தனிப்பிரியம். நானும் எனது தம்பியும் இரட்டைக் குழந்தைகள். அம்மா எங்களை வீட்டில் பிரசவித்தாலும் எங்களுக்கிடையில் ஒன்பது நிமிடங்கள்தான் இடைவெளி என எனது அம்மம்மா அடித்துச் சொல்லுவா. ஏனென்றால் அம்மாவின் பிரசவம் பார்த்த சிங்கள மருத்துவச்சி அந்தக் காலத்திலேயே கையில் கடிகாரம் கட்டியிருந்ததாகவும் அவ சரியாக நேரத்தைப் பார்த்துச் சொன்னதாகவும் கூறுவா.

நாங்கள் இருவரும் வீட்டுக்கு அண்மையில் இருந்த இந்துபோர்ட் கலவன் பாடசாலையில்தான் ஆரம்பக் கல்வியை தொடங்கினோம். பாடசாலைக்குச் செல்லும்பொழுது எங்களுக்கு அம்மா ஆளுக்கு ஒரு சதம் தந்து விடுவா. பாடசாலைக்கு முன்பாகக் கந்தையா கடை என்ற ஒரு பெட்டிக்கடை இருந்தது. அதில் ஒரே அளவான கண்ணாடிப் போத்தல்களில் பல வகையான இனிப்புகள் வரிசையாக அடுக்கப்பட்டிருக்கும். எல்லா இனிப்புகளும் கண்ணைப் பறிக்கும் கடுமையான நிறங்களில் இருக்கும். நெல்லிக்காய் இனிப்பு - இது நெல்லிக்காய் வடிவத்தில் இருக்கும், சூப்புத்தடி - விரல் விறுத்தத்தில் மெல்லிய 2 அங்குலம் அளவு நீண்டதாக இருக்கும், றபர் இனிப்பு - இன்றைய சுயிங்கம் போல் வாயில் இழுபடும், முட்டாசு இனிப்பு - கடும் ஊதா நிறத்தில் சதுரமாக இருக்கும், அரிசிப் பல்லுமுட்டை - முட்டை வடிவத்தில் அரிசி அளவில் எத்தனையோ வகையான நிறத்தில் இருக்கும். (இன்று இந்த அரிசிப் பல்லுமுட்டையை இந்திய உணவகங்களின் கல்லாப் பெட்டிக்கு அண்மையில் ஒரு தட்டத்தில் வைத்திருப்பார்கள் - ஏனெனில் இந்த அரிசிப் பல்லுமுட்டைக்கு உள்ளே நற்சீரகம் இருக்கும். இது ஜீரணத்துக்கு உதவுவதோடு, அசைவ உணவுகளால் வாயில் ஏற்படும் துர்நாற்றங்களையும் போக்கும்). எல்லா இனிப்புகளும் ஒரு சதத்திற்கு ஒன்று கிடைக்கும். அரிசிப் பல்லுமுட்டையின் போத்தலில் ஒரு சிறு கரண்டி இருக்கும். அது மாத்திரம் ஒரு சதத்திற்கு ஒரு கரண்டி கிடைக்கும். நானும் தம்பியும் இரண்டு வகையான இனிப்புகளை வாங்குவோம். பின்பு அரைவாசி இனிப்பை ஒருவரோடு ஒருவர் பங்கு போட்டுக் கொள்ளுவோம். இதனால் இரண்டு வகையான இனிப்புகளை உண்ட திருப்தி எங்களுக்கு ஏற்படும். இன்று இலங்கையில் கந்தையா கடையும் இல்லை, ஒரு சதமும் இல்லை.

கனடாவுக்கு 26 வருடங்களுக்கு முன்பு ஆளுக்கு இரண்டு சூட்கேசுகளுடன் வந்து இறங்கினோம். குசினிக்குத் தேவையான சகல ஏதனங்களையும் காசு கொடுத்து வாங்க வேண்டிய நிர்ப்பந்தம். Bathurst Subway க்கு முன்பாக Honested என்ற ஒரு கடை உண்டு. அங்குதான் புதிதாக வாழ்க்கை தொடங்கும் புலம்பெயர்ந்தவர்கள் மலிவாகப் பொருட்களை வாங்க உகந்த இடம் என ஏற்கனவே இங்கு வந்து குடியேறிய எமது நண்பர்கள் அறிவுரை வழங்கினார்கள். பார்த்தவுடனேயே எம்மை "வா, வா" என கண்ணைப் பறிக்கும் மின்சார விளக்குகள் அழைத்தன. ஏதோ யாழ்ப்பாணத்தில் கார்னிவல் பார்க்கப் போவது போன்றிருந்தது. கத்தி, கரண்டி, கோப்பை, தும்புக்கட்டை, சட்டி, பானை, இன்னோரன்ன எந்தப் பொருளைப் பார்த்தாலும் .99 சதம், 1.99 சதம், 2.99 சதம், 3.99 சதம் என்ற பாணியில்தான் விலைகள் குறிக்கப்பட்டிருந்தன. கால்நூற்றாண்டுக்கு முன்பு, அதிலும் புதிதாக நாட்டுக்கு வருகை தந்த நேரத்தில் மனதில் எந்த பொருளைப் பார்த்தாலும் இலங்கை காசில்தான் கணக்குப் பார்த்துக் கொண்டிருந்தோம். இரண்டு டாலர் என்று சொல்வதிலும் பார்க்க ஒரு டாலர் 99 சதம் என்ற சொல்லும்போது மனரீதியாக ஒரு பெரிய தாக்கம் ஏற்பட்டது. அந்தக் காலம் மணித்தியாலம் $4.50 சதம் அடிப்படைச் சம்பளத்தில்தான் எம்மவர் பெரும்பாலோர் வேலை செய்து கொண்டிருந்தார்கள். ஆகவே ஒரு சதம் பெரிய காசாக இருந்தது. இவ்வளவு பாசம் வைத்திருந்த ஒரு சதக் குத்தியை வெகுவிரைவில் பாவனையில் இருந்து நீக்கப் போகிறார்கள் என்று பல வருடங்களாகப் பேசப்பட்டு வந்தது. ஆனாலும் திடீரென 4/2/13 அன்று எமது அன்றைய நிதி அமைச்சர் Jim Flaherty இனிமேல் ஒரு சதக் குத்திகள் தயாரிக்கப்பட மாட்டா என்றும், இருப்பில் உள்ளவையும் படிப்படியாக பாவனையில் இருந்து நீக்கப்படும் எனவும் அறிவித்த பொழுது Life support இல் (உயிர் வாழ்வதற்கான உதவிகள்) இருக்கும் எனது நெருங்கிய உறவினரின் உயிர் வழங்கும் குழாய்கள் யாவையும் கழற்றிவிட வைத்தியர்கள் முடிவு செய்துள்ள பொழுது ஏற்படும் மனநிலைதான் எனக்கு ஏற்பட்டது. எதற்காக இந்த ஒரு சதக் குத்திக்கு இந்த முடிவு ஏற்பட்டது? 104 வயதை அடைந்த நிலையில் இதன் மதிப்பு நன்றாகச் சரிந்துவிட்டது. ஒரு சதம் மதிப்பு உள்ள இந்தச் செப்புக்காசை உற்பத்தி செய்வதற்கு அரசாங்கத்துக்கு 1.6 சதம் தேவைப்படுகிறது. அதாவது இதன் உற்பத்தியை நிறுத்துவதன் மூலம் வருடம் ஒன்றுக்கு 11 மில்லியன் டாலர்களை அரசாங்கம் சேமிக்க முடிகிறது. ஏற்கனவே இன்றைய காலகட்டத்தில் பலர் இந்த ஒரு சதக் குத்தியை ஒரு கரைச்சலாகவே நினைக்கிறார்கள். இவை பல வீடுகளில் போத்தல்களிலும், லாச்சிகளிலும், ஜாடிகளிலும் தஞ்சம் புகுந்து பல வருடங்களாகி விட்டன. ஒரு சதக் காசு, காசென்ற பெறுமானம் இல்லாத காசு (Penny is a currency without any currency) என எமது நிதி அமைச்சர் Jim Flaherty வர்ணித்துள்ளார். 1908ம் ஆண்டில் இருந்து உற்பத்தி செய்யப்பட்ட 35 மில்லியன் ஒரு சதக் குத்திகள் இன்று பாவனையில் உள்ளன. இவை படிப்படியாக பாவனையில் இருந்து நீக்கப்பட்டுவிடும்.

ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்தில் 15 வருடங்களுக்கு முன்பே ஒரு சதத்தைப் பாவனையில் இருந்து நீக்கி விட்டார்கள். பல ஐரோப்பிய நாடுகளிலும் இம் மாற்றம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. Consumer Association of Canada (CAC) கடந்த பத்து ஆண்டுகளாக இதனை நீக்கும்படி வேண்டுகோள் விடுத்தபடி இருக்கிறது. ஒரு சதக் குத்தியின் நீக்கம் ஏனைய சில்லறைக் காசுகள் நீக்கத்திற்கு ஒரு ஆரம்பம் எனக் கூறினால் மிகையாகாது.

இன்றைய சமூகம் ஒரு காசில்லா சமூகம் (Cashless Society) ஆக மாறிக் கொண்டிருப்பதைப் பலரும் அவதானித்திருப்பார்கள். அதாவது சில்லறைக் காசுகளையோ, தாள் காசுகளையோ காவிக் கொண்டு செல்லும் பழக்கத்தை பலரும் கைவிடத் தொடங்கியுள்ளனர். அதற்குப் பதிலாக கொடுக்கல், வாங்கல் எல்லாம் Electronic முறையாக Credit cards, Debit cards மூலம் நடைபெறத் தொடங்கியுள்ளது. செக் எழுதும் பழக்கம்கூட இளம்வயதினர் மத்தியில் அருகிக் கொண்டு வருகிறது. கணினி மூலமே எல்லா.. (8ஆம் பக்கம் வருக)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ். ஜெகதீசனின் *பத்தாம் பக்கம்*

# இணைய வழி

அச்சு ஊடகம், காட்சி ஊடகம், ஒலி ஊடகம் எல்லாவற்றுடனும் புதிதாய் அதிக செல்வாக்குடன் திகழ்வது இணைய ஊடகம். தகவல் பரிமாற்றத்தின் அத்தியாவசியமாக இணைய ஊடகங்களின் சமூக வலைத் தளங்கள் கணிக்கப்படுகின்றன. கவனிக்கப்படுகின்றன.

சமூக வலைத்தளங்கள் மனித குலத்தின் மகத்தான வரமாக கருதப்படுகின்றது. மாபெரும் அறிவுச் சுரங்கத்தைத் திறந்து விடுவதாக சொல்லப்படுகின்றது. சுதந்திரமாகச் செயல்படும் கட்டற்ற வெளியை வாசலாக உடையதாக எண்ணப்படுகின்றது.

சமூக வலைத் தளங்களில் அதிக சக்தி வாய்ந்தது என பிரபலம் பெற்று வருவது முக நூல் (Face book). தமிழ்கூறும் நல்லுலகில் வதனப்புத்தகம் அல்லது முக நூல் என பேஸ்புக் குறிப்பிடப்படுகின்றது.

முகநூல் என்பது ஹார்வாட் பல்கலை கழக மாணவரான மார்க் சக்கர்பர்க் தனது நண்பர்களான டிஸ்டின் மாஸ்கோவிட் மற்றும் எடுடாரோ சவ்ரின் ஆகியோருடன் இணைந்து 2004 ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இணையவழி சமூக வலையமைப்பு ஆகும். இது அறிவார்ந்த மனிதர்களுக்கோர் அத்தியாவசிய அடிப்படை அடையாளமாக அதிவேகமாக இன்று அவதாரமெடுக்கின்றது.

காலையில் பல் துலக்கிவிட்டேன் என்பது முதல் ஒபாமாவின் பூனைக்கு வருத்தம் என்பது வரை உலகின் எல்லா நிகழ்வுகளையும் அறிவிப்பதற்கு இந்த இணையத்தளம் பயன்படுத்தப்படுகின்றது. நான் துயரமாக இருக்கின்றேன் என்று முகநூலில் கண்ணீர் சிந்தினால் உலகத்தின் பல மூலைகளிலிருந்தும் ஆறுதல் வருகின்றது. காதலை சொல்லவும் கட்டிப்பிடித்துக் கொள்ளவும் இந்த வலைத்தளத்தில் வசதி உள்ளது. சரியானதோ தவறானதோ எல்லாமே விமர்சிக்கப்படும் அளவுக்கு கருத்துச்சுதந்திரம் உண்டு. ஓரிடத்தில் அனைத்தும் உள்ளது என முகநூல் பற்றிச் சொல்வார்கள்.

எகிப்து நாட்டில் மக்கள் புரட்சியை ஒடுக்கியது அந்நாட்டின் அரசு. அதே போல்தான் துனிஷிய நாட்டின் மல்லிகை புரட்சி என அழைக்கப்பட்ட மக்கள் புரட்சியும் அதிகாரவர்க்கத்தால் நசுக்கப்பட்டது. இவை இரண்டிற்கும் எதிராக மக்களை கிளர்ந்தெழ வைத்ததில் பாரிய பங்களிப்பு முகநூல் என்ற நவீன தொழில்நுட்பத்துக்கு உண்டு என்பது தெரிந்தவர்களுக்குத் தெரியும்.

கருத்தைச் சொல்லும் ஒருவர் முக்கியமானவராகவோ அல்லது சொல்லும் விடயத்தில் திறமையுள்ளவராகவோ இருக்கவேண்டும் என்ற கோட்பாடுகளை தகர்த்ததும் முகநூல்தான். தமிழ்க் கலாசாரம் கட்டுப்பாடு மிகுந்தது என எண்ணும் புதிய தலைமுறை முகநூல் வசதிகளை வாய்ப்பாக்கிக் கொள்கின்றது. அதனால் அதே வசதிகளை வாய்ப்பாக்கிக் கொள்கின்றது எனக் கருதும் பழைய தலைமுறை மம்மர் அடைகின்றது. முகம் கழுவ முன்னரே முகநூலுடன் முடங்கிவிடுவதாக அங்கலாய்க்கின்றது.

தாம் வெளியிடும் கருத்து பல்லாயிரம் மக்களைச் சென்றடையப்போகின்றது. அவர்கள் படிக்கப்போகின்றார்கள். அவர்கள் பகிரப் போகின்றார்கள் என்ற எச்சரிக்கை உணர்வு ஒவ்வொரு முகநூலனுக்கும் தேவை. ஆனால் சுய தணிக்கை முறையை கடைப்பிடிக்க ஏனோ தவறுபவர்கள் பலர். வரம்பில்லாமல் எழுதலாம் என்பதற்காக நரம்பில்லாது எழுத முற்படுகின்றார்கள்.
முகநூலில் வெளிவரும் எதுவும் மனதுக்குப்பிடித்தமானதாக இருப்பின் லைக் (Like) என்பதை அழுத்திவிடுவது மிகவும் சாதாரணமான விடயம். 'ஒரு கிளிக்'. 'ஒரு லைக்'. இவ்விதம் ஒருவர் எதனை எல்லாம் விரும்புகின்றார் என்பதை வைத்தே அவரது அறிவு ஆற்றல் பாலினம் அரசியல் மத இன சார்பு நிலை உட்பட அனைத்துக் குணாம்சங்களையும் முழுமையான ஆளுமையையும் கண்டறியலாம் என மிக அண்மையில் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழக ஆய்வாளர்கள் நிரூபித்துள்ளனர்.

இந்த ஆய்வுக்காக சுமார் அறுபதினாயிரம் முகநூலர்களின் தகவல்கள் உபயோகிக்கப்பட்டன. அவர்களின் விருப்பங்கள் இவர்களால் விருப்பத்துடன் அலசப்பட்டன. உளவியல்தன்மைகள் அல்கோரிதம் (Algorithm) எனப்படும் நெறிமுறை கணக்கிடும் பரிசோதனை மூலம் ஆராயப்பட்டன.அவர்கள் விரும்பும் நிகழ்ச்சிகள் கட்டுரைகள் இசை புகைப்படங்கள் போன்ற பொதுவான விடயங்களை வைத்தே அவர்களின் அந்தரங்க அடையாளங்கள் அறியப்பட்டன. இந்த முடிவுகள் 95% சரியாக இருந்ததாம்.

இதனால் தனிமனிதரின் நடவடிக்கைகளை அவரது சம்மதமில்லாமலே மற்றவர்களால் பார்க்கமுடியும் என்ற ஆபத்தும் உருவாகலாம் என ஏங்குகின்றீர்களா? முகநூலில் உள்ள அந்தரங்கத்தைப் பாதுகாக்கும் அடிப்படைக் கட்டமைப்புக்கு (Privacy Settings) சென்று உங்கள் விருப்பங்கள் மூலம் உங்களைப் பார்ப்பதை தடுக்கலாம்.

முகநூலை போலவே அதிகமாகப் பரிவர்த்தனைக்கு உட்படுத்தப்படுவது மின் அஞ்சல் (email) ஆகும். அதனை கண்டு பிடித்தவர் யார்? இது வரை தெரியவில்லை என்றால் விடுங்கள்...இனி தலை நிமிர்ந்து சொல்லுங்கள்... மின் அஞ்சலை கண்டு பிடித்தவர் ஒரு தமிழன் என்று!

தற்பொழுது அமெரிக்காவில் வசிக்கும் தமிழ் நாட்டின் ராஜபாளையகாரரான சிவா.ஐயாத்துரைதான் அவர். புதுமைகளை யாராலும் எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் நிகழ்த்தலாம் என்பதற்கு தகுந்ததொரு சான்று அவர்!●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொன்னையா விவேகானந்தன்

# நீராடும் நிலமடந்தை

2

## பாதிவழியில் கழிந்த மீதிகள்

விடுதலை நோக்கிய ஈழத்தவரது போராட்டம் ஆவணப்படுத்தியிருக்கும் ஆழத்துயரங்களில், புலம்பெயர்ந்தோரின் அவலங்களும் குறிப்பிடத்தக்களவு பதிவாகியுள்ளன. பேரழிவுகளுக்கூடாக விடுதலைப்போராட்டம் தாயகத்தில் நிகழ்ந்துகொண்டிருக்க, புலம்பெயர்ந்தோர் சமூகத்தின் 'இருத்தல் அவலங்கள்' அக்காலத்தில் அதிகமாகப் பேசப்படவில்லை என்பதே உண்மை.

உயிரை ஒடுக்கி ஒளித்து, ஓடித்தப்புவதாய் நினைத்து, இலங்கை விட்டகன்ற தமிழர், புகலிடம் தேடிய நகர்ச்சியில் சிதைந்து சீரழிந்த சோகங்கள் சொல்லில் அடங்காதவை. இரத்தம் சொட்டச் சொட்ட ஒதுங்க ஒரு கரைசேர்ந்த பின்னாலும், கண்ணீரும் வியர்வையும் கலந்த ஊற்றிற்றான் இருத்தலுக்கான அடித்தளம் இடப்பட்டது.

மனவலிமையற்ற ஒரு இனமாக நாமிருந்திருப்பின் இந்த அவலங்களில் அழிந்தும் பயந்தும் இருத்தலுக்காக நிகழ்த்தப்பட்ட போராட்டத்தில் தோற்றிருப்போம்.

வாழ்புல இருத்தலுக்காக நிகழ்த்தப்பட்ட எமது போராட்டங்கள் தனித்துவமானவை. யாரோ நடந்த பாதையில் நிகழ்ந்தவையல்ல, வாழ்புலங்களுக்கும், கிழக்கு ஐரோப்பிய எல்லைகளுக்கும் புதிய அனுபவங்களைக் கொடுத்து நம்மவரே வகுத்துக்கொண்ட புதிய பயண மரபுகள்.

பலராலும் நன்கு அறியப்பட்ட கவிஞர் கி. பி அரவிந்தன். இவர் பாரிஸ் நகரில் வாழ்ந்து வருகின்றார். இவர் எழுதிய 'வரும் வழியில்' என்ற கவிதை எல்லைககள் கடக்கும் பயண அவலத்தை ஆழமாகக் குறிப்பிடுகின்றது.

தனது நண்பன் ஒருவனை வெளிநாடொன்றுக்கு அனுப்பி விட்டு, அவன் சென்றடைந்த சேதி வரும் எனக் காத்திருந்த வேளை, பத்திரிகையொன்றில் சென்றவன் பெயர் வருகின்றது.

உள்ளங்கைக்குள் உலகம்
எல்லாமும் கணப்பொழுதில்
எத்தகைய பொய் இது.

எப்போது சந்திக்கலாம்
என்றிருந்த நண்பர்கள்
நினைவுச் சுழற்சிக்குள்
கனவுப் பொருளாகிப் போயினர்
சந்திக்காமலேயே!
எனக்கும் அவர்களுக்குமான
இடைப்பட்ட பயணமோ
உயிர் துறக்கும் தூரம்.
யார் அறிவார் இதனை?

கிரேக்கக் கடலில் மூழ்கியும்
ஹங்கேரி நெடுஞ்சாலையில்
பாரவண்டியில் மூச்சுமுட்டியும்
பாதி வழியில் கழிந்தது
அவர்களது மீதி.

வாழப் புறப்பட்டவர்களின் மீதி வாழ்க்கை பாதி வழியில் முடிந்து போன அவலக் கதைகள் பலவுண்டு. உயிர் பிடுங்கும் கொடுங்கரங்களில் இருந்து தப்பிவிட்டோம் என கிழக்கைரோப்பிய நாடுகளில் இறங்கிப் பெருமூச்சு விட்டவர்களில் சிலர் இறுதி மூச்சையும் அங்கேயே விட்டார்கள்.

மீண்டும் சந்திக்கலாம் என்ற நினைவுச் சுழற்சியோடுதான் பெரும்பாலான வழியனுப்பல்கள் நிகழ்கின்றன. சந்திப்புகள் எதுவும் நிகழாமலேயே நினைவுகளுக்குள் வழியனுப்பப்பட்டோர் கனவாகிவிடுகின்றனர். கண்டறியா தூரத்தில் தொலைந்து போகின்றது அவர்களின் உடலும் அழிந்து போனதற்கான காரணங்களும். சான்றுகள் இல்லாமலேயே நடந்து முடிந்த சாவுகள் இவை.

கிரேக்கக் கடல் மடியில்
குளிரில் நீ விறைக்கையில்
என்னை நீ நினைத்தாயோ
உன் பெயரை நான்
பத்திரிகையில் கண்ணுற்றேன்.
கொப்பளித்துப் பொருமியது
வெடிக்காமல் போனது நெஞ்சு. (புலம்பெயர்ந்தோர் கவிதைகள் - பக். 96-97)

நண்பனைக் கனவுகளோடு வழியனுப்பி வைத்தவன் புலம்புகின்றான்.

இத்தாலி, கிரேக்கக்கரைகளில் அலையோடு ஒதுங்கி பயணத்துயரத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கலாம் என்ற கனவோடு, கிழக்கைரோப்பிய நாடுகளில் இருந்து படகேறியவர் பலர். கொடுங்குளிர் காலத்தில் காவல் குறைவு என்பதனால் அக்காலம் வரும்வரை காத்திருந்து நள்ளிரவில் படகேறுவர். பயணித்த எல்லாப் படகுகளும் கரை சேர்ந்ததில்லை. கவிழ்ந்தவையும் இருந்தன. காவற்றுறையால் கைப்பற்றப்பட்டவையும் இருந்தன.

கொடுங்குளிர்க் கடலில் கழுத்தளவு நீரில் இறக்கிவிடப்பட்டு, 'அதோ கரை நடந்து போங்கள்' என்று கைகாட்டிவிட்டுக் கழன்று விடுவர் படகோட்டிகள். கூடப்பயணித்த குஞ்சு குருமன்களையும், வயதானோரையும், நோயாளிகளையும் தோளிற் சுமந்தபடி, விறைத்த உறுப்புகளோடு கரை தேடிய இளைஞர் எல்லோரும் கரை சேர்ந்ததில்லை.

இந்தக் கழுத்தளவு நீருக்குள் காணாமல் போனோரும் இருந்தனர்.

கி. பி அரவிந்தனின் இந்தக் கவிதை வாழப் புலம் தேடிய ஈழத்தமிழரது பயண அவலத்தின் நிரந்தர சாட்சி.●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*எம்மைச் சுற்றி நடப்பவைகளிலிருந்து பொறுக்கி எடுக்கப்பட்ட சில சம்பவங்களைக் காய்தல் உவத்தலின்றி எழுதும் இந்தப் பத்தி (column). அவ்வப்போது வெளிவரும். கண்டவை, கேட்டவை, நடந்தவையே இதன் மூலாதாரம். ஒருவகையில் பார்த்தால் இதுவும்கூட தகவல்தான்.*

# இது எப்பிடி இருக்கு?

## பரிசோடு பட்டங்கள் படை திரண்டு வாருங்கள்!

எங்கள் கடையில் இலக்கியப் பட்டங்கள்
ஏராளம் உண்டு,
எல்லோரும் வாருங்கள்
மலிவு விலையில் பளபள பொன்னாடை
சந்தன மாலை சகலதும் உண்டிங்கு
எழுத்துப் பித்தன், இலக்கியக்கோ
சேவைச் செம்மல், சிங்காரக் கவி
வாழ்நாள் வானரம், பந்தக்கோ
பம்மாத்து வள்ளல், தங்கமணி
குஞ்சுமணி, தமிழ்மணி, பூஷணம்
இந்தப் பட்டங்களெல்லாம்
எங்களிடம் நிரம்ப உண்டு.
எதையாவதுஎழுதிக் கிறுக்கிவிட்டு
வெளியீட்டுவிழா தொடக்கம்
அறிமுகவிழா வரைக்கும்
ஆட்களை அழைத்து
அழகாகச் செய்திடுவோம்!
மேடையில் உங்களை உயர்த்திப்பேச
மேதாவிகள், பேராசான்கள்
கலாநிதிகள் கைவசமுண்டு;
காசோடு வாருங்கள்! என்ன பட்டம்
வேண்டும்?
எங்களிடம் கூறுங்கள்!
அள்ளித் தருவோம், ஆதரவு தாருங்கள்.
எல்லா இடமும் எங்கள் முகவர்கள்
பள்ளி கொண்டிருப்பதால் பாருங்கள்
உடனே போய் அவர்களை!
எழுதாத நூல்களுக்கும்
ஈயடைச்சான் படைப்புகளுக்கும்
பரிசோடு பட்டங்கள் பலவுண்டு
எம்மிடம்.
முதுகு சொறிவதற்கு
முதுமாணிப் பட்டங்கள்!
காக்காய் பிடிப்பதற்கு
கலைஞானிப் பட்டங்கள்!
பந்தப் பிடிப்பதற்கு பக்திமான்
பட்டங்கள்!
எங்கள் கடையில் ஏராளம் வாருங்கள்!
புகழுகின்ற நீங்கள்
போடுகின்ற கோலத்தை
படம்பிடித்துச் சாதனையாய்
பறைசாற்ற எங்களிடம்
பத்திரிகைப் பலமுண்டு
பயமின்றி வாருங்கள்!
என்ன பட்டம் வேண்டும்?
எழுதுங்கள் எங்களுக்கு!
இலக்கியத்தைப் புரியாமல்
எழுதுகின்ற வெம்பல்கள்
தலைக்கனத்தால் தடுமாறும்
விட்டமில்லா வட்டங்கள்
குரைக்கின்ற காலமெல்லாம்
உலகம் அழியாது!
பட்டங்கள் வேண்டுமென்றால்
படைதிரண்டு வாருங்கள் எங்களிடம்!

(நன்றி: 'ஞானம்' சஞ்சிகை, மார்ச் 2013)

## ஆப்பிழுத்த நிலையில் முதியவரின் புலம்பல்........

கடந்த காலங்களில் ஈழத் தமிழருக்கு தி.மு.க தலைவர் மு. கருணாநிதி செய்த கழுத்தறுப்புத் துரோகங்கள் கொஞ்சமல்ல. இவற்றுக்குரிய பிராயச்சித்தங்களைச் செய்வதற்கான ஒரு சந்தர்ப்பத்தை தமிழக மாணவர்கள் கடந்த மாதம் உருவாக்கிக் கொடுத்தனர்.

இதனையும் தமது தொடர் நாடகத்தின் ஓர் அங்கமாக மாற்றி, மாணவர் காதில் பூ வைக்க மு. க. முனைந்தாராயினும், அதில் அவர் தோற்கடிக்கப்பட்டுவிட்டார். இதனால், மத்திய அரசுடனான சகல உறவுகளையும் துண்டிக்க நேர்ந்தது எதிர்பாராத ஒரு 'விபத்து'.

இதனைத்தான் , 'ஆப்பிழுத்த.... நிலை' என்பர். எல்லாரையும் எல்லா நாளும் எமாற்ற முடியாது என்ற நிலைக்குள் சிக்கி சகலதும் இழந்து நிற்கும் மு.க இப்போது புலம்ப ஆரம்பித்துள்ளார்.

"மத்திய அரசிலிருந்து நாம் வெளியேறி விட்டதால், ஈழத்தமிழரின் பிரச்சனைகள் தீர்ந்து விட்டதா?" என்ற இவரது கேள்வி இவரது மனநிலையை புரிய வைக்கிறது!

டில்லி மத்தி ஆட்சியில் பங்காளராயிருந்த போது, "ஆடிய ஆட்டமென்ன? பேசிய வார்த்தையென்ன....?

## இஸ்ரேலில் நாய்களுக்கு தனி தொலைக்காட்சிச் சேவை

வீட்டில் தனியாக விடப்பட்டிருக்கும் நாய்களுக்காகவென்று இஸ்ரேலில் தனியான தொலைக்காட்சிச் சேவையொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வீட்டுக்காரர் வேலைக்குச் செல்கையில் விட்டில் தனியாகவிருந்து குரைத்து, வீட்டுப் பொருட்களைச் சேதம் செய்து, அடுத்த வீட்டுக்காரருக்குத் தொல்லை கொடுக்கும் நாய்களைக் கட்டுப்படுத்தவே இந்த ஏற்படாம்.

நாய்களுக்கு இதமளிக்கும் மெல்லிய இசையுடன் சிறப்பு வண்ணங்கள் தொலைக்காட்சித் திரையில் தெரியும். ஒவ்வொரு நிகழ்ச்சியும் ஆறு நிமிடங்கள் ஓடும். அமெரிக்காவில் சான்டியாகோ மற்றும் கலிபோனியாவிலும் இப்படியாக நாய்களுக்கான சேவைகள் உள்ளன.

## பாலியல் விவகாரங்களில் 'மகிந்த சிந்தனை' முதலிடம்!

கொலை, ஆட்கடத்தல், கையூட்டல், ஏமாற்றுமோசடி, வெள்ளைவான் ஓட்டம் போன்றவற்றில்தான் இலங்கை முன்னணியில் நிற்பதாக நினைக்க வேண்டாம். பாலியல் விவகாரங்களிலும் இலங்கை முன்னணியில்தான்!

தற்போது இலங்கையின் நீதிமன்றங்களில் நிலுவையிலுள்ள வழக்குகளில் அறுபத்தைந்து (65) வீதமானவை பாலியல் தொடர்பானவை. இவைகளில் ஐம்பது வீதத்துக்கும் அதிகமானவை சிறுபராயப் பெண்களைப் பாலியலுக்குப் பயன்படுத்தியமை மற்றும் பெண்கள் பாலியல் வல்லுறவுடன் சம்பந்தப்பட்டவை,

மொத்தமான வழக்குகளில் இரண்டாயிரம் வரையானவை குறைந்த வயதுள்ள பெண்பிள்ளைகள் சம்பந்தப்பட்டவை.

## இவர்கள் இப்படியென்றால் அவர்களும் அப்படித்தான்!

போலி நாணயத் தாள்களைக் கொடுத்து மாணிக்கக் கற்களை ஒரு கோஷ்டி கொள்முதல் செய்து விட்டதாக பொலிஸில் புகார் செய்யப்பட்டது. ஒருவாறு அந்தக் கும்பலைக் கைது செய்த பொலிசார் கடுமையான விசாரணையின் பின்னர் மாணிக்கக் கற்களையும் மீட்டனர்.

ஆனால், பொலிசாருக்கு புதிய தலையிடியொன்று அங்கே காத்திருந்தது. போலி நாணயத் தாள்களுக்கு விற்கப்பட்ட மாணிக்கக் கற்கள் போலியானவை என்பதால் அதனை விற்றவர்களைக் கைது செய்ய வேண்டியிருந்தது.

அந்த மாணிக்கக்கல் விற்பனை நிலையத்திற்குப் பொலிசார் சென்றபோது அங்கு அந்த நிறுவனத்தைக் காணவில்லை. அது இருந்ததற்கான தடயங்களும் இல்லை. விற்பனை செய்தவர்களையும் கண்டு பிடிக்க முடியவில்லையாம். கூட்டோடு தலைமறைவாகி விட்டனர்.

மாணிக்கக் கற்கள் போலி; நாளயக் காசுகளும் போலி. நல்லவேளை பொலிசும் போலியாக இருக்கவில்லை!

**உதாசனன் உலா விருந்து**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குயின்ரஸ் துரைசிங்கம்

# ஆர்ஜன்டீனாவிலிருந்து அகில உலகுக்கு!

உலகெங்கும் வாழும் 1.2 பில்லியன் றோமன் கத்தோலிக்கர்களின் 266வது திருத்தந்தையாக, ஆர்ஜன்ரீனா நாட்டைச் சேர்ந்த ஜோர்ச் மரியோ கோகெலியோ அவர்கள் தெரிவுசெய்யப்பட்டதும், "யாரி-வர்?" என்பதுதான் பரவலாக எழுந்த முதல் கேள்வி. கனடா, அமெரிக்கா, இத்தாலி, ஆபிரிக்கா என்ற நான்கு நாடுகளின் ஒன்றிலிருந்தே அடுத்த பாப்பரசர் தெரிவாகப்போகிறார் என்ற பலமான ஆரூடங்களெல்லாம் உறுதியாக ஒலித்துக்கொண்டிருக்க, லத்தீன் அமெரிக்கா என்று சுட்டப்படும் தென்அமெரிக்கப் பிராந்தியத்தில், உதைபந்தாட்டத்தின் மூலம் மட்டுமே புகழ்பெற்றிருந்த ஆர்ஜன்ரீனாவிலிருந்து தெரிவான இவர், அதிரடியாக பிரான்சிஸ் என்ற புதிய பெயரைத் தெரிவுசெய்து, உலகை ஆச்சரியத்திற்கு உள்ளாக்கினார். உதைபந்தாட்டத்தில் புகழ்பெற்ற பிறிதொரு நாடான பிரேசிலிலிருந்து செயோ போலோ என்ற கருதினாலின் பெயர் மிக அதிகம் எதிர்பார்க்கப்பட்ட நிலையில், யாரும் எதிர்பார்க்காத 76 வயதான கோகெலியோ மூன்றிலிரண்டு பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று, புதிய பாப்பரசராக வழிமொழியப்பட்டார்.

இதற்கான தேர்தல் ஆரம்பித்து, முதல் நான்கு வாக்கெடுப்புக்களில் யாரும் மூன்றிலிரண்டு பெரும்பான்மையைப் பெறாததால், கரும்புகையே தொடர்ந்து வந்து கொண்டிருந்தது. ஐந்தாவது தேர்தல் ஆரம்பித்து நடைபெறும்போது, கூரையிலுள்ள புகைவரும் குழலின்மீது, வெண்பறவை ஒன்று உட்கார்ந்து அங்கும் இங்கும் பார்த்துக்கொண்டிருந்தது. வெண்பறவை உட்கார்ந்தது நல்ல சகுனமோ என்று பலரும் விசாரித்தனர். இதற்கிடையில் அந்தப் பறவை பறந்துபோக, பிறிதொரு வெண்பறவை உட்கார, பின்னர் மூன்றாவது வெண்பறவை ஒன்று புகைக்குழல் மீது உட்காரவும், சர்வதேச ஊடகங்கள்கூட அந்த சகுனம் பற்றி பேச ஆரம்பித்தன. சில நிமிடங்களில் வெண்புகை வெளிக்கிளம்பியது. கிட்டத்தட்ட ஒருமணி நேரத்தில், ஆர்ஜன்ரீனாவின் தலைநகர் பெனோசைரஸ் பகுதியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவரது பெயர் அறிவிக்கப்பட்டது.

இத்தாலி நாட்டிலிருந்து இளவயதில் புலம்பெயர்ந்து ஆர்ஜன்ரீனாவில் குடியேறிய புகையிரதத் தொழிலாளியான இவரது தந்தை, அங்கு திருமணம் செய்து பெற்றெடுத்த ஐந்து குழந்தைக-ளில் இவரும் ஒருவர். இரசாயனத்துறை விஞ்ஞானியாக வரவேண்டுமெனும் நோக்குடன் கல்வியை வெற்றியோடு தொடர்ந்தார். ஒரு கத்தோலிக்க குருவாக திருநிலைப்படுத்தப்பட்ட காலத்திலிருந்து, தற்போது பாப்பரசராகத் தெரிவாகும்வரை, மிகவும் பணிவும் தாழ்ச்சியும் ஏழ்மையும் உழைப்பும் ஊழியமும் நிறைந்த ஒருவராகப் பணியாற்றி வந்திருப்பதை வரலாறுகள் சுட்டிக்காட்டுகின்றன.

வறுமைக்கோட்டுக்குக் கீழே வாழும் 45 ஆயிரத்திற்கும் அதிகமான மக்கள் பெனோசைரஸ் நகரில் வாழும் நிலையில், ஜோர்ச் மரியோ கோகெலியோ அவர்கள், தனக்குக் கிடைத்த அனைத்து வசதி வாய்ப்புக்களையும் உதறித்தள்ளி, ஏழ்மையை தனது வாழ்விலும் கடைப்பிடித்து வந்துள்ளார். 2001ம் ஆண்டு இவர் கருதினாலாக நியமிக்கப்பட்டபோது, அத்தகைய உயர் பதவியைப் பெறுபவர்கள் தங்குவதற்கென்றே மிக வசதியும் நவீனமயமும் கொண்டதாக அமைக்கப்பட்டிருந்த ஆயர்மாளிகையில் தங்க மறுத்து, மிகச் சாதாரணமான தொடர்மாடியொன்றில் தங்கி சேவையை ஆரம்பித்தார். அத்துடன், இவருக்கு வழங்கப்பட்ட வாகன வசதியையும், வாகனச்சாரதியையும் நிராகரித்து, பொதுமக்கள் தினமும் பயணிக்கும் பொதுப் போக்குவரத்து வாகனங்களிலேயே தினமும் பயணித்து தனது பணிகளை முன்னெடுத்தார்.



50 வருடங்களுக்கு முன்னர், இவரது இளம் வயதில் இவர் நோய்வாய்ப்பட்டிருந்தபோது கண்டுபிடிக்கமுடியாத கிருமியொன்றின் பாதிப்பினால், இவரது நுரையீரல் ஒன்று நீக்கப்பட்டது. குருதிக்கு பிராணவாயுவை (ஒக்சிஜன்) வழங்குவதுடன், குருதியிலுள்ள கரியமிலவாயுவை (காபனீரொக்சைட்) பிரித்தெடுப்பதுமான பிரதான பணியை நுரையீரலே மேற்கொள்கிறது. ஒற்றை நுரையீரல்தான் இருக்கிறது என்பதைக் காரணம் காட்டி, மேலதிக சலுகைகளையும் வசதிகளையும் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பிருந்தும், தனக்கு இயல்பாகக் கிடைத்த அடிப்படை சலுகைகளைக்கூட ஏற்கமறுத்து, ஏழை மக்களுடன் தானும் ஒருவராகவே பணிபுரிந்து வந்தார்.

வருடம்தோறும் தவக்காலம் 40 நாட்கள் அனுஷ்டிக்கப்படுகிறது. இதன் இறுதி வாரத்தில், இயேசு தன் சீடர்களின் பாதங்களைக் கழுவியதை நினைவுகூர்ந்து, ஆலயங்களில் குருக்களும் 12 பேரின் பாதங்களைக் கழுவுவார்கள். அதிகமான ஆலயங்களில், முக்கிய பிரமுகர்கள், முதல்நிலை பணியாளர்கள் அல்லது ஓரளவிற்கு சமூகத்தில் அறியப்பட்டவர்கள் 12 பேர் இதற்கெனத் தெரிவு செய்யப்படுவார்கள். ஆர்ஜன்ரீனாவைச் சேர்ந்த ஜோர்ச் மரியோ கோகெலியோ என்ற இந்த அருட்பணியா-ளர், வருடந்தோறும் நோயாளர்கள், ஏழைகள், ஏனையோரால் வெறுக்கப்படுவோர் என்று, பலதரப்பட்டவர்களையும் அழைத்து வந்து, அவர்களது பாதங்களைக் கழுவி, பாதங்களை முத்தமிட்டு, அவர்களுக்கு நல்ல அன்பளிப்புக்களையும் வழங்குவார். எயிட்ஸ் நோயால் மிகவும் பாதிக்கப்பட்டவர்களை மக்கள் பொதுவாகவே புறக்கணிக்கிறார்கள் என்பதை அவதானித்து, இப்படி எயிட்ஸ் நோயால் பாதிக்கப்பட்ட 12 பேரை அழைத்து வந்து, ஆலயத்தின் பிரதான பீடப்பகுதியில் வைத்து, அவர்களது பாதங்களைக் கழுவி, துடைத்து, முழங்கால்படியிட்டு அவர்களை வணங்கி, அவர்களது இரு பாதங்களையும் முத்தமிட்டு, பரிசுப் பொருட்களையும் வழங்கியமை பெரிய அளவில் பேசப்பட்டது.

பாப்பரசராகத் தெரிவானதும், தனிமையில் செபம் செய்வதற்கு கொடுக்கப்பட்ட நேரத்தைவிட சற்று அதிகம் எடுத்துக்கொண்டதும், பின்னர் மக்களுக்கு முதல் தடவையாக வாழ்த்துச் சொல்லும்போது, தனக்காக அமைதியாக அனைவரையும் மன்றாடும்படி பணித்ததும், பின்னர் அங்கிருந்து செல்லும்போது இவருக்கென ஒதுக்கப்பட்ட லிமோசீன் சொகுசு வாகனத்தில் ஏற மறுத்து, ஏனைய கருதினால்களுடன் ஒன்றாய்ப் பயணித்து இரவுணவுக்குச் சென்றதும், மறுநாள் (30ஆம் பக்கம் வருக)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரா. சம்பந்தன்



# பெய்யெனப் பெய்யும் மழையும் பொய்யென செய்த உரையும்!

தெய்வந் தொழாஅள் கொழுநற்
றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை

மனைவியைப் பற்றிப் பேசும் அழகான குறள். ஆனால் அவசரப்பட்டுப் பொருள் எழுதி அதன் அழகைக் கெடுத்து விட்டார்கள் எல்லா உரை ஆசிரியர்களும்!

பிற தெய்வம் தொழாது தன் கணவனாகிய தெய்வத்தைத் தொழுது துயில் எழுபவள் பெய்யென்று சொல்ல மழை பெய்யுமாம்! இது பரிமேலழகர் உரை.

இதற்குத் திராவிடப் பகுத்தறிவுவாதிகள் என்ன சொல்கின்றார்கள் என்று பார்த்தால், வான்புகழ் கொண்ட மேலான ஒருவர் என்ற காரணத்துக்காக ஒருவரைப் பின்பற்றி நடக்காமல் தன் கணவனை மட்டும் எண்ணி அவனுக்கு ஏற்றபடி அவனைப் பின்பற்றி நடப்பவள் பெய்யவேண்டும் என்று விரும்பும் காலத்தே பெய்யும் மழையைப் போன்றவள் ஆவாள் என்று பொருள் சொன்னார் நாவலர் நெடுஞ்செழியன்.

தெய்வத்தை நேசிக்கும் பரிமேலழகரும், கடவுளை மறுக்கும் நெடுஞ்செழியனும் பெண் மழை போன்றவள் என்பதில் மாறுபடவில்லை.

இந்த உரைகள் எல்லாம் தவறானவை அல்ல. வாழ்ந்த காலம் சார்ந்திருந்த கொள்கைகள் என்பவற்றை ஒட்டிப் பிறந்த உரைகள் அவை. ஆனால் வள்ளுவர் இவர்கள் எல்லாம் சொல்லும் கருத்தில் இந்தக் குறளை எழுதியிருப்பாரா என்ற சந்தேகமும் எழத்தான் செய்கிறது. முன்னைய அதிகாரங்களில் தன்னால் தொழும்படி வலியுறுத்தப்பட்ட தெய்வம் இந்தக் குறளிலே தொழப்படவில்லை என்கிறார் அவர். அது மட்டுமல்ல. வேறொன்று தொழவும் படுகின்றது. அந்த வேறொன்று கொழுநன் எனப்படும் கணவன் என்கின்றார்கள் வாழையடி வாழையாக உரை ஆசிரியர்கள். பண்டிதர்கள் தொடங்கி பல்கலைக் கழகங்கள் வரை ஆம்! என்று தலையை ஆட்டுகிறார்கள்.

மிகப்பெரிய அறிவாளியான வள்ளுவர் கடவுளைக் கும்பிடாமல் கணவனைக் கும்பிடுபவள் பெய்யென்று சொல்ல மழை பெய்யும் என்றோ, அந்தப் பெண் பெய்யவேண்டிய காலத்து பெய்யும் மழை என்றோ எழுதியிருப்பாரா?

கணவனைக் கும்பிடு என்றாலே வள்ளுவனின் வாழ்வியல் கோட்பாடுகள் எல்லாம் தோற்றுப் போய்விடுகின்றன.

தற்காத்து தற்கொண்டான் பேணி என்றுதானே அவன் குறள் எழுதினான்.

கணவனை ஒரு பெண் பேணிக் கொள்ள வேண்டும், கும்பிட்டுக் கொள்ள வேண்டும் அல்ல. இது திருக்குறள்.

பத்துப் பாட்டில் ஒன்றாகிய பொருநராற்றுப் படையில் முடத்தாமக் கண்ணியார் என்று புலவர் ஒரு செய்தி சொல்லுவார். பகலிலும் இரவிலும் இறைச்சியை உண்ட காரணத்தால் வயலை உழுத கலப்பையைப் போலப் பற்கள் முனை மழுங்கிப் போய்விட்டனவாம்!

கொல்லை உழுகொழு ஏய்ப்பப் பல்லே
எல்லையும் இரவும் ஊன்தின்று மழுங்கி!

எனவே நாமும் வள்ளுவனின் கொழுநன் தொழுது எழுவாள் என்பதற்கு கலப்பையை நன்கு கும்பிட்டுக் கொண்டு துயில் எழுவாள் என்று பொருள் கண்டால் என்ன? கொழு என்றால் கலப்பை தானே!
இப்படிச் சொன்னதும் அது சந்தி பிழை புணர்ச்சி விதிக்குப் பிழை யாப்புப் பிழை என்று வரிந்து கட்டுவார்கள் தமிழ்ப் பெரியார்கள். அது உண்மையல்ல. திருக்குறள் மனித வாழ்க்கைக்கு ஆனது. இலக்கணத்துக்காக எழுதப்பட்டது அல்ல.

எனவே அதிகாலையில் கணவன் வயலுக்குக் கொண்டு சென்ற கலப்பையின் உணர்வோடு துயில் எழுந்து அதை வணங்கி வாழ்வின் வளத்துக்குப் பொருள் ஈட்டித்தரும் ஆரம்ப நாளான இன்றைய உழவு நன்றாக அமைய வேண்டும். என் கணவனும் எருதுகளும் துன்பமுறா வண்ணம் நிலம் மென்மையாக இருக்க நீ பெய்ய மாட்டாயா என்று தினமும் வணங்கும் தெய்வத்தையே இன்று வணங்க மறந்தவளாக வானத்தைப் பார்த்து ஏங்கும் ஒரு மனைவி பெய்யென்று சொல்ல அவளின் கோரிக்கையின் நியாயத்தை உணர்ந்து தன்னை வணங்கா விட்டாலும் தெய்வம் அவளுக்காக மழை பெய்விக்கும்!

இவ்வாறு பொருள் கண்டால் எவ்வளவு அழகும் ஆழமும் யதார்த்தமும் இருக்கும்! இதை விடுத்து ஏதோ தெய்வத்தை வணங்க விரும்பாதவள் போலவும் கணவனைக் கும்பிடும் பாமரப் பெண் போலவும் அப்படிக் கும்பிட்டால் மழை பெய்யும் என்பது போலவும் இந்தக் குறளின் பொருளைக் குறுக்கி வைத்திருக்கின்றோம்!

தொழில் சார்ந்த எண்ணங்களும் கணவன் மனைவியரிடையே உருவாக வேண்டும். உணவு அன்பு அறம் விருந்து காதல் கற்பு என்பவற்றோடு மட்டும் இல்வாழ்வு நின்று விடுவதில்லை. அதையெல்லாம் கடந்து தொழில் வழியாலும் மனைவியின் எண்ணம் கணவனைப் பேணுவதாக அமைய வேண்டும் என வள்ளுவன் விரும்பி இருக்கலாம்.

பொருள் ஈட்டும் வழியில் உள்ள இடர்களையும் உணர்ந்த இலட்சியப் பெண் ஒருத்தியை இக் குறள் மூலம் படைக்க வள்ளுவன் முயன்றிருக்கக் கூடும்!

அதை முறியடித்த பெருமை அன்றைய பரிமேலழகருக்கு மட்டுமல்ல இன்றைய படித்தவர்கள் கூட்டத்துக்கும் உரியதாகும்!●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கனடா மூர்த்தி

# கண்டதைச் சொல்கிறேன்

முகப்புத்தகம் இன்று தவிர்க்க முடியாத சமூக வலைத்தளம். தகவல் பகிர்வும், இணையவழி மகிழ்நிலையும் ஒன்றாகச் சேர்ந்ததுவே இந்த முகப்புத்தகம். தனி ஒருவரின் தனிப்பட்ட குணாதிசயம் மற்றும் விருப்பு வெறுப்புக்கள் எப்படி இருக்கும் என்பதை அறிய அவரது முகப்புத்-தகத்துள் சென்று பார்த்தாலே போதும் என்று சொல்லத்தக்க அளவிற்கு தமிழ் மக்களும் முகப்புத்தகத்தைக் பலதரப்பட்ட வகையில் கையாண்டு கொண்டு இருக்கிறார்கள். ('கொசுக்கடில ராத்திரி தூங்காமல் யோசிப்போர் சங்கம்' என்றுகூட முகப்புத்தகத்தில் தமிழில் தலைப்பு உண்டு.)

முகப்புத்தகத்தை அதன் ஆரம்பம் முதலே உபயோகித்து வருபவர்களுள் நானும் ஒருவன். ஆரம்ப காலத்தில் வெறுமனே 'சாப்பிட்டோம்..' 'சினிமா பார்க்கப் போகிறேன்.' 'போர் அடிக்கிறது' என்று தன்னிலைசார் 'ஸ்டேட்டஸ்' மட்டுமே போட்டுக் கொண்டிருப்போம். பிறகு முகப்புத்தகத்தினூடாக நம் பழைய நண்பர்களை தேடிக் கண்டுபிடித்து, தொடர்புகளை மீட்டெடுத்து அகமகிழ்ந்து கொண்டோம். அதன்பின் யுடியூப் தளம் பிரபலம் ஆக, டிஜிட்டல் போட்டோக்கள் பாவனைக்கு வர நம் போக்கும் மாறிக் கொண்டது. இன்றோ ஒரு பத்திரிகைக்கு போகாமலே அதற்கு நிகரான அளவில் தணிக்கையெதுவுமில்லாது தன் சொந்தக் கருத்துக்களை வெளிப்படுத்தும் வாய்ப்பும், தகவல் பரிமாற்ற வசதியும் இந்த முகப்புத்தகத்தால் தனிமனிதனுக்கு சாத்தியப்பட்டிருக்கிறது.

எடுத்துக்காட்டாக, கனடாத் தமிழர்களான நம்மையே எடுத்துக் கொள்வோமே... கடந்த வருட முடிவிலும் இந்த வருட ஆரம்பத்திலும் கனடாத் தமிழர்கள் நாம் இளையராஜா நிகழ்ச்சி பற்றி முகப்புத்தகத்தூடாக தத்தம் 'சொந்தக் கருத்துக்களை' தயங்காது வைத்து விவாதிப்பதில் பெரும் ஆர்வம் காட்டிக் கொண்டிருந்தோம். அதேபோல் தமிழகத்துத் தமிழர்கள் முகம் கொடுத்த கூடங்குளம், சின்மயி, விஸ்வரூபம் திரைப்படம் என பல 'பிரச்சனை'களை-யும் முகப்புத்தகத்தூடாக விவாதித்துக் கொண்டோம். என்னதான் விவாதித்தாலும் அவையெல்லாம் மேலோட்டமான பிரச்சனைகள் என்பது உண்மைதான்.

ஆனால் கடந்த (மார்ச்) மாதம் கொஞ்சம் வித்தியாசமாக அமைந்து கொண்டது. இதுவரை காணாத அளவிற்கு ஒரு ஈழ விழிப்புணர்வுச் சுனாமி தமிழகத்திற்கு வந்தது. ஈழத் தமிழருக்காக நடந்த தீக்குளிப்புக்கள் மற்றும் மாணவர்களின் உண்ணாவிரதம் பற்றிய செய்திகளும், தகவல்களும், பொது நிலைப்பாடுகளும் தமிழகத்தில் முகப் புத்தகத்தின் ஊடாகவும் காட்டாற்று வெள்ளமாக பெருக்கெடுக்க ஆரம்பித்தன. உண்மையில் தமிழக வெகுஜன ஊடகங்களை விடவும் முகப்புத்தகம், ட்விட்டர் என்பன செய்திப் பரிமாற்றத்தில் முன்னிலை வகித்தன. பரபரப்பு பற்றிக் கொண்டது.

ஆனாலும் அந்த 'விழிப்புணர்வுச் சுனாமி' குறித்து நம் கனடாவின் பெரும்பான்மை முகப்புத்தக பதிவர்கள் முதலில் ஏனோ அடக்கியே வாசித்தார்கள். ஆனால் அங்கு வேகம் அதிகரிக்க இங்கும் சுனாமி மெதுவாகக் 'கசிய' ஆரம்பித்தது. ஜெனிவா 'சூறாவளி' வந்த பின்னர்தான் தமிழக சுனாமி இங்குள்ளவர்களது முகப்புத்தகங்களில் கொஞ்சமாவது கவனிப்புப் பெற்றது என்றும் சொல்லலாம்.

கவனிப்புப் பெற்றவற்றுள் பௌத்த குருமார்கள் தமிழகத்தில் வைத்துத் தாக்கப்பட்டமை குறித்த கருத்துக்களும் விவாதங்களும்கூட அடக்கம். தாக்கப்பட்டமை பற்றி - கனடா முகப்புத்தக நண்பர்களைப் பொறுத்தவரை - பலரும் விவாதக் கருத்திடத் தயங்கினர். அப்படியே கருத்திட்டவர்களும் தமிழகத்தில் வைத்துத் தாக்கப்பட்டமை தவறான முன்னுதாரணம் என்றே பொதுவாக கருத்திட்டார்கள். உதாரணத்திற்கு என் நண்பனான புலம் பெயர் ஈழத்தமிழ்க் கவிஞன் 'இனி உங்களுக்கு சிங்கள பேரினவாதம் என்று சொல்ல எந்த அருகதையும் இல்லை" என்று முகப்புத்தத்தில் தமிழரான நம்மை நோக்கிக் கவித்துவமாகக் கருத்திட்டிருந்தான். அவன் கருத்தை 'பௌத்த குருமார் மீதான தாக்குதலானது ஒரு இனவாதத் தாக்குதல்" என்று கண்டனமாகப் புரிந்து கொள்வதா அல்லது 'தமிழகத் தமிழர்களும் ஈழத்தமிழர்கள் ஒற்றுமையடைந்து இப்போது பேரினம் என்ற நிலைக்கு வந்து விட்டார்கள்" என்ற ஒரு பாராட்டாகப் புரிந்து கொள்வதா எனக் குழம்பிக் கொண்டிருக்க......

தமிழத்தின் புகழ் பெற்ற கவிஞர், சிறுபத்திரிகை ஆசிரியர், பதிப்பாளர், தொலைக்காட்சி கருத்துரையாளர் ஒருவர் தன் முகப்புத்தகத்தில் எழுதிய கருத்து என்னைப் பெரிதாய்ப் புரட்டிப் போட்டது. அவர் தன் முகப்புத்தகத்தில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்: "தஞ்சை பெரிய கோவிலுக்கு வந்த இலங்கை புத்தபிட்சுகள் மீது தாக்குதலை தவறு என்று கண்டிப்பது ஒரு மேலோட்டமான பார்வையோ என்று தோன்றுகிறது. இன்று உலகில் மாபெரும் இனப்படுகொலையில் ஈடுபட்ட சிங்க இனவாத அரசுக்கு அங்கு பவுத்த வெறியே அடித்தளமாக இருக்கிறது. சிங்கள அரசு, சிங்கள ராணுவம், பவுத்த மதம் மூன்றும் ஒன்றோடன்று பிரிக்க முடியாமல் கலந்துவிட்டன. ஒரு இலங்கை புத்த பிட்சுவையும் ஒரு இலங்கை ராணுவவீரனையும் பிரித்துப் பார்க்கக் கூடிய இடம் இருக்கிறதா? ஒரு காயம்பட்ட சமூகத்தின் அடையாள அரசியலை வெறுமனே இனவெறி என்று மட்டும் சுருக்க முடியுமா?" என அவர் சுருக்கமாகக் கேள்வி எழுப்பி இருந்தார்.

அவரது கேள்வியில் தர்ம நியாயம் இருப்பதாகவே பட்டது. ஆனால் 'தாக்குதல் தவறு" என்று உடனே கண்டிக்க வேண்டியதுதான் முற்போக்கு, மனிதாபிமானம் எனப் பேசுவதானால் நமக்கு வரவேண்டிய 'ஆழமான அரசியல் பார்வை'யோ என்றும் தோன்றியது. நடந்த சம்பவம் தவறல்ல - காயம்பட்ட சமூகத்தின் அடையாள அரசியல்தானே அது என்றும் மறுபக்கத்தில் தோன்றியது. இவற்றால் குழம்பிப்போன நான் பதிலுக்கு 'தமிழகம் இப்படி அடாவடி பண்ணுமளவுக்கு நிலைமை ஏன் வந்தது என்பதைத்தான் நாம் ஆராய வேண்டும். அதை விட்டு விட்டு தவறு தவறு என யாராவது 'பழைய பல்லவி" பாடினால் அதனால் யாருக்கும் பிரயோசனமில்லை." என அவரது முகப்புத்தகத்திலேயே குறிப்பு ஒன்றை போட்டு விட்டேன். தவறு என நீ கண்டிக்கவில்லையேடா என என் மனச்சாட்சி புறுபுறுத்தது. அட போடா... நான் முகப்புத்தகத்தில் கருத்து இட்டுத்தான் என்ன பெரிய மாற்றம் வரப் போகுது... நாலு வருசமா அங்க எந்த அரசியல் இம்ப்றூவ்மென்ட்டும் இல்லை.. அதுக்கான அடையாள எதிர்ப்பாக பேஸ்புக்கில நானும் ஒரு ஸ்டேட்டஸ் போடுறது பெரிய விசயமா? ஏதோ ஈழத்தமிழனாக தமிழகத்தவர்களுடன் ஒற்றுமையாகச் சேர்ந்து நான் இடும் என்னாலான குரல்தான் அது என்று அடி மனதில் ஒரு சமாதானம் சொல்லிக் கொண்டேன். பிறகு அதே பக்கத்தில் உலவிப் பார்த்தபோது இன்னுமொரு தமிழக நண்பர் கீழ்வரும் குறிப்பை இட்டிருந்ததையும் கண்டேன்: "மிகப்பெரிய.. (மறுபக்கம் வருக)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முருகவே பரமநாதன் (ஆழ்கடலான்)

# புத்தகம் இரவல் கொடுத்தல்

வாங்கல் கொடுத்தல் மனித சமூக இயற்கை நடைமுறை. நகை, துணிமணி இதில் முக்கியமானவை. கமக்காரர் மாட்டை இரவல் கொடுப்பர், வாங்குவர். நகையை வாங்கி ஏமாறுவோர் ஏமாற்றுவோர் பலர். ஒரு மேலைத்தேய எழுத்தாளர் நமக்கு ஓர் அறிவுரை புகன்றார். எவரும் புத்தகத்தை இரவல் கொடுக்காதீர்கள். ஏனெனில் என்னிடம் உள்ள நூலெல்லாமே இரவல் வாங்கியவையே.

யானும் கொடுத்து படித்தவன்தான். தமிழிலே "இரவல் புடவையிலே இதுவுமொரு கொய்சகமாம்" ஒரு அனுபவ அறிவுரை. இப்பழமொழியை "இரவற் புடைவையிலே இதுவுமொரு கொய்சகமாம்" என்பதைத் திருத்தி எழுத வேண்டும். இரவற் புடைவையிலே இதுவுமொரு கொய்யகமாம். இதைச் சொன்னவர் பண்டிதர் இளமுருகனார். புடை-பக்கம். பக்கம் சொருகுவதால் புடை வைப்பதாற் புடைவை ஆயிற்று.

எங்கள் ஊர் வரலாற்றுப் புகழ் நிறைந்த ஊர். இங்கே திருவிழா ஒச்சமொத்தமாக நடைபெறும். அயல் ஊரார் ஏகாலியிடம் வேட்டி சால்வையை பெற்று அணிவர். பின் சம்திங் கொடுப்பர். இரவலை மண்டு இரவல் என்பர். திருப்பிக் கொடுக்க வேண்டும். இதை மாற்று அல்லது மாத்து என்பர். நகை வேண்டித் திரும்பக் கொடுக்காதவர் பலர். புத்தக வியாபாரத்தில் எச்சரிக்கையாக இருங்கள். புத்தகம் மாற்றுக் கொடுக்கும் பொருள் அன்று. நூல், ஏடு, புத்தகம் ஒரு பொருட்பதங்கள். நூலின் பெறுமானத்தை ஆழமாகச் சிந்திப்போமாக.

புத்தகம், நூல், ஏடு ஒரு பொருட்பதங்கள். ஓலையில் எழுதியவை ஏடு. வள்ளுவனார் நவில்தொறும் நூல் நயம் போலும் எனப் பாடியுள்ளார். நீரளவேயாகுமாம் நீராம்பல், நூலளவேயாகுமாம் நுண்ணறிவு என்பது ஔவை வாக்கு. காலைப் பிடித்தேன், கணபதி நின்பதம் கண்ணிலொற்றி நூலைப் பலம் பலவாகச் செய்து என்று பாரதி எழுதி வைத்தார். பாரதிராசனாரும் புத்தகசாலை என்றும் புதுக்கும் நாள் எந்நாளோ எனப் பாடினார். எனவே புத்தகத்தின் ஆசை போய்விடக்கூடாது. இரவல் பெற்றால் நாணயமாய் திருப்பிக் கொடுக்க வேண்டும். என் சில அனுபவங்களையும் நேயர்களோடு பகிர்ந்து கொள்வோம்.

யான் கண்டியில் ஆசிரியனாய்க் கடமை ஆற்றும்போது நல்லோர் சகவாசத்தால் வாசிக்கும் ஆர்வம் ஏற்பட்டது. புத்தகசாலையிற் கடனுக்கும் வேண்டி நாணயமாய் நடப்பேன். நாற்பதுகளில் பாரதி பாடல் கிடையாது. கண்ணன் பாடல், குயிற்பாட்டு, பாஞ்சாலி சபதம் என வேண்டி அச்சகத்திற் கட்டி வைத்திருந்தேன். அதை இரவலாய்ப் பெற்ற ஆசிரியர் திருப்பித் தரவேயில்லை. இவ்வண்ணமே ஒரு பண்டிதர் மலரும் மாலையைப் பெற்றவர்தான் திருப்பி ஒப்படைக்கவே இல்லை. உ. வேங்கடசாமி நாட்டார் உரையைப் பெற்ற பல்கலைக்கழக விரிவுரையாளரும் வேண்டியவர். வேண்டியதுதான் திருப்பி ஒப்படைக்கவில்லை. இப்பெரு மனிதர்களின் செயல் என்னைப் பெரிதும் வாட்டி வதைத்தது.

இப்பாணியிலே புலம்பெயர் நாட்டில் புத்தகங்களை அரும்பாடுபட்டுப் பாதுகாத்து வைத்திருந்தேன். அப்பழம் பெரும் பொக்கிஷங்கள் நூறை ஒரு அன்பர் படித்துவிட்டுத் திருப்பித் தருவார் என்ற வகையிற் கொடுத்தேன். ஏமாற்றம்தான் கண்ட மிச்சம். ஒருநாள் மூதாட்டியின் புத்தகம் தேவைப்பட்டுக் கேட்டபோது எல்லாம் அடுக்கவில்லை, இப்ப தரமுடியாது எனக் கூறிவிட்டார். போகட்டும். புத்தகங்களை வழங்கியபோது திருமந்திரம் மூன்று பாகங்கள் ஒரு பெரியாரின் உரையோடு உங்களிடம் இருந்தது. ஏன் எனக்குத் தரவில்லை என அந்த அன்பர் கேட்டார். நான் சொன்னேன் ஏலவே அந்த நான்கு புத்தகங்களையும் தந்துவிட்டேன் எனக் கூறினேன். புத்தகத்தையே பெறுவதிற் குறி எதிர்ப்பாய்க் கொண்ட இப்படியான பிரமுகர்களுக்கு நூல்களைக் கொடுத்து ஏமாந்து விடாதீர்கள் எச்சரிக்கையாய் இருங்களெனப் புத்திமதி கூறி விடை கூறும் ஆழ்கடலான்.●

## கண்டதைச்...

இன அழிப்பை செய்து விட்டு எந்த வித உறுத்தலுமின்றி இவர்கள் வந்து போய் கொண்டிருப்பார்களாம். நாம் அவர்களை விருந்து கொடுத்து அனுப்ப வேண்டுமாம். எனக்கு சிங்களவர்களை விட நியாய தர்மம் என்கிற பெயரில் அவர்களுக்கு வக்காலத்து வாங்கும் "நடுநிலையாளர்கள்"(!)தான் மிகவும் ஆபத்தானவர்களாய் தெரிகிறார்கள். இருக்கும் அத்தனை பேரையும் புதைத்து விட்டு எந்த மிச்சம் இருக்கும் மக்களுக்காக நீங்கள் பயப்படுகிறீர்கள்? எதற்கு எடுத்தாலும் நியாயத் தராசை தூக்கிக் கொண்டு நாலு பேர் நாட்டாமைக்கு கிளம்பி விடுவதால்தான் வர்றவன் போறவன் எல்லாம் பின்னால நாலு எத்து எத்திட்டு போறான். வீரத்தை அங்க போய் காட்ட வேண்டியதுதானே என்று கேக்குறவனுங்க முடிஞ்சா ஈழத்துக்கு போய் உங்க சாம தானத்த காட்டி தமிழனுக்கு சம உரிமை வாங்கிக்கொடுங்களேன். அறிவுப்பூர்வமா சிந்திக்கறதா சொல்லிட்டு இருக்கற கொஞ்ச நஞ்ச சொரணையையும் மழுங்கடிக்கறது தான் இவர்களின் நோக்கம்."

அட்ரா 'சக்கை' என்று சொல்லத் தோன்றியது. ஒரு பானை சோற்றிற்கு ஒரு சோறு பதம் என்பதற்கொப்ப மேலேயிருக்கும் ஆதரவுக் குரலை பதிந்திருப்பவர் ஒரு தமிழகத் தமிழரன்றோ! எப்படி வந்தது இந்த ஆதரவு? அரசியல்வாதிகள் செய்யாத மந்திரம் அது! தானாடாவிட்டாலும் தன் சதை ஆடும் என்பார்களே அதுதான் இதுவோ?

உண்மையிலேயே நாம் 'பேரினமாக" மாறிக் கொண்டு வருகிறோமோ என்ற குறுகுறுப்பு கலந்த ஏக்கப் புல்லரிப்பு என் மனதில் ஏற்படாமல் இல்லை. போதாக்குறைக்கு ஆத்மாநாம் கவிதை ஒன்றையும் அதே முகப்புத்தகத்தில் கண்டேன்:

ஏதாவது செய் ஏதாவது செய்
உன் சகோதரன் பைத்தியமாக்கப்படுகிறான்
உன் சகோதரி நடுத்தெருவில் கற்பிழக்கிறாள்
சக்தியற்று வேடிக்கை பார்க்கிறாய் நீ
ஏதாவது செய் ஏதாவது செய்
கண்டிக்க வேண்டாமா
அடி உதை விரட்டிச் செல்
ஊர்வலம் போ பேரணி நடத்து
ஏதாவது செய் ஏதாவது செய்
கூட்டம் கூட்டலாம்
மக்களிடம் விளக்கலாம்
அவர்கள் கலையுமுன்
வேசியின் மக்களே எனக் கூவலாம்
ஏதாவது செய் ஏதாவது செய்
சக்தியற்று செய்யத் தவறினால்
உன் மனம் உன்னைச் சும்மா விடாது
சரித்திரம் இக்கணம்
இரண்டும் உன்னை பேடி என்றும்
வீர்யமிழந்தவன் என்றும்
குத்திக் காட்டும்
இளிச்சவாயர்கள் மீது
எரிந்து விழச் செய்யும்
ஆத்திரப்படு
கோபப்படு
கையில் கிடைத்த புல்லை எடுத்து
குண்டர்கள் வயிற்றைக் கிழி
உன் சகவாசிகளின் கிறுக்குத் தனத்தில்
தின்று கொழிப்பவரை
ஏதாவது செய் ஏதாவது செய்.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழக மாணவர் போராட்டத்துக்கு ஆதரவாக ரொறன்ரோ பல்கலை தமிழ் மாணவர் உண்ணாவிரதம்






தமிழக மாணவர் தொடர்ச்சியாக நடத்தி வரும் ஈழத்தமிழருக்கு ஆதரவான போராட்டத்துக்கு ஆதரவாக ரொறன்ரோ பல்கலைக் கழக ஸ்காபரோ வளாக மாணவர் ஒரு நாள் உண்ணாவிரதத்தை கடந்த மாதம் 26ஆம் திகதி நடத்தினர். சிறீலங்கா இனவாத அரசாங்கத்தின் கொடூரங்களுக்கு எதிரான கோஷங்களை எழுப்பியதுடன், "தமிழீழத்துக்கான பொதுவாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும், சிறீலங்காவில் இடம்பெற்ற தமிழின ஒழிப்பு தொடர்பாக சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும்; தமிழர்களின் தாயகப் பகுதியில் இடைக்கால நிர்வாக அலகு ஒன்று உருவாக்கப்பட்டு தமிழர்களின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டும்" போன்ற கோரிக்கைகளை மாணவர்கள் இங்கு முன்வைத்தனர். தமிழக சட்டசபையில் இக் கோரிக்கைகள் கடந்த மாதம் 27ஆம் திகதி ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது●.

# உலகளாவிய நூலகவியலாளர் என். செல்வராஜாவுக்கு தமிழகத்தில் சிறப்பான வரவேற்புபசார மதிப்பளிப்பு






கடந்த இரண்டு தசாப்தத்துக்கும் மேலாக இங்கிலாந்திலிருந்து இயங்கிக் கொண்டிருக்கும் 'நூல்தேட்டம்' தொகுப்பாசிரியரான உலகளாவிய நூலகவியலாளர் என். செல்வராஜாவுக்கு அண்மையில் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் இந்திய ஒன்றியத்தால் சிறப்பான வரவேற்பளிக்கப்பட்டு, மதிப்பு வழங்கப்பட்டது. நூல்தேட்டம் தொகுப்புப் பணிக்கு தகவல் சேகரிப்புக்கென இவர் தமிழகம் சென்றிருந்த வேளையில் முன்னறிவிப்பின்றி இந்த வரவேற்பு பாரதீய வித்ய பவன் மண்டபத்தில் வழங்கப்பட்டது. சுவாமி விவேகானந்தரின் 150வது பிறந்த நாளின் சிறப்பம்சமாக நடைபெற்ற இந்த மதிப்பளிப்பு வைபவத்தில் துணைவேந்தர்கள், பேராசிரியர்கள், தமிழக மூத்த நூலகர்கள், எழுத்தாளர் சங்கப் பிரமுகர்கள் எனப் பலரும் பங்குபற்றியிருந்தனர். ஏற்புரை வழங்கிய திரு. செல்வராஜா, எமது எதிர்காலச் சந்ததியினர் தமிழின வரலாற்றைச் சரியாக எழுத வேண்டுமானால், அதற்கான அறிவியல் மூலாதாரங்கள் முறையாகப் பேணப்பட வேண்டுமென வலியுறுத்திக் கூறினார். இதற்காகவே தாம் தனிமனிதனாக மாறி இயங்குவதாக அவர் மேலும் தெரிவித்தார்.●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Tamils' Information 22nd Annual Aw



## Speech of the Chief Guest Teressa Armstrong M.PP - London-Franshawe

**"Tamils' Information helps address many of the challenges that Tamil newcomers experience when settling here.."**

I am so grateful to be here today to help mark the important achievements of the Tamil Canadian community and its premier publication , Tamils'Information magazine.

Last month, New Democrats joined with Tamils across Ontario in celebrating Tamil Heritage Month. Tamil Heritage month affords all of us an opportunity to remember, celebrate and educate future generations about the inspirational role that Tamil Canadians have played and continue to play in communities across Ontario.

New Democrats want to continue that celebration. Today, we are here to celebrate the contributions of nine distinguished Tamil Canadians for their hard work in a variety of fields including arts, sports, literature, business and the media. As well as recognizing the efforts of Tamils'Information magazine.

Under the leadership of Mr. Thiru Thiruchelvam, the magazine has been published every month for the last 22 years! It has been providing essential information regarding necessary services and resources to the community. The vital community publication helps address many of the challenges that Tamil newcomers experience when settling here in Ontario.

Helping newcomers settle into life in Ontario is vast undertaking yet this magazine accomplishes so much with so little. For 22 years, it has been published entirely from community based support like yours, with no assistance from the Government of Ontario nor the Federal Government of Canada.

This publication plays an important role that goes beyond settlement assistance alone; it also offers a unique contribution by documenting the Tamil - experience here in Canada while also highlighting Tamil histories and milestones over the last quarter century. Let's continue to honour those who have overcome tremendous obstacles and have made significant contributions to the growth and prosperity of Tamils in Ontario.

Firstly, I would like to recognize the contributions of my Friend, Neethan Shan. He is the first Tamil Canadian to be president of any major political party in Canada. I was proud to support Neethan's candidacy as President of Ontario's New Democrats. I know Neethan to be a passionate advocate for social services directed at helping children, youth and families. With deep roots in the community and an unflagging dedication to social development, he has worked tirelessly for the benefit of others.

The achievements made by the nine award recipients we are here to celebrate, are inspirational. They set a standard of excellence and earn our respect and trust through their passion and dedication to others and most importantly to their communities.

I am humbled to attend this event and present the awards to these exemplary individuals. I congratulate each of you on your award. You have earned the respect of your families, friends, and our communities for the work you have accomplished.

I am so proud to be here and share in the wonderful celebration. I look forward to working with you, our vibrant Tamil community, to make positive changes in communities across the province. Always remember what Jack Layton said, "Don't let them tell you it Can't be done".

Mikka Nanri (Thank you very much). Vanakkam.●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Awards Ceremony - 2013, February 10

## "Amidst our success and achievements we are one to one with our fellow human beings"

### *AWARD ACCEPTANCE SPEECH - Dr. R. Lambotharan MD*

Good afternoon Ladies and Gentlemen,

I am called upon to speak on behalf of the recipients of the Tamils' info awards 2013.

It fills my heart with joy to rise in response to the warm welcome you have given us. Even though it is recognition of the individuals for their achievements and contribution, we see this as a co-journey; as sharing; as personal touch with professionalism. Our achievements and contributions are based on real Love and care for our fellow human beings as we realize without these our expertise, resources, skills and service become just a lip service.

We shaped and helped our lives by helping and serving others. By serving others we ourselves affirm our own commitment to our own life issues and problems. In helping and serving we do respect others irrespective of their national, racial, political, linguistic, religious, moral and ethical affiliations and beliefs. We never force our choices upon others however good they appeared to us. The choice is always theirs; the decision is always theirs; the action and implementation is always theirs. Thus the responsibility is always theirs. But we do help them to find their own meanings and their own choices in their own lives by sharing our knowledge, experience and expertise.

For this to be sustained and healthy, we first of all should be committed to our own growth- physical, intellectual, social, emotional and spiritual for we realize that serving often involves modeling ourselves. We show respect to our bodies through proper exercise and diet. We do respect the world of intellectual possibilities and ideas. We do respect good researches, literatures and publications. We do respect the world of religion, spirituality, myth and metaphor, for we sense that there are dimensions of human life that can only be reached, explained or understood by these. Above all we do have respect for good common sense and social intelligence.

Amidst our success and achievements we are one to one with our fellow human beings. We understand the struggles of our fellow human beings who came through the history of wars, violence, traumas, displacements, immigrations, asylums, divided families, shattered values, socio-cultural and language barriers,



segregations, discriminations, injustice and racism. We understand their pain, their tolerance, their sufferings, their achievements, their failures their frustrations, their humiliation and their anger. It is here that we encounter them with the will to live, will to survive, will to fight and will to find meaning and purpose in their life amidst all these adversities as we also come through the same road.

We are not trying to fish in troubled water. We are not looking for people with problems to help them to feed our own personal, social, emotional, economical, professional or political needs. We do not intent to replace or compete with existing individuals and organizations doing good work.We do work with them for our society to get the optimum use of our skills and resources.At the same time we are well aware of our limitations in dealing with complexities of the dimensions of human life. No one person, organization, field or branch of expertise is enough to deals with these complex issues of human life. However we try to make this simple by forming forums and associations like this with people like you from different walks of life with different experiences sharing the similar vision. Let us work together and grow together with ease and fun to help ourselves and others.

We thank Tamils' information team and its founder Mr.Thiru S. Thiruchelvam who offered us this recognition and platform. I thank you the audience on behalf of all nine award recipients. I thank you in the name of all the organizations we belong to, and all the individual human beings we have helped. I thank you in the name of many good souls who have formed us, inspired us, stimulated us, shaped us, guided us, mentored us and lead us here to this state of recognition. Many of them are not here today, many of them are not alive today, many of them are not known by their names in public, but still live eternally in our hearts and lives and in the lives of the people we help.

Thank you.●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'தலைவர்' நா. சிவலிங்கம் மூன்றாவதாண்டு நினைவு நிகழ்வு

கனடியத் தமிழர் மத்தியில் நீண்டகால சமய-சமூக சேவையாளராகவும், இனப்பற்று நிறைந்த பொதுப்பணியாளராகவும் இயங்கி, 'தலைவர்' என்று பலராலும் அன்பாக அழைக்கப்பட்டுவந்த திரு. நா. சிவலிங்கம் (சிவா) அவர்களின் மூன்றாவதாண்டு நினைவு நிகழ்வு கடந்த மாதம் இரண்டாம் திகதி பிற்பகல் றிச்மன்ட்ஹில் ஆலய பொதுநிகழ்வு அரங்கில் நடைபெற்றது. கனடாவில் இயங்கும் கருகம்பனை மக்கள் மன்றம் இந்த வைபவத்தை ஏற்பாடு செய்திருந்தது.

றிச்மன்ட்ஹில் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ கேதீஸ்வரகுருக்கள் தலைமையில் ஆலய குருமார்கள் நடத்திய ஆத்மசாந்திப் பூஜையுடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாயின. கீரிமலை நகுலேஸ்வரக் குருக்கள் அனுப்பி வைத்த ஆத்மசாந்திச் செய்தி முதலில் வாசிக்கப்பட்டது. இந்து சமயப் பேரவையைச் சேர்ந்த சிவ முத்துலிங்கம் பஞ்சபுராணம் சிவபுராணம் ஆகியவைகளை ஓதியதையடுத்து, கருகம்பனை மக்கள் மன்றத் தலைவர் திரு. கதிர்காமத்தம்பியின் வரவேற்புரை, திரு. சிவலிங்கம் அவர்கள் கல்வி பயின்ற மகாஜனக் கல்லூரியின் கனடா பழைய மாணவர் சங்க இன்றைய தலைவர் கே. ஜெயந்திரன், முன்னாள் தலைவர்களில் ஒருவரான கதிர் துரைசிங்கம், மற்றும் இளவாலை சென். ஹென்றிஸ் பழைய மாணவர் சங்கத் தலைவர் செ. இராசநாயகம் ஆகியோரின் உரைகள் இடம்பெற்றன.

றிச்மன்ட்ஹில் ஆலய அறங்காவலர் சபையில் திரு. சிவலிங்கம் அவர்களோடு நீண்ட காலம் இணைந்து பணியாற்றி, தற்போது அதன் தலைவராகவிருக்கும் திரு. விக்னராஜா தமதுரையில் 'தலைவர்' அவர்களின் அளப்பரிய ஆலயப் பணிகளை விதந்துரைத்தார். மற்றொரு அறங்காவலர் சபை உறுப்பினரான திரு. பசுவய்யா, ஆலய தொண்டர்கள் சார்பில்



மு. பவளகாந்தன் ஆகியோரும் தங்கள் உரைகளில் ஆலய நிறுவனர்களில் ஒருவராகவிருந்த 'சிவா' அவர்களின் அர்ப்பணிப்பையும், சேவை மனப்பான்மையையும் எடுத்துரைத்தனர்.

ஒன்ராறியோ இந்து சமயப் பேரவையின் தலைவர் வி. கந்தவனம் தமதுரையில் ஆலயப் பணிகளுக்கப்பால் சைவ மாநாடுகள், சமயச் சொற்பொழிவுகள், சமயப் பெரியார்களை வரவழைத்து உரையாற்ற வைத்தல் போன்றவைகளில் 'சிவா'வுக்கிருந்த ஈடுபாட்டை விபரித்தார். தலைவர் சிவாவின் ஆத்மா சாந்தியடைய நாம் செய்ய வேண்டியவைகளை உலக சைவ மன்றத் தலைவர் டாக்டர். அ. சண்முகவடிவேல் எடுத்துக் கூறினார்.

1983ல் இலங்கையில் தமிழருக்கு எதிராக நடத்தப்பட்ட இனவழிப்பைத் தொடர்ந்து கனடாவில் விசேட குடிவரவுத் திட்டம் உருவாக்கப்படுவதில் திரு. சிவலிங்கம் ஆற்றிய பணிகளை அவ்வேளையில் அவருடன் சேர்ந்தியங்கிய அருள் அருளையா தமக்கேயுரிய பாணியில் விளக்கிச் சொன்னார். கனடா தமிழீழச் சங்கம் திரு. சிவலிங்கம் அவர்களால் அவரின் வீட்டு அடித்தளத்தில் உருவாக்கப்பட்டு பின்னர் அது எவ்வாறு குடியமர்வுச் சேவை நிறுவனமாக மாற்றப்பட்டதென்பதையும் அருளையா விபரித்தார்.

குடும்பத்தினரர் சார்பில் அவரின் பிள்ளைகள் சிவாஜினியும் ஹரினியும் நன்றி கலந்த உரையை வழங்கினர். திருமதி ஜனனி சிவலிங்கம் அவர்களின் சகோதரியின் புதல்வர்களான சித்தகன் மற்றும் பிரபு ஆகியோர் தங்கள் பெரியப்பாவுடனான உறவு பற்றி மனம் திறந்து உரை நிகழ்த்தினர்.

இறுதியாக 'தமிழர் தகவல்' முதன்மை ஆசிரியர் திரு எஸ். திருச்செல்வம் உரையாற்றினார். றிச்மன்ட்ஹில் ஆலயம், கனடா தமிழீழச் சங்கம், கனடா தமிழர் தேசிய மன்றம், கனடிய அகதிகள் சேவா நிறுவனம், கனடியத் தமிழர் தகவல் நிலையம் போன்றவைகளின் நிறுவனராகவும் தலைவராகவும் விளங்கிய 'சிவா' அவர்கள், சமயம் சமூகம் பொதுச்சேவை என்பவற்றுக்கு அப்பால் தாயக இனப்பற்றுடன் ஆற்றிய அளப்பரிய பணிகளையும், கனடிய தேசிய அரசியலில் அவரது வகிபாகத்தையும் விபரமாக எடுத்துரைத்தார். குறைவாகப் பேசி நிறைவாகச் செய்யும் சிவா அவர்களின் மனோவலிமை, முடிவெடுக்கும் பாங்கு, திட்டமிட்டுச் செயற்படும் திறமை ஆகியவைகளையும், இவற்றில் திருமதி ஜனனி சிவலிங்கத்துக்கிருந்த பெரும்பங்கையும் அவர் தமதுரையில் எடுத்துச் சொன்னார்.

கனடியத் தமிழரின் ஏகோபித்த தலைவராக விளங்கிய திரு. சிவலிங்கம் அவர்களின் திடீர் மறைவினால் ஏற்பட்ட வெற்றிடம் நிரப்பப்படாமலே இருப்பதாகக் குறிப்பிட்ட ப. ஸ்ரீஸ்கந்தன், தமது அனுபவங்களைத் தலைவர் பற்றிய குறிப்புகளுடன் இணைத்து நிகழ்வைத் தொகுத்து வழங்கினார். கருகம்பனை மக்கள் மன்றம் சார்பில் உ. ரவீந்திரன் நன்றியுரை வழங்கினார்.●

## Transitional administration..

reduced to mere individual human rights problems rather than the destruction of their Nation. Sadly, except for one statement made by Austria concerning the rape of Tamil women, the Tamils as a people are not even named—the UPR is "de-Tamilized" to the point that, anyone not fully cognizant of the facts of the 65 year long Tamil-Sinhala conflict would not even know who is to be a party to "reconciliation." Indeed it was the systematic dismantling of the existence of the Tamils as a distinct Nation in Sri Lanka that led to the 26-year-long war. We are alarmed with the government's assertion that it aims to create "a true Sri Lankan identity," which in Sri Lanka is a code term for "a Sinhala Buddhist State." At this juncture, we call for the establishment of a transitional administration, under international supervision, in the North and East of Sri Lanka – the traditional homeland of the Tamils – as an urgent measure to stop the on-going destruction of the Tamil people. Finally, taking note that the Government rejects all recommendations most likely to bring about accountability and remedy as required by international humanitarian law, we urge an independent international investigation.●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



டாக்டர் எம். கே. முருகானந்தன்

# புற்று நோய்கள் தடுக்கக் கூடியவை

புற்று நோய்கள் தடுக்கக் கூடியவை. வராமல் தடுக்க என்ன செய்ய வேண்டும்? எந்த நோய்க்குப் பயப்படாதவனும் புற்று நோயென்றால் கதிகலங்கவே செய்வான். அந்நோயால் பாதிக்கப்பட்டவர்கள் படும் அவஸ்தையைக் கண்டும் கேட்டும் ஏற்படும் பயம் அவ்வளவு வலுவானது.
புற்றுநோய் என ஒருமையில் சொன்னாலும் அது பல்வேறு வகைப்பட்டது. தோன்றக் கூடிய ஒவ்வொரு உறுப்பு மற்றும் திசுக்களுக்கு ஏற்ப அது பலநூறு வகைப்படும்.

ஆனால் இப்பொழுது புற்று நோய்களுக்கு நல்ல சிகிச்சை வந்துள்ளன. ஓரளவு ஆரம்ப நிலையில் கண்டுபிடித்தால் பூரணமாகக் குணமாக்க முடியும். நோய் முற்றியவர்களும் வலி வேதனையின்றி வாழக் கூடியவகையில் சிகிச்சைகள் நல்ல முறையில் வழங்கப்படுகின்றன.

இது கர்மநோயல்ல. ஒரு சில பரம்பரையில் வரக் கூடியவை. ஆயினும் பெரும்பாலானவை எமது தவறான வாழ்க்கை முறைகளாலும், சுற்றுச் சூழல் மாசுறுவதாலும் ஏற்படுகின்றன. எனவே இந் நோய் வராமல் தடுப்பது சாத்தியமானதே.

National Foundation for Cancer Research என்ற புற்றுநோய் தொடர்பான அமெரிக்க ஆய்வு நிறுவனமானது இது பற்றிய தகவல்களை வெளியிட்டுள்ளது. புற்றுநோய் வராமல் தடுப்பதற்கு ஒவ்வொருவரும் தமது உணவு மற்றும் வாழ்க்கை முறைகளில் செய்ய வேண்டியவற்றை அது சொல்கிறது.

1. உணவில் காய்கறிகளையும் பழவகைகளையும் அதிகளவு சேருங்கள். இறைச்சி வகைகளை குறைந்தளவில் உண்ணுங்கள். நிறமுள்ள காய் காய்கள் பழவகைகளில் உள்ள ஒட்சிசன் எதிரிகள் (antioxidants) புற்றுநோய்க்கு எதிராகப் போராடக் கூடியவை. இறைச்சி வகைகளில் Turkey நல்லது. ஆயினும் கொழுப்பின் அளவைக் குறைக்க அதன் தோற்பகுதியை அகற்றுங்கள்.
2. தொடர்ச்சியாக மதுபானம் அருந்துவதானது புற்றுநோய்கள் வருவதற்கான சாத்தியத்தை அதிகரிக்கிறது என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. அத்துடன் மதுவகைகளில் உள்ள கலோரி அளவு மிக அதிகமாகும். எனவே மதுவைத் தவிர்ப்பது நல்லது. ஆண்கள் மதுவின் அளவை ஒரு நாளைக்கு 2 டிரிங்கிற்கு மேற்பட விடக் கூடாது.
பெண்களில் மார்புப் புற்றுநோய் வருவதற்கு மது ஒரு காரணம் என அறியப்பட்டுள்ளது. எனவே பெண்கள் வாரத்திற்கு 3 டிரங்கிற்கு மேல் அருந்தக் கூடாது. குடியாதவர்கள் குடியுங்கள் என இது அர்த்தப்படாது.
3. கீரை, பசளி, பொன்னாங்காணி போன்ற எல்லா பச்சை இலை வகைகளுக்கும் முதலிடம் கொடுங்கள். தினமும் ஏதாவது ஒன்றை உணவில் சேருங்கள். போஞ்சி, பயிற்றை, அவரை போன்றவையும் அவசியம். எண்ணெயைப் பொறுத்தவரையில் நல்லெண்ணெய், கனோலா, walnut போன்றவை நல்லது. ஓலிவ் ஓயிலை சலட் போன்றவற்றின் மீது படரவிடுங்கள்.
4. மீன்கள் நல்லது. salmon, tuna or mackerel போன்றவற்றில் ஒமேகா 3 உள்ளது. இவை கலங்களின் ஆரோக்கியத்திற்கு நல்லது. புற்றுநோயைத் தடுக்கும்.
5. விதைகள் நல்லது. கஜூ, வோல்நட், அல்மன்ட் போன்றவற்றில் புரதமும் நல்ல வகையான கொழுப்பும் உள்ளது. உணவுகளுக்கு இடைப்பட்ட வேளைகளில் இவற்றை உண்ணலாம். ஆனாலும் அதிகம் வேண்டாம். ஏனெனில் எந்தக் கொழுப்பானாலும் அதிகம் கூடாது.
6. சுத்திகரிக்கப்பட்ட மாப்பொருள் உணவுகள் நல்லவையல்ல. நன்கு தீட்டிய அரிசி, கோதுமைமா போன்றவை தவிடு நீக்கப்பட்டு முழுமையாகச் சுத்திகரிக்கப்படவை. இவற்றில் போசணை கிடையாது. வெற்றுக் கலோரிகளாகும். தீட்டப்படாத அரிசி குரக்கன், ஆட்டாமா, மரவெள்ளி, வத்தாளைக் கிழங்கு போன்றவற்றில் போசணை அதிகம்.
7. இரசாயனம் கலக்காத உணவுகள் நல்லது. இப்பொழுது சந்தையில் கிடைக்கும் பெரும்பாலான மரக்கறிகள் பழவகைகள் யாவும் இரசாயன உரத்தில் வளர்ந்து கிருமிநாசினிகளை அதீதமாக உபயோகித்து நச்சாகியுள்ளன. இவற்றிற்குப் பதிலாக இயற்கை உரத்தில் வளர்ந்த மருந்தடிக்காத உணவுகள் நல்லது.
8. நார்ப் பொருள் செறிந்துள்ள உணவுகள் நல்லது. தீட்டப்படாத தானியங்கள், கடலை, பயறு மற்றும் அவரையின உணவுகளில் நார்ப்பொருள் செறிந்துள்ளது. கருவாடு dried cranberries, dried apricots போன்றவையும் சிறந்தன.
9. இனிப்பின் அளவையும் கொழுப்பு அதிகமான டெசேட் உணவுகளையும் கட்டுப்படுத்துங்கள். அளவு அதிகமாகிவிட்டால் உடற்பயிற்சியை அதிக நேரம் செய்யுங்கள்.
10. உணவு உண்ணும்போது ஆறுதலாகவும் நிதானமாகவும் உண்ணுங்கள். குடும்பத்தினரோடு சேர்ந்து உண்பது நல்லது.
தொலைக்காட்சி, கணினி போன்றவற்றின் முன் இருந்து ஒருபோதும் உண்ண வேண்டாம். நன்றாகச் சப்பிச் சாப்படுவது உணவுச் சமிபாட்டிற்கு நல்லது. வேறு பராக்குகளுடன் சாப்பிட நேர்ந்தால் வயிறு நிறைவது புரியாது அதிகமாக உண்டு விடுவீர்கள்.
11. போதிய நீர் அருந்துங்கள். 8 அவுன்ஸ் கிளாசில் 8 கிளாஸ் நீர் அருந்துங்கள் எனச் சிபார்சு செய்கிறார்கள். கழிவுப் பொருட்கள் வெளியேறி உடல் சுறுசுறுப்பாக இயங்க இது அவசியம்.
12. பசியோடு எந்த விருந்திற்கும் செல்லாதீர்கள். 'வீட்டில் ஒரு பிடி பிடித்துவிட்டு செல்' என அர்த்தம் அல்ல. பசியைக் குறைக்கக் கூடிய கடலை, கச்சான், பயறு போன்ற ஆரோக்கியமான உணவைச் சற்று உண்டுவிட்டு விருந்திற்குச் சென்றால் அளவிற்கு அதிகமாக உண்ண நேராது.
13. சிரிப்பைப் போன்ற சகலரோக நிவாரணி மருந்து வேறெதுவும் கிடையாது. வேலை வேலை என மனநெருக்குவாரத்துடன் நாட்களைக் கழிக்காது, சிரிப்பதற்கும் மனதிற்கு இனிமையான பொழுபோக்குகளுக்கும் நேரத்தை ஒதுக்குங்கள்.
14. உடலுக்கு நல்ல பயிற்சி அவசியம். வேகமாக நடவுங்கள், நீந்துங்கள், சைக்கிள் ஓடுங்கள் அல்லது வீட்டுத் தோட்டத்தில் வேலை செய்யுங்கள். தினசரி 30 நிமிடங்களுக்குக் குறையாது வாரத்தில் 5 நாட்களுக்காவது அவ்வாறு ஈடுபடுவது அவசியம்.
15. நல்ல ஓய்வும் தேவை. தினசரி 7 மணித்தியாலங்கள் தூங்குவது உடல் உள ஆரோக்கியத்தை மேம்படுத்தும்.
16. புகைத்தல் ஆகாது. பல வகையான புற்றுநோய்கள் புகைத்தலால் மட்டுமே ஏற்படுகின்றன. உடனடியாக நிறுத்துங்கள். முடியவில்லை எனச் சோர வேண்டாம். மீண்டும் முயற்சித்து பூரணமாக நிறுத்துங்கள்.
17. கடும் சூரிய ஒளியில் அலையாதீர்கள். உடலை மூடிய உடை, கறுப்புக் கண்ணாடி, Sun screen உபயோகியுங்கள்.
18. உணவுக் கால்வாய், கர்ப்பப்பை, மார்பு, புரஸ்ரேட், சருமம் போன்றவற்றில் புற்றுநோய் ஏற்படக் கூடிய சாத்தியங்கள் இருக்கின்றனவா என்பதையிட்டு மருத்துவரின் ஆலோசனையுடன் முற்கூட்டிய பரிசோதனைகள் செய்து கொள்ளலாம்.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Dr. Shan A. Shanmugavadivel & Associates

## டாக்டர் அ. சண்முகவடிவேல்



* Orthodontics * Implants * Cerec Crowns

பற்களை ஒழுங்கு செய்தல், 'இம்பிளான்ற்' சிகிச்சைகளில் கனடாவில் பயின்ற பல வருட அனுபவமுள்ள குடும்ப பல் வைத்தியர்.

**MONDAY - SATURDAY**

**(416) 266-5161**

(Near Kennedy Subway - Rainbow Village Building)

**RAINBOW VILLAGE DENTAL OFFICE**

2466 Eglinton Avenue East, Unit #7

Scarborough, Ontario M1K 5JB



# Computek College

Est. 1991

BUSINESS • HEALTH CARE • TECHNOLOGY

www.computek.edu



We provide assistance for Second Career funded Applicants. E.I receiving /received, Maternity benefits received, WSIB, Ontario Works clients & New Immigrants welcome

**SECOND CAREER**

**You maybe eligible upto $28,000 to pay for:**

Living Expenses
Transportation
ChildCare
Books
Tuition and other

**Diploma Programs**

- Early Childcare Asst (ECA)
- Personal Support Worker (PSW)
- Medical Office Admin (MOA)
- Computerized Accounting
- Business Administration
- Application Development
- Network Engineering
- Enterprise Network Engineering

| Markham Campus | Scarborough Campus | Toronto Campus |
|---|---|---|
| Markham / Steeles | Kennedy / Sheppard | Kennedy / Eglinton |
| 905.471.3344 | 416.321.9911 | 416.285.9941 |

Not all the courses are available at all the locations




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போற்றியாம் மார்கழிநீ ராடேலோ எம் பாவாய்! 64

நக்கீரன்



கூவின பூங்குயில், கூவின கோழி
குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்!

திருப்பெருந்துறையில் உள்ள குருந்த மரத்தடியில் மாணிக்கவாசகருக்கு இறைவன் காட்சி கொடுத்து மறைந்துவிட்டான். இறைவனைக் கண்டு அனுபவித்த மாணிக்கவாசகருக்கு இறைவன் காட்சி கொடுத்து மறைந்தது அவரை பிரிவுத் துன்பத்தில் ஆழ்த்தியது. அதில் பிறந்ததுதான் திருவாசகம்.

மாணிக்கவாசகர் தாம் பெற்ற இறை அனுபவத்தை திருப்பள்ளி எழுச்சிப்பாடல்களில் பாடியிருக்கிறார். இதற்குப் புறச் சான்றாக இருக்கும் ஞான ஆலயந்தான் திருப்பெருந்துறை. இப்போது அது ஆவுடையார் கோயில் என்று பெயரில் அழைக்கப்படுகிறது. இங்கேதான் மாணிக்கவாசகர் சிவதீட்சை பெற்றார். திருப்பள்ளி எழுச்சிப் பாடல்களில் திருப்பெருந்துறையில் தாம் சிவதீட்சை பெற்ற அனுபவத்தை மிக அழகாக மாணிக்கவாசகர் சொல்லி இருக்கிறார்.

ஒருவரிடம் இருக்கும் ஆணவத்தைப் போக்குவதுதான் தீட்சை. இதை மலபரிபாகன் என்பார்கள். திருப்பெருந்துறையில் மாணிக்கவாசகருக்கு சிவன் தீட்சை அளித்தார். இதன் மூலமாக மாணிக்கவாசகரின் ஆணவத்தை சிவபெருமான் நீக்கி அருளினார்.

மாணிக்கவாசகர் அரிமர்த்தன பாண்டியனின் முதலமைச்சர். இறைவனால் தீட்சை பெற்றதும் தான் அமைச்சர் என்ற ஆணவம் அவரை விட்டு ஒழிந்தது. நண்பரையும் பகைவரையும் ஒன்றாகப் பார்க்கும் உயர்ந்த மனப் பக்குவத்தைப் பெற்றார்.

இறைவனின் தெய்வீகக் காட்சி நினைப்பும் மறப்பும் இல்லாமல் தொடர்ந்து இருக்கும் சுத்த நிலையில் தம்மை வைக்கும்படி மாணிக்கவாசகர் வேண்டிக் கொள்கிறார். திருப்பள்ளியில் இருந்து எழுந்து வந்து தமக்கு சுத்த நிலையை அருள் புரியும்படி இறைவனை மாணிக்கவாசகர் வேண்டும் பாடல்களே அவர் பாடிய திருப்பள்ளி எழுச்சிப் பாடல்கள்.

மாணிக்கவாசகர் பெற்ற இறைவனின் அருள் அனுபவத்தைப் பற்றிய திருப்பள்ளி எழுச்சிப் பாடல்கள் இலக்கிய நயம் வாய்ந்தவை. அவர் திருப்பெருந்துறையாகிய ஆவுடையார் கோயிலையும் அதைச் சுற்றியிருக்கும் இயற்கைக் காட்சிகளையும் அந்தக் கோயிலில் காலையில் நடைபெறும் பூசைகளையும் இலக்கிய நயத்துடன் புனைந்து பாடியிருக்கிறார்.

மாணிக்கவாசகர் பாடிய திருப்பள்ளி எழுச்சிப் பாடல்களில் காட்டும் திருப்பெருந்துறையில் புறக் காட்சிகள் எல்லாம் அவர் தூல உடம்புடன் இருந்த போது பெற்ற இறை அனுபவத்தையே உள்ளுறையாகக் கொண்டு விளங்குகின்றன.

இறை ஒளி அவர் அகத்திலும் புறத்திலும் சிதம்பரத்தில் தோன்றியது. அந்த இறை ஒளியில் மாணிக்கவாசகர் தம் தூல தேகத்துடன் மறைந்து போனார். தாம் தூல உடம்புடன் இருந்து அனுபவித்து வந்த இறை அனுபவத்தையும் அப்போதே இழந்து விட்டார்.

"கன்னல் கனிதேர் களிறு என என்னையும் கடைமுறை இருப்பது ஆக்கினன்" என்று மாணிக்கவாசகர் தம் இறை அனுபவத்தைச் சொல்கிறார்.
மாணிக்கவாசகருக்கு முந்தியவரான திருஞானசம்பந்தரும் திருமணத்தின் பின்னர் தமது துணைவியார் தோத்திரப் பூர்ணாம்பிகையையோடு திருக்கோயிலுக்குச் சென்று வழிபட்ட பின்னர் சோதியில் கலந்துவிட்டார் எனச் சொல்லப்படுகிறது. சோதியில் கலக்கவில்லை நந்தனைப் போல் அவர் தீமூட்டிக் கொல்லப்பட்டார் என்ற கதையும் உளது.

இப்போது மாணிக்கவாசகர் பாடிய திருப்பள்ளி எழுச்சி முதல் பாடலைப் பார்ப்போம்.

போற்றி என் வாழ்முதல் ஆகிய பொருளே
புலர்ந்தது பூங்கழற்கிணைதுணை மலர்கொண்டு
ஏற்றி நின் திருமுகத்து எமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டு நின் திருவடி தொழுகோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந்துறையுறை சிவபெருமானே
ஏற்றுயர் கொடியுடையாய், எனை உடையாய்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே!

திருப்பள்ளி எழுச்சி திருப்பெருந்துறையில் பாடியவை. திருப்பெருந்துறை நீர் வளமும், நில வளமும் பொருந்திய ஓர் ஊராகும். அங்குள்ள இறைவனைக்குறித்துப் பாடிய இப்பாடல்கள் மாணிக்கவாசகர் தம் உள்ளத்துள்ளே உறையும் இறைவனை உள்ளத்திலே பள்ளி எழுந்தருளச் செய்து பின் அவனோடு ஒன்றிணைவதற்கு மேற்கொண்ட முயற்சிகள் எனக் கூறுவார்கள்.

வளம் பொருந்திய திருப்பெருந்துறை வயல்களில் செந்தாமரை மலர்ந்து குலுங்கிக் கிடப்பது போல் நம் உள்ளத்தாமரையும் இறைவனின் எல்லை இல்லாப்பெருங்கருணையால் மலர்ந்து கொள்கிறது.

போற்றி என் வாழ்முதல் ஆகிய பொருளே - என் வாழ்க்கையின் அடிப்படையே இறைவனாகிய பரம்பொருளே. அத்தகைய பரம்பொருளே உனக்குப் போற்றி. நின் திருவடித் தாமரையைத் தொழுது கொள்கிறேன்.

புலர்ந்தது பூங்கழற்கிணைதுணை மலர்கொண்டு - அதிலே அருமையான பூங்கழல்களால் அர்ச்சிக்கிறேன். இப்போது இருள் நீங்கிப் பொழுது புலரும் வேளை ஆகிவிட்டது,
ஏற்றி நின் திருமுகத்து எமக்கருள் மலரும் - என் அய்யயனே, உன் திருமுகதரிசனமும்.
எழில்நகை கொண்டு நின் திருவடி தொழுகோம் - அதில் விளங்கும் குறுமுறுவலும் எமக்குச் செய்யும் அருளை என்னென்று கூறுவது? உன் திருவடி நாதம் பிரணவநாத ஒலியன்றோ? அத்தகைய நாதம் ஒலிக்க வீரக் கழல்களைத் தாங்கி நிற்கும் உன் திருவடித் துணை எங்களுக்கு எப்போதும் வேண்டும். அத்தகைய திருவடியை நாங்கள் தொழுது ஏத்துகிறோம்.

சேற்றிதழ்க் கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந்துறையுறை சிவபெருமானே - தாமரை மலருவது சேற்றிலே ஆனாலும் அது சேற்றை விட்டு மேலே எழும்பி நிற்கும். தனித்துத் தெரியும், சேறு மட்டுமில்லாமல் அந்தக் குளத்து நீரும் அதில் ஒட்டாது. அவ்வாறே இவ்வுலகவாழ்க்கையில் பற்றில்லாமல் இறைவனிடம் கொண்ட பக்தியையே எந்நேரமும் நினைந்து திருப்பெருந்துறையாகிய இந்த ஊரில் குடி கொண்டிருக்கும் இறைவனை வழிபடுகிறோம்.

இங்கே தாமரை மலர்வது நம்முள்ளே மனத்தாமரை உள்ளே இருக்கும் அருட்பெரும்சோதியைக் கண்டு மலருவதற்கு உவமை சொல்லப்படுகிறது. சேறு என்பது நம் மனதில் தோன்றும் இவ்வுலகத்துப் பற்றுடைய எண்ணங்களைக் குறிக்கும். அத்தகைய சேறு நிறைந்த எண்ணங்களையும் மீறிக்கொண்டு இறைவனிடம் வைத்த பக்தியானது மலர்ந்து தாமரை மலர் போல் முகம் காட்டிச் சிரிக்கிறது.
ஏற்றுயர் கொடியுடையாய், எனை உடையாய் - எருது பொறுமைக்குப் பெயர் போனது. எவ்வளவு பாரமானாலும் தாங்கிக்கொள்ளும். எவ்வளவு துன்பமானாலும் தாங்கிக்கொள்ளும்.

→



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தகைய எருதைத் தனக்குக் கொடியாகவும், வாகனமாயும் கொண்டுள்ள இறைவனோ அவன் தன்மையையும் உண்மையையும் சொல்லி முடியுமா? அவன் நம்மையும் ஆட்கொண்டுவிட்டானே.

எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே! - ஆகவே நம்முள்ளே உள்ள ஒளிவடிவான ஈசன் எழுந்தருளத் திருப்பள்ளி எழுச்சி பாடுவோம் ஆக.

இன்னொரு பாடல். திருப்பள்ளி எழுச்சி மூன்றாம் பாடல். மிகவும் அழகான, இனிமையான பாடல். ஒரு விடிகாலைப் பொழுதை பைந்தமிழில் வருணித்துப் பாடிய பாடல்.
நாயகன் திரைப்படத்தில் 'செவ்வந்தி பூக்களில் செய்த வீடு' என்ற பாடல் தொடங்கு முன் ஒரு ஒற்றைக் குயிலின் பாட்டுச் சத்தமும் தொடர்ந்து புள்ளினங்களின் சத்தமும் மாணிக்கவாசகர் பாடிய திருப்பள்ளி எழுச்சிப் பாடல் 3 இன் முதல் நான்கு வரிகளும் ஒலிக்கும். அதைத் தொடர்ந்து 'செவ்வந்தி பூக்களில் செய்த வீடு, வெண்பஞ்சு மேகம் நீ கோலம் போடு' என்று பல்லவி வரும். கேட்க மிக இனிமையாக இருக்கும். பாடலைப் பாடியவர்கள் தீபன் சக்ரவர்த்தி மற்றும் உமா இரமணன். இசை, இசைஞானி இளையராசா. பாடலைக் கேட்கும் போது மெய் சிலிர்க்கும்!


'கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்..
யாவரும் அறிவறியாய்! எமக்கு எளியாய்!
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே'

இப்போது முழுப் பாடலையும் பார்ப்போம்.
கூவின பூங்குயில்கூவினகோழி
குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்
ஓவின தாரகை ஒளி ஒளி உதயத்து
ஒருப்படுகின்றது விருப்பொடு நமக்குத்
தேவநல் செறிகழல் தாள் இணை காட்டாய்
திருப்பெருந்துறையுறை சிவபெருமானே
யாவரும் அறிவு அரியாய் எமக்கு எளியாய்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே.

கூவின பூங்குயில் கூவின கோழி - அதிகாலை நேரம் குயில் கூவித் துயில் எழுப்பும், கோழிகள் கொக்கரக்கோ எனக் கூவும். அப்படித் திருப்பெருந்துறையிலும் குயில்கள் கூவ, கோழிகள் கூவ,
குருகுகள் இயம்பின இயம்பின சங்கம் - மற்றப் பறவைகளும், நாரைகளும் ஒலி எழுப்ப, கோயில்களிலும் வீடுகளிலும் 'எம்பெருமானின் வழிபாடலுக்கான சங்கங்கள் ஆர்ப்பரித்தன.
ஒருப்படுகின்றது விருப்பொடு நமக்குத் - விண்ணிலே விண்மீன்களின் ஒளி மங்கிக்கொண்டு விடி காலத்து அருணோதயத்தைத் தொடர்ந்து ஞாயிறு ஒளி பரவத் தொடங்குகிறது.
தேவநல் செறிகழல் தாள் இணை காட்டாய் - உன்னை எங்கள் அய்ம்பொறிகளாலும் அறிவாலும் மனத்தாலும் ஆழ்ந்து அநுபவிக்க முடியாது. அருள் அநுபவம் பெற்றாலே அநுபவித்து உணர முடியும். அத்தகைய அநுபவத்தை எங்களுக்குக் கொடுத்து எங்களை ஆட்கொண்டு அருள் புரிவாய்.
திருப்பெருந்துறையுறை சிவபெருமானே - திருப்பெருந்துறையில் உறையும் எங்கள் இறைவனே, சிவனே, எங்களின் இந்த பக்தியைக் கண்டு எங்கள் மேல் அன்பு பூண்டு எம்மை ஆட்கொள்ள உன் திருவடித் தாமரைகளை எங்களுக்குக் காட்ட மாட்டாயா?
யாவரும் அறிவு அரியாய் எமக்கு எளியாய் - அனைவராலும் அறிய முடியாதவனே, ஆனால் உன் அடியார்கள் மட்டுமே அறியக் கூடிய தன்மை கொண்டவனே,
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே! - ஆகவே நம்முள்ளே உள்ள ஒளிவடிவான இறைவன் எழுந்தருளத் திருப்பள்ளி எழுச்சி பாடுவோம் ஆக.

சைவ சமய இலக்கியங்களில் மாணிக்கவாசகர் பாடிய திருவாசகம், திருப்பள்ளி எழுச்சி போன்ற பக்திப் பாடல்களுக்கு தனி இடம் உண்டு. (வளரும்)●





கோவில் மாலைகள் மற்றும் பூஜை பொருட்கள்

5633 Finch Ave East, Unit # 6, Scarborough, ON M1B 5K9
(416) 288-1419

சொரி பூக்கள், சரம் மற்றும் பூஜைக்கு தேவைப்படும் இலை வகைகள்

| | | | |
|---|---|---|---|
| இறக்குமதி செய்யப்பட்ட கதம்ப சரம் | $ 2.00/ M | அறுகம் புல் | $ 3.00/bag |
| உள்ளூர் கர்னேஷன் சரம் | $ 2.00/M | வில்வம் இலை | $ 3.00/bag |
| மல்லிகைப்பூச்சரம் | $ 5.00/M | வேப்பிலை | $ 3.00/bag |
| கர்னேஷன் மலர்கள் | $ 0.20 each | Marukhalundu /Maru | $ 3.00 /bag |
| மல்லிகை மலர்கள் | $ 5.00/bag | மாவிலை | 10 per $ 1.00 |
| சம்பாகினி மலர்கள் | $ 3.00 /bag | வெற்றிலை | 10 per $ 1.00 |
| அரலி மலர்கள் | $ 3.00 /bag | வாழை இலை | $ 1.00 each |
| தாமரை மலர்கள் | $ 1.00 each | துளசி இலை | $ 3.00/bag |

Fancy Florist



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவுகள் பிரியும்போது மலைகளையே சுமக்கவேண்டிவருகிறது

உங்கள் உறவுகளின் இறுதியாத்திரையை முறையாகவும்,
இலகுவாகவும் அமைத்திட நாங்கள் உதவுகிறோம்



- மரண அறிவித்தல்கள்
  வீட்டிலிருந்த படியே விரும்பிய ஊடகங்கள் ஊடாக அறிவித்தல்களை வெளியிடவும்
- சமய சம்பந்தமான கிரியைகள் செய்பவர்களின் விபரங்களைப் பெற்றுக்கொள்ளவும்
- பூ அலங்காரங்கள், மாலைகள், பூப்பந்தல்களின் தெரிவுக்கும்
- விரும்பிய, பொருத்தமான Casket (மரணப்பேழை)களை பெற்றுக்கொள்ளவும்
- இணையத்தளத்தினூடாக நேரடி ஒளிபரப்புச் சேவையை பெற்றுக்கொள்ளவும்
- Slideshow உருவாக்கம் செய்யவும்
- உங்கள் கலாசார, பண்பாட்டு முறைப்படியே இறுதிச்சடங்குகளை ஒழுங்குசெய்வதற்கான ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளவும்
- உலகின் எப்பாகத்திலிருந்தும், எப்பாகத்திலும் Wreath (மலர்வளையம்) வைப்பதற்கான சேவையை பெற்றுக்கொள்ளவும்

MARANAM.COM

HEAVEN CARES

ADVISING FAMILIES ON YOUR LOVED ONE'S FINAL JOURNEY

www.maranam.com, E-Mail: info@maranam.com

Working With

Chapel Ridge

FUNERAL HOME INC.

PROVIDING PEACEFUL FINAL ARRANGEMENTS

8911 Woodbine Ave., Markham, ON L3R 5G1



Call: Vilosan Sivatharman B.Eng

Funeral Counsellor

416-431-3600 Ext:1

Call: Christeen Seevaratnam

Funeral Counsellor

416-431-3600 Ext:2






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களுக்குத் தெரியும்,
நம்பிக்கையுடனான தரமான சேவைகள்..

On high with your thoughts

PRO MAR Ltd.



- Corporate Awards
- Promotional Products
- Laser Engraving
- Pad Printing
- Silk Screening

*Vivek Subra*
Director
B:416- 291 2344
D:416- 898 4846
promarawards@gmail.com
www.promarawards.com 416-291 2344
585 Middlefield Rd Unit # 3, Scarborough, ON., M1V 4Y5

Put your logo on anything!

One stop for all your promotional needs.



PRO MAR Ltd.
416 898 4846
vivekpromar@gmail.com

வாங்குவதும் விற்பதும் சுலபமே ஆனால்..
தெளிவான தெரிவே உங்கள் வெற்றிப்படி.

***Why think so long...?***



- Free market evaluation
- Professional advice on selling your home for more
- State of the art marketing idea
- Flexible commission
- Friendly service producing excellent results
- List through me to have your property sold in a few days

Mortgages & loans arrangements


Vivek Subramaniam
Sales Representative
416-898 4846

**Homelife/Future**
Realty inc. Brokerage
7 Eastvale Drive, Unit 205, Markham, On. L3S 4N8
Bus: 905 201 9977, Fax: 905 201 9229
Independently Owned and Operated

# NKS Draperies & Blinds

210 Silver Star Road, Unit. 825
(Midland & Finch) Scarborough, ON
**416 321 6420**





- Vertical blinds
- Venetian blinds
- Draperies
- Curtains
- Shutters

உங்கள்
இல்லங்களை
மாளிகையாக்கிட

அழையுங்கள்
கேதா

தமது சிறப்பான சேவையினால்
தகுந்த விருதுகளைப் பெற்ற நிறுவனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ். கணேஷ்

# எது சிறந்த அதிரடி!!!

உலகில் விக்கெட் கீப்பர்கள் பேட்ஸ்மெனாக ஒரு அணியில் தடாலடி அடிப்பது என்பது சமீபத்திய விஷயம்தான். ராட் மார்ஷ், மேற்கிந்திய அணியின் டெரிக் முர்ரே, இங்கிலாந்தின் ஆலன் நாட், மேற்கிந்திய அணியின் ஜெஃப் டியூஜான் என்று பட்டியல் இருந்தாலும் இரட்டைச்சதம் என்பது சமீபத்திய நிகழ்வுதான்! கில்கிறிஸ்ட்டின் 204? அல்லது தோனியின் 224?.

ஆடம் கில்கிறிஸ்ட் வந்தபிறகே விக்கெட் கீப்பர் ஒருவர் இறங்கி கன்னாபின்னாவென்று அடிப்பது என்பது நிகழ்ந்தது. அதற்கு முன்னர் இலங்கை விக்கெட் கீப்பர் கலுவிதரன தனது முதல் டெஸ்ட் போட்டியிலேயே ஆஸ்திரேலியாவுக்கு எதிராக அதிரடி சதம் கண்டார். அவர் எடுத்த 130க்கு மேற்பட்ட ரன்களில் 80 ரன்கள் ஷேன் வார்னை மட்டுமே அடித்தார். ஆனால் அதன் பிறகு அவர் ஒருநாள் கிரிக்கெட்டில் அச்சமூட்டும் வீரராக இருந்தார். அதன் பிறகு காணாமல் போய் விட்டார்.

இந்த நிலையில் ஆடம் கில்கிறிஸ்ட் 2002ஆம் ஆண்டு ஜொகன்னஸ்பர்க் மைதானத்தில் அடித்த அதிரடி இரட்டைச் சதம் டெஸ்ட் வரலாற்றில் அதிவேக இரட்டைச் சதமாக சிறிது காலம் இருந்தது. பிறகு நேதன் ஆஸ்டில், சேவாக் அதனை முறியடித்தனர்.

சென்னையில் அன்று ஆஸ்திரேலியாவுக்கு எதிராக தோனி அடித்த இரட்டைச் சதமும் கில்கிறிஸ்டின் இன்னிங்சுடன் ஒப்பு நோக்கத்தக்க அதிரடி இன்னிங்ஸே.

முதலில் கில்கிறிஸ்ட்: ஆஸ்திரேலியா 293/5 என்று சற்றே வசதியாகத்தான் இருந்தது. அப்போது களமிறங்கினார் கில்லி. ஆலன் டோனல்ட், நிடினி, ஜாக் காலிஸ் பந்து வீச்சுகளை அன்று கில்கிறிஸ்ட் துவம்சம் செய்தது மிகப்பெரிய அதிர்ச்சியை தென் ஆப்பிரிக்க அணியினரிடையே ஏற்படுத்தியது. 19 பவுண்டரி 8 சிக்சர்களுடன் கில்கிறிஸ்ட் 204 பந்துகளில் 200 ரன்களை எட்டினார். பிறகு 204 எடுத்திருந்தபோது ஆஸ்திரேலியா 652/7 என்று டிக்ளேர் செய்தது. ஒருமுறை காலிஸ் கேட்சை விட்டார். ஆனால் தோனிக்கு லைஃப் இல்லை. கிளார்க் விட்டதெல்லாம் கேட்சில் சேர்த்தியில்லை.

அந்த இன்னிங்ஸில் கில்கிறிஸ்ட் ஒரு சிக்சரை அடித்தார் அது ஒரு பரிசுப் பலகைக்கு சற்று தள்ளிச் சென்றது. அந்தப் பரிசுப் பலகையை பந்து தொட்டிருந்தால் கில்கிறிஸ்ட் ஒரு தங்கக் கட்டியை பரிசாக வென்றிருப்பார்.

தோனியின் இன்னிங்ஸ் சற்றே கடினமான சூழ்நிலையில் வந்தது இந்தியா 196/4 என்று இருந்தது. தோனி வந்தது முதலே விளாசத் தொடங்கினார். ஸ்பின்னர் லயன், பேட்டின்சன், சிடில், புது முகம் ஹென்ட்ரிக்ஸ் என்று யாரையும் விட்டுவைக்காமல் அனாயாச அதிரடி பேட்டிங்கை வெளிப்படுத்தினார்.

தோனி 24 பவுண்டரிகள் 6 சிக்சர்கள் என்று துவம்சம் செய்தார். இந்த இரண்டு மகா இன்னிங்ஸ்களில் ஒற்றுமை என்னவெனில் ஆட்டம் இருதரப்பினருக்கும் சாதகமாக 50 50 என்று இருந்ததே. ஆனால் சென்னையில் தோனி ஆடிய பிட்ச் சற்றே கடினமானது. தோற்றிருக்கவேண்டிய நிலையிலிருந்து தோனி தனி மனிதனாக வெற்றிக்கு இட்டுச் சென்றார். கில்கிறிஸ்டும் அது போன்ற பல இன்னிங்ஸ்களை ஆடியுள்ளார்.

ஆனால் தோனிக்கு இப்போதுதான் அதிரடி முறை ஆரம்பமாகிறது. எனவே இது முடிவல்ல ஆரம்பம். கிரிக்கெட் வரலாற்றில் பல யுகங்களுக்கு இந்த கேட்ச் பேசப்படும்.

ஆஸ்திரேலிய தலைநகர் கான்பெராவில் நடைபெற்ற (Feb.06) 3வது ஒருநாள் போட்டியில் ஆஸ்திரேலியாவின் புதிய 'சென்சேஷன்', ஆல்ரவுண்டர் கிளென் மேக்ஸ்வெல் அடித்த ராட்சத சிக்சர் ஷாட்டை மேற்கிந்திய அணியின் அதிரடி மன்னன், ஐ.பி.எல். மும்பை இந்தியன் புகழ் கெய்ரன் போலார்ட் எம்பிப்பிடித்தது வர்ணைனைகளுக்கு அப்பாற்பட்டது. கிரிக்கெட் வரலாற்றில் பல யுகங்களுக்கு இந்த கேட்ச் பேசப்படும் என்று வர்ணனையாளர்கள் புகழ்ந்து தள்ளியுள்ளனர்.

ஐ.பி.எல். கிரிக்கெட்டில் அதிக தொகைக்கு எலம் போன மேக்ஸ்வெல், மேற்கிந்திய ஸ்பின்னர் சுனில் நரைன் வீசிய பந்தை ஸ்லாக் ஸ்வீப் செய்தார். பந்து பிடிக்க முடியாத உயரத்தில் நிச்சயமான சிக்சருக்குச் சென்று கொண்டிருந்தது.

எங்கிருந்தோ வந்தார் போலார்ட் பந்து தள்ளி கைக்கெட்டாத உயரத்தில் சென்று பவுண்டரியை கடக்க இருக்கும் சமயத்தில் ஒரு எம்பு எம்பினார். பாய்ந்தார். ஆனால் அது இரட்டை எம்புதலுக்குச் சமம். பந்தை ஒரு கையில் பிடித்தாரே பார்க்கவேண்டும். பிடித்தது பவுண்டரி அருகே. கயிறு அருகே உள்ளது. அப்படி ஒரு கேட்சை பிடித்து பவுண்டரிக் கயிறின் மீதோ, தாண்டியோ விழாமல் பவுண்டரிக்குள் விழுந்து கேட்ச் ஆக்கியது அவரது உடல் பேலன்ஸிற்கு ஒரு எடுத்துக் காட்டு.
மைதானத்தில் மேக்ஸ்வெல் உட்பட அனைவருக்கும் அதிர்ச்சி! இனிமேலும் சிறந்த கேட்ச்கள் பிடிக்கப்படலாம். ஆனால் இதுபோன்ற அதிர்ச்சிகரமான, நம்ப முடியாத கேட்சை பார்ப்பது அரிது. அதிலும் இந்தக் கேட்சை ரிபீட் செய்வது முடியாத காரியம்! அது மட்டுமல்ல இதே போட்டியில் இன்று மைக்கேல் கிளார்க்கிறி அவரது பந்து வீசில் அவரே பிடித்த கேட்சும் இந்த அதிசய பீல்டரின் ரிப்ளெக்ஸிற்கு ஒரு உதாரணம்.

அது மட்டுமல்ல கடைசியில் அதிரடி வீரர் பெய்லியை வீழ்த்தியதும் பொலார்டின் கேட்ச்தான்!●

Get more from your home by paying less each month

Ragavan (Raga) Ramanathan AMP
Mortgage Development Manager
Platinum Performer

Scotiabank

You're richer than you think.

Tel: 416.579.7533
Fax: 416.352.1464
Email: ragavan.ramanathan@scotiabank.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொந்தமான ஒரு வீடு
உங்கள் வாழ்க்கையின்
மிகப்பெரியதோர் முதலீடு

**வீடு வாங்க விற்க**



ஈசன் குலசேகரம்
Sales Representative
**416 835 1700**
info@esanhomes.com

- வீடுகள்
- தொடர்மாடி வீடுகள்
- வியாபார நிலையங்கள்
- காணி முதலீடுகள்
- வாங்குதல் - விற்றல் மற்றும்
- வாடகைக்கு கொடுக்கவும் - பெறுவதற்கும்

விக்கி வேலாயுதன்
Sales Representative
**416 457 7162**
vvelauthan@yahoo.com



RE/MAX
RE/MAX Vision Realty Inc., Brokerage

அனைத்துக்குமான ஆலோசனைகளுக்கும்
நம்பிக்கையான சேவைகளுக்கும் நாடுங்கள்..

**Office: 416-321-2228 Fax: 416-321-0002**

**www.esanhomes.com**

2210 Markham Road # 1 , Toronto, ON M1B5V6


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# R & S AUTO SALES

Top Quality Used Car Dealer

வங்கியால் உடமைப்படுத்தப்பட்ட

வாகனங்களை விற்பது எமது விசேட திறன்

**36 வருட அனுபவம்**



HONDA
TOYOTA
GM-MINI VANS

We Sell Bank Repossed Cars
Accident Vehicle Repair
Computerized Painting
Motor Vehicle Accident
Traffic Tickets



தமது சிறப்பான சேவையால் அதி உயர் விருது பெற்ற

Radha

**R & S Auto Sales Inc.**
**Radha Motor Inc.**

3030 Markham Road
Scarborough, ON

**416-412-3838**
**416-836-5825**




எஸ். காந்தி

# வெள்ளிப் பணம்

74

வெள்ளிப்பணத் தொடர் இம்முறையும் வருமானவரி தொடர்பான விடயமாக அமையும். சுயதொழில் செய்வோர் (self employed) களுக்கான செலவுகள் எவ்வகையானது, அவற்றில் எவ்வகையான செலவுகளைத் தமது வருமானவரிப் பத்திரம் பூர்த்தி செய்யும்பொழுது காட்ட முடியும் என்பன போன்ற விடயங்களைப் பார்க்கலாம்.

முதலாவதாக வியாபார நிறுவனங்களைப் பதிவுசெய்வதற்காக ஏற்பட்ட செலவுகள், சிலர் இதற்காக சட்ட ஆலோசனை பெற்றிருந்தால் அதற்கான செலவுகள் போன்றன உள்ளடங்குகின்றன.
அடுத்ததாக, உங்கள் வியாபார நிறுவனத்தை நடத்துவதற்கான ஒரு இடத்தை வாடகைக்கு எடுத்திருந்தால், அதற்கான வாடகைச் செலவு, சில வகையான தொழில்களுக்கு குறிப்பிட்ட இடம் தேவைப்படாமல், தமது வசிப்பிடத்தில் அதாவது தமது வீட்டில் ஒரு பகுதியை தமது அலுவலகமாகப் பாவிப்பவர்களும் உண்டு. இப்படியான சூழல் அவரவர் வியாபாரத்தின் தன்மையைப் பொறுத்தும் வேறுபட்டு அமையும். இவர்களும் இதற்கான செலவுகளை அதற்கான விகிதாசாரத்தில் கழித்துக் காட்ட முடியும்.

இன்னும் சிலர், தமது வியாபாரத்திற்காக மாத்திரம் ஒரு கடையையோ, அல்லது அலுவலகத்தையோ வாங்கும் சூழலில் அதற்கான ஈட்டுக்கடன் வட்டி, மற்றும் சொத்து வரி போன்றவற்றைச் செலவாகப் பதிவுசெய்ய முடியும்.

மோட்டார் வாகனச் செலவுகள், வியாபாரத்தின் தன்மைக்கு ஏற்ப முக்கியத்துவம் பெறுகிறது. உதாரணமாக, காப்புறுதி முகவர்கள், வீடு விற்பனை முகவர்கள் போன்றவர்களுக்கு மோட்டார் வாகனத்திற்கான செலவுகள் அதிகமாகக் காணப்படும். ஆனால், ஒரு உணவகம் நடத்துபவர்களுக்கு இதற்கான செலவு மட்டுப்படுத்தப்பட்டதாகவே அமையும். இதில் அவர்கள் வாகனத்தை குத்தகை (Lease) செய்திருந்தால் அதற்கான செலவுகள், அதற்கான பராமரிப்புச் செலவுகள், மற்றும் எரிபொருள் செலவுகள், காப்புறுதிக் கட்டணம் என்பன செலவாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. இதில், கொள்முதல் செய்யும் வாகனம் அல்லது குத்தகைக்கு எடுக்கும் வாகனத்தின் பெறுமதியிலும் சில கட்டுப்பாடுகள் உண்டு.

நீங்கள் உங்கள் நிறுவனத்தின் பல்வேறு வகைப்பட்ட இழப்புக்களை நிவர்த்தி செய்வதற்கான காப்புறுதி செய்திருந்தால் அவைகளும் ஏற்றுக்கொள்ளப்படும்.

உங்கள் நிறுவனம் வேலைக்கு ஆட்களைச் சேர்த்திருந்தால், அவர்களுக்கான கொடுப்பனவு, மற்றும் அது தொடர்பான செலவுகள், கணக்காளர்களுக்கான செலவுகள் என்பன உள்ளடங்குகின்றது.
அலுவலகத் தொலைபேசிக் கட்டணம், கைத்தொலைபேசிக் கட்டணம், வங்கிக் கணக்கின் சேவைக்கான கட்டணம், மற்றும் தொழில் நிறுவனத்தின் பெயரில் வைத்திருக்கும் கடனட்டைக்கான சேவைக் கட்டணம், தொழில் நிறுவனத்தின் பெயரில் வங்கிக்கடன் பெற்றிருந்தால், அவற்றிற்கான வட்டி என்பன செலவாக அமையும்.

மற்றும் கணினி, பேனை, பிறின்ரிங் பேப்பர் போன்ற செலவுகள், அலுவலகத்தில் ஏற்படும் ஏனைய செலவுகள். உணவுக்காக ஏற்பட்ட செலவுகள், மற்றும் வியாபாரத்தினை விரிவுபடுத்தும் நோக்கில் செய்யப்படும் கலைநிகழ்ச்சிக்கான செலவுகளில் 50 சதவீதத்தினைச் செலவாகக் கழித்துக் காட்ட முடியும். மற்றும் விளம்பரம் மேற்கொண்டதற்கான செலவுகள், பிரயாணச் செலவுகள், அறவிட முடியாத கடன்கள்.

மேலே கூறப்பட்ட செலவுகள் முக்கியமானதாகக் கூறப்பட்டாலும் வெவ்வேறுபட்ட வியாபார தொழில் முயற்சிக்கு ஏற்ப வெவ்வேறு விதமான செலவுகள் முக்கியத்துவம் பெறும்.

இதனைவிட எல்லாவற்றுக்கும் முக்கியமானது ஒவ்வொரு செலவும் ஏற்பட்டதற்கான ஆதாரமான பற்றுச்சீட்டுக்கள் (Receipt) முக்கியமானது. இது இல்லாமல், நீங்கள் பத்திரம் பூர்த்தி செய்பவர்களுக்கு சொல்லால் கூறுவது பொருத்தமற்ற விடயமாகும்.●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு குடையின் கீழ்
சகல தேவைகளும்

எஸ்.பி. இம்போட்டர்ஸ்
**S.P. Importers**





**Fresh Fish & Meat**
2853 Lawrence Ave. East
Scarborough
416 261 4737

**Furniture & Mattress**
2859-2861 Lawrence Av. E.
Scarborough
416 266 3077

**Grocery & Vegetables**
2863 Lawrence Ave. East
Scarborough
416 261 3881

**Video & Audio**
2865 Lawrence Ave. East
Scarborough
416 261 3881

## ஆர்ஜன்டீனாவிலிருந்து..

திருப்பலி முடிந்தவுடன், ஆலயத்திற்கு வெளியே வந்து சாதாரணமாக பொதுமக்களைச் சந்தித்து ஆசி வழங்கி சிறுவர்களுடன் உரையாடி மகிழ்ந்ததும், ஊடகவியலாளர் சந்திப்பில் மிக இயல்பாக தனது சொந்தக் கருத்துக்களை முன்வைத்து, சமூக அடிப்படைப் பிரச்சனைகள் பலவற்றைப் பற்றியும் உரையாடியமை என்று, திருச்சபையின் தலைவராகத் தெரிவான சில நாட்களிலேயே வத்திக்கானில் அக்கறை கொண்டோரை மகிழ்ச்சியுடன் கூடிய ஆச்சரியத்திற்கு உள்ளாக்கி வருகிறார்.

தனது பாப்பரசர் பெயராக, பிரான்சிஸ் என்பதைத் தெரிவு செய்துள்ளார். 12ம் நூற்றாண்டில் வாழ்ந்த பிரான்சிஸ்கு அசிசி அவர்கள், இத்தாலி நாட்டைச் சேர்ந்த புடைவைத்துறை கோடீஸ்வரர் ஒருவரின் மகன். மிக உயர்மட்ட, டாம்பீக, கோடீஸ்வர வாழ்க்கையைப் புறந்தள்ளிய பிரான்சிஸ், வீதியில் பிச்சை எடுப்போரிடம் சென்று, அவர்களோடு ஒருவராகப் பழகி, அவர்களுக்கு உதவ ஆரம்பித்தார். ஏழ்மையை விரும்பி ஏற்றுக்கொண்ட பிரான்சிஸ், துறவறத்தில் இணைந்து, ஏழ்மையை வாழ்ந்துகாட்டி, ஏழை எளியவரின் புனிதரானார்.

திருச்சபையில், பெண்களுக்கும் சமஅந்தஸ்துடன் கூடிய கத்தோலிக்க சபையொன்றை நிறுவவேண்டுமென்று போராடி, உத்தியோகபூர்வ அனுமதிபெற்று, புனித கிளாயா பெண்கள் சபையை (Order of St.Clare) நிறுவி, பாதிக்கப்பட்ட அல்லது நீதிமறுக்கப்பட்ட பெண்களுக்கு உதவ, ஒரு பெண்கள் சமூகசேவைக் குழுவை நியமித்து அரிய பணி செய்தார்.

பிரான்சிஸ் என்ற பெயரை இவர் தெரிவு செய்திருப்பது, ஏழ்மையை வெளிப்படுத்த மட்டுமன்றி, நீண்டகாலம் கோரப்படுகின்ற பெண்களுக்கான போதிய உள்வாங்கலையும் கத்தோலிக்க திருச்சபையில் அறிமுகம் செய்வார் என்ற மேலதிக எதிர்பார்ப்பும் பரவலாகக் காணப்படுகிறது.

நீண்டகாலம் அரும்பெரும் மக்கள் பணியாற்றிய மகத்தான இந்த அற்புதமான மனிதர், தனது 76 வயதில், இனி ஓய்வுபெறலாமே என்று எண்ணக்கூடிய களைப்புமிகுந்த வயதில், எல்லோரையும்விட கனதியும் கடினமும் கொண்ட பணியொன்று சுமத்தப்பட்டுள்ளது.●

**The Children's Education Trust of Canada**
offered to the public by

**Children's Education Funds Inc.**



10 டாலரிலிருந்து ஆரம்பித்து
7200 டாலர்கள் வரை
கனடா அரசாங்கம் வழங்கும்
நன்கொடையைப் பெற்று
(20 வீத Grant)
உங்கள் பிள்ளைகளதும்
பேரப்பிள்ளைகளதும்
கல்வி வாய்ப்பை
ஊக்குவியுங்கள்.

**சமூக நம்பிக்கையையும்
நன்மதிப்பையும் பெற்ற**

சிவா
கணபதிப்பிள்ளை
**அவர்களை அழைத்து
விபரங்களைப் பெறுக!**

Siva Kanapathypillai
Branch Manager

416 438 0660, 416 438 3578
416 899 6044
இல்லத் தொலைபேசி:
905 472 1139
email
s.kanapathypillai@cefi.ca



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

HERITAGE
Education Funds
**RESP**
**SAVINGS PLAN**
**கல்விச் சேமிப்புத் திட்டம்**

Your are eligible to apply for and Education Savings Grant of up to $7,200 per child

Your savings are more safe and secure

Your can start with a small amount

it's a more flexible plan

**EDUCATION IS A GREAT GIFT FOR YOUR FUTURE GENERATIONS**

உங்கள் பிள்ளைகளின் கல்விக்கான சேமிப்பு உங்கள் எதிர்கால தலைமுறைக்கான முதலீடு

WWW.KERUDAVIL.COM

**INCOME TAX PREPARATION**

Personal Income Tax
Small Business Income Tax
Computerized Returns

Graphic Land - 647. 219. 7576




S.Ganthiy
B.A. Srilanka
Enrollment Officer

**416. 841. 1866**
**416. 955. 9303**
E.mail: ganthiy@rogers.com

## நீத்தார் நினைவு

# எழுத்துலகில் நீண்டு பிரகாசித்த இரண்டு பத்திரிகையாளர்கள்

**ஈழத்து எழுத்துலகில் நன்கு பிரகாசித்து ஒளி பரப்பிய இரண்டு பத்திரிகையாளர்கள் கடந்த மாதம் மரணமான செய்தி அவர்களை அறிந்தவர்களுக்கும் சக பத்திரிகையாளர்களுக்கும் வேதனையைத் தருவது. எழுத்தாளர் சசிபாரதி, புலவர் பார்வதிநாதசிவம் ஆகியோரின் மறைவினை இங்கு ஆழந்த துயரத்தோடு பதிவு செய்கின்றோம்.**





'சசிபாரதி' என்ற பெயரில் குட்டிக் கதை மன்னனாகத் திகழ்ந்த சு. சபாரத்தினம் (82 வயது) கொழும்பு வீரகேசரியில் சில வருடங்கள் கடமையாற்றிய பின்னர், 1961ல் யாழ். ஈழநாடு பத்திரிகையில் இணைந்து அதன் வாரமலர் ஆசிரியராகக் கடமையாற்றியவர்.

1986ல் நான் முரசொலி தினசரி பத்திரிகையை யாழ்ப்பாணத்தில் பிரசுரிக்க ஆரம்பித்தபோது ஈழநாடு-விலிருந்து ஓய்வு பெற்றிருந்ததால் எனது அழைப்பை ஏற்று வந்து ஆசிரிய பீடத்தில் எம்மோடு பணியாற்றியவர்.

இவரது குட்டிக் கதைகளைத் தொகுத்து 'சசிபாரதி கதைகள்' என்ற பெயரில் நூலாக்கி வெளியிடும் அரிய வாய்ப்பையும் 1986 அக்டோபரில் எனக்கே தந்திருந்தார். இதுவே இவரது முதலாவது நூல். இதன் அரங்கேற்றம். யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் பெருவிழாவாக நடைபெற்றது.

யாழ். இலக்கிய வட்டத்தின் தலைவராகவும் பணியாற்றிய இவரது இறுதிச் சடங்கு கடந்த மாதம் 17ஆம் திகதி இந்தியாவின் திருச்சியில் இடம்பெற்றது.

தமிழீழத்தின் யாழ்ப்பாணத்தில் சில காலம் நோய்வாய்ப்பட்டிருந்த புலவர் ம. பார்வதிநாதசிவம் (76 வயது) புகழ்பூத்த புலவர் பரம்பரையைச் சேர்ந்தவர். புலவர் பார்வதிநாதசிவத்தின் புதல்வர்.

சில காலம் பாடசாலை ஆசிரியராகக் கடமையாற்றிய பின்னர் 1970களில் யாழ். ஈழநாடு பத்திரிகையில் இணைந்து அதன் ஞாயிறு பதிப்பில் உதவி ஆசிரியராகவிருந்தவர்.

பின்னர் அதிலிருந்து விலகியிருந்த வேளையில் அவரது வீடு சென்று அழைத்து வந்து முரசொலி வாரமலர் பிரிவில் இணைத்திருந்தேன். கவிதைகள், கட்டுரைகள் போன்றவற்றைத் தெரிந்து, திருத்தி வெளியிடும் பொறுப்பிலிருந்தார்.

இவரது கட்டுரைகளும் கவிதைகளுமாக இதுவரை ஐந்து நூல்கள் வெளிவந்துள்ளன. தமது பவள விழாவை இணுவிலில் 2010ஆம் ஆண்டில் கொண்டாடிய புலவரின் இறுதிச் சடங்கு கொக்குவிலில் கடந்த மாதம் ஆறாம் திகதி நடைபெற்றது.

- திரு எஸ். திருச்செல்வம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அர்ச்சனாஸ் & கோ

அனைத்துவகை பூஜைப்பொருட்களின் களஞ்சியம்

**பூஜைப்பொருட்கள், பூ, பூமாலைகள்,**
**மல்லிகைச்சரம், பரதநாட்டிய ஆடை ஆபரணங்கள்,**
HD Video & Photography, Tamil Movies,
கர்நாடக CDs, DVDs, Passport & ID Photo

*'உங்கள் இல்லந்தோறும் இறையருள் பெற'*

**416-292-0033 www.archanas.ca**

**2950 Kennedy Rd. Unit 10A Scarborough (One Block North of Finch)**

# SABESAN'S Choice



தனி மரத்தினாலான நிலம், நிலவிரிப்பு
சுவருடன் இணைந்த அலுமாரிக் கதவுகள்
யன்னல், கதவு புதுப்பித்தல்
ஆகிய வேலைகளில் தன்னிகரற்றவர்
"விருதுபெற்ற தொழிற்றுறை நிபுணர்"

**Laminate, Mirror, Panel, Closet Droos**
**Carpet, Hardwood, Tiles, Granite Flooring**
**Windows + Doors, Kitchen + Bath**
**Renovation or New!**




*Sabesan's Choice*

**416 605 1990**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

CGA

*THE NAME YOU NEED FOR YOUR BUSINESS*



Phone: 416-494-4777
Cell: 416-888-1128
Fax: 416-494-4050
E-mail: nimal@nlraccounting.com

**NIMAL VINAYAGAMOORTHY**

Certified General Accountant

2525 Pharmacy Ave. (Pharmacy & Finch), Toronto, Ontario M1W 2K2

# தமிழர் தகவல் இதழ்களைத் தபாலிலும் பெறலாம்

தமிழர் தகவல் மாத இதழ்களையும் பெப்ரவரி மாதத்தில் வெளிவரும் ஆண்டு மலரையும் தபாலில் பெற வசதிகள் செய்யப்பட்டுள்ளது. தபாற் கட்டணம் செலுத்தி இதனைப் பெற விரும்புபவர்கள் கீழுள்ள தொலைபேசி இலக்கத்தில் தங்கள் தொலைபேசி இலக்கத்தையும் பெயரையும் பதிவு செய்தால் தாமதமின்றித் தொடர்பு கொள்ளப்படும்.
அல்லது தஅமலைசனைநஒ½சயமபஅதஸைஒ.ஸஅ என்ற மின்னஞ்சலுக்கு விபரங்களை அனுப்பலாம்.

**416.920.9250**

ஓம்

# ஸ்ரீகௌரி மங்கள சேவை



அனைத்து இந்து மத கிரியைகளுக்கும்
கனடிய திருமண பதிவு அதிகாரி, இந்து மதகுரு

**சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமார குருக்கள்**

(ஐயாமணி) புங்குடுதீவு-10
ஸ்காபரோ ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலய பிரதம குரு

திருமணம், திருமணப் பதிவு
புதுமனை புகுதல்
கடை திறப்பு வைபவம்
புண்யாக வாசனம்
பூப்புனித நீராட்டு விழா
பூமாலை, ஆண்டாள் மாலை
சடை நாகம்
தலை நகை முழுவதும்
முத்து மணவறை
தலைப்பாகை
பந்தல் அலங்காரம்
கல்யாண பூசைப் பொருட்கள்
முத்துச் சப்பரம்
ஆலயத் திருவிழா
ஆலய வைபவங்கள்
ஆகிய அனைத்துக்கும்
எப்போதும் எம்முடன்
தொடர்பு கொள்ளுங்கள்

**416-266-3333**

628 E Birchmount Road
Scarborough, Ontario. M1K 1P9

ஸ்காபரோ ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலய தொலைபேசி இலக்கம் 416-291-8500



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைச்சிகளில் அதிக ஆபத்தானவை பதப்படுத்தப்பட்ட இறைச்சிகளே

நவயுக உணவுப் பழக்கத்தில் இறைச்சி முக்கிய இடம் வகிக்கிறது. அதிலும் இள வயதினருக்கு இறைச்சி இல்லாத உணவுகள் வாய்க்குத் தோதுப்படாது.

Bacon, sausage, and ham போன்ற பதப்படுத்தப்பட்ட இறைச்சிகளால் தங்கள் உணவுக் கோப்பைகளை நிறைத்துக் கொள்வார்கள்.

ஆனால் இறைச்சிகள் கூடாது, கொலஸ்டரோலை அதிகரிக்கும், மாரடைப்பு போன்ற இருதய நோய்களுக்கு வித்திடும் என மருத்துவர்கள் கூறுகிறார்கள்.

புறவையின் இறைச்சிகள் நல்லவை. ஆனால் ஆடு, மாடு, பன்றி போன்ற மிருக இறைச்சிகள் கூடாது என்பதே பொதுவான நம்பிக்கை. ஆய்வுகளும் அதையே சுட்டின. அதிலும் சிவத்த இறைச்சிகள் (red meat) கூடாது என்கிறார்கள்.

பொதுவாகக் கடும் நிறமுள்ள ஆடு, மாடு. குதிரை போன்றவற்றின் இறைச்சிகள் red meat எனப்படுகிறது. மாறாக கோழி, முயல் போன்றவை வெள்ளை இறைச்சி எனப்படுகின்றன. அண்மையில் இங்கிலாந்தில் செய்யப்பட்ட ஒரு ஆய்வின் பிரகாரம் பதப்படுத்தப்பட்ட இறைச்சி வகைகளே மாரடைப்பு மற்றும் மூளையில் இரத்தம் உறைதல் போன்றவற்றால் ஏற்படும் மரணங்களுக்கு முக்கிய காரணம் என்கிறது.

பொதுவாகக் கிடைக்கும் பதப்படுத்தப்பட்ட இறைச்சிகள் இவை. Canned meat, Cured meat, Ham, Lunch meat, Sausage, Bacon Gelatins, Fresh meat with additives.

நடுத்தர வயதினரிடையே செய்யப்பட்ட இந்த ஆய்வின் பிரகாரம் அதிகளவில் பதப்படுத்தப்பட்ட இறைச்சியை உண்பதனால் அவர்கள் அடுத்த 12 வருட காலத்தில் இறப்பதற்கான சாத்தியம் இரண்டு மடங்காக அதிகரிக்கிறதாம்.

அதேபோல புற்றுநோய்களால் இறப்பதற்கான சாத்தியமும் 43% சதவிகிதத்தால் அதிகரிக்கிறதாம்.

இவற்றிலிருந்து நாம் பெறக் கூடிய செய்தி என்ன? இறைச்சி வகைகளை உண்ணலாம். ஆனால் அளவோடு குறைந்த அளவில் உண்பதே நல்லது.
ஆனால் பதப்படுத்தப்பட்ட இறைச்சிகளை உண்பதைத் தவிர்ப்பதே நல்லது எனலாம். தினமும் உண்ண வேண்டாம். இடையிடையே உண்ணும்போதும் குறைந்த அளவே உண்பது உசிதமானது.

## ரொறன்ரோ பகுதிகளின் தொலைபேசி இணைப்புக்கு புதிய இரண்டு இலக்கங்கள்

ரொறன்ரோ நகரிலும் அதன் பெரும்பாகத்திலும் இரண்டு புதிய தொலைபேசி இணைப்பு இலக்கங்கள் (codes) கடந்த மாத இறுதியில் அறிமுகம் செய்யப்பட்டன. 416 இலக்கப் பாவனையிலுள்ள பகுதிகளில் 437 இலக்கமும், 905 இலக்கம் பாவனையிலுள்ள பகுதிகளில் 463 இலக்கமும் பாவனையில் வந்துள்ளது. செல்லிடத் தொலைபேசிகளின் பாவனை பெருமடங்காக அதிகரித்துள்ளதால், புதிய இணைப்பு இலக்கங்களை அறிமுகம் செய்யும் தேவையேற்பட்டது. புதிய தொலைபேசி விண்ணப்பதாரர்களே இந்தப் புதிய இணைப்பு இலக்கங்களைப் பெறுவர். 416 இலக்கப் பிரதேசங்களுக்கு தேவையேற்படும் காலத்தில் வழங்க 387 இலக்கமும் தயாராக வைக்கப்பட்டுள்ளது.


## வாகன காப்புறுதித் தொகை 15 வீதத்தால் குறைக்க ஆளும் லிபரல் இணக்கம்!

ஒன்ராறியோவை ஆட்சி புரியும் கத்லீன் வின்னின் புதிய லிபரல் அரசாங்கத்தை ஆதரிப்பதற்கு முக்கியமான ஒரு நிபந்தனையை அன்ட்றியா ஹோவர்த்தின் என். டி. பி விதித்திருந்தது. மாகாண வாகனக் காப்புறுதிக் கட்டணத்தை 15 வீதத்தால் குறைக்க வேண்டுமென்பதே இந்த நிபந்தனை. ஆரம்பத்தில் இதனை விரும்பாதிருந்த கத்லின் வின், தமது அரசாங்கம் வீழ்ச்சியடையாமல் தடுப்பதற்கு இயைவாக அந்த நிபந்தனையை இறுதியில் ஏற்றுக்கொண்டார். இதற்கான பிரேரணையை என். டி. பி முன்வைத்துள்ளது.

• Loans • Mortgages • Insurance Claims • Traffic Tickets •
JRB Universal Inc.
Almost All Services Available
647 289 6164

R.R. Rajkumar
B.Com (Hons), M.B.A.
Scholarship Plan [RESP]
Any Referral Service
• Credit Counseling • Accounting & Tax Services •


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# DR. ILLANGO & ASSOCIATES

## ORTHODONTICS, ORAL SURGERY, IMPLANT

Dental Office




**SCARBOROUGH**

3852 Finch Ave. East,
Suite 204 & 303
Scarborough, ON.
Tel: 416 292 7004


New Location

**BRAMPTON / MISSISSAUGA**

7920 Hurontario St.,
Unit 37
Brampton, ON
Tel: 905 457 1700


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISSN 1206-0585




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org